# காவல் நீதிக்கான குரல்

## Voices for Custodial Justice



# பரமக்குடி துப்பாக்கிச்சூடு - பொதுவிசாரணை அறிக்கை

11 செப்டம்பர் 2011 (சுருக்கக் குறிப்பு)

## முன்னுரை

இராமநாதபுரம் மாவட்டம் பல்வேறு சிறப்புத் தன்மைகளைக் கொண்டது. அதன் முக்கிய அமைவிடம், பழமை, சமூக அமைப்பு, விடுதலைப் போராட்டத்தில் அதன் பங்கு, சர்ச்சைக்குரிய சேது சமுத்திரத் திட்டம், இலங்கைக்கு அருகாமை, பல்லுயிர்ப் பெருக்கமுடைய மன்னார் வளைகுடா, சமயச் சிறப்பு மற்றும் சாதீய மோதல்கள் இம்மாவட்டத்தின் தனித்துவம் ஆகும். பல தனித்துவங்களுக்குள், ராமேஸ்வரமும் அதன் தனிச்சிறப்பும் குறிப்பிடத்தக்கவை. இதன் சமய முக்கியத்துவத்தினால் இது தெற்கின் காசி, எனப்படுகிறது.

இம்மாவட்டத்தில் தொன்று தொட்டு வாழ்பவர்கள் முக்குலத்தோர் எனப்படும் கள்ளர், மறவர், அகமுடையார் மற்றும் நாடார், செட்டியார், யாதவர் மற்றும் தலித்துகள் ஆவர். பிற்காலத்தில் முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களும் இம்மாவட்ட சமூக அமைப்பில் இணைந்தனர். சுதந்திரத்திற்குப் பின் உள்ள இம்மாவட்ட வரலாற்றில் அவ்வப்பொழுது நிகழ்ந்த சாதீயப் பிணக்குகளும், மோதல்களும் இடம் பெற்றன. 1957ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின் மிகப்பெரிய முதுகுளத்தூர் சாதிக்கலவரம் வெடித்தது. அதை சரிப்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பணிக்கர் கூட்டிய அமைதிப் பேச்சுவார்த்தையே பெரும் கலவரத்தின் துவக்கமானது. இதனைத் தொடர்ந்து அப்பேச்சு வார்த்தையில் தலித்துகளின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட இம்மானுவேல் சேகரன் கொலை செய்யப்பட்டார். அவர் தலித்துகளின் விடுதலைக்காக உயிர் நீத்த தியாகியாக கருதப்பட்டார். இவருடைய கொலைக்குப்பின் சாதிக் கலவரம் அம்மாவட்டத்தின் வழக்கமானது.

ஆதிக்க சாதியினரின் ஆதிக்க நிலைப்படுத்துதல், அதற்கு ஆட்சியாளர்களின் அங்கீகாரம், அதனைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகள் இயல்பாக எதிர் இயக்கம் தோன்றக் காரணமாயின, அதுமுதல் ஒவ்வொரு ஆண்டும் தேவர் குருபூசை அரசின் அங்கீகாரத்துடன் மற்றும் இம்மானுவேல் சேகரனின் குரு பூஜைகளின்போது ஏற்படும் பதட்டமும் மோதல்களும் அம்மாவட்டத்தின் அமைதியைக் குலைத்தன. தியாகி இம்மானுவேல் சேகரனின் உருவம் பொரித்த தபால்தலையை மத்திய அரசு வெளியிட்ட நிகழ்வும் தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் தியாகி இமானுவேல் சேகரனின் குரு பூஜை அரசு விழாவாக அறிவிக்கப்படும் என்ற அ.இ.அ.தி.மு.கவின் உறுதி மொழியும் தலித்துகளிடையே மிகுந்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பினையும் ஏற்படுத்தியது. அதுமுதல் ஆண்டுக்கு ஆண்டு இமானுவேல் சேகரனின் குரு பூஜையில் கலந்து கொள்வோரின் எண்ணிக்கை பெருகிய வண்ணம் இருந்தது.

இராமநாதபுரம் மாவட்டத்தின் பட்டியலின சாதியினரான தலித்துகள் தீண்டாமை, பண்ணை அடிமைமுறை மற்றும் பல்வேறு வகையான சாதியக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு காலங்காலமாக அடிமைகளைப் போல் நடத்தப்பட்டார்கள். அவர்கள் நில உடமையின்றி விவசாயக் கூலிகளாக அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டு பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து தமிழகம் உட்பட தேசம் முழுவதும் பட்டியலின சமூகத்தினர் தங்ளுக்கு எதிரான வன்கொடுமைகள் மற்றும் தீண்டாமைக்கு எதிராக போராடி வந்துள்ளனர். அதன் விளைவாகவே தாழ்த்தப்பட்ட சமூகத்தவரை அவர்களின் நிலையிலேயே வைப்பதற்காகவே அவர்கள் மீது தொடர் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன.

தேசிய விடுதலை இயக்கச் சிந்தனைகளாலும் குறிப்பாக டாக்டர் அம்பேத்கரின் கருத்துக்களாலும் வடிவமைக்கப்பட்ட இந்திய அரசியலமைப்பு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியினரை அநீதிகளிலிருந்தும், சுரண்டல்களிலிருந்தும் அத்துமீறல்களிலிருந்தும் காப்பதற்கு அவர்களின் கல்வி, பொருளாதாரம், சமூக நிலை ஆகியவற்றின் மேம்பாட்டிற்காகச் செயல்படவும் அதிகாரங்களை வழங்கியது. அரசியலமைப்பின் பல்வேறு சரத்துக்களில் இந்த கொள்கைகளை நிறைவேற்றவும் சமூக நீதி மற்றும் சமத்துவ சமுதாயம் படைக்க வேண்டுமென்ற அரசியலமைப்பின் இலக்கினை அடைவதற்கான வழிமுறைகளும் சேர்க்கப்பட்டன.

அரசியலமைப்பின் அங்கீகாரம் இருந்தபோதும் தமிழக அரசும் இந்திய அரசும் அரசியலமைப்பின் வழிகாட்டுதல்களையும் வேண்டிய இலக்கினை அடைவதிலும் தோல்வியே கண்டு வருகின்றன. எனினும் அரசியலைமைப்பு உத்தரவாதப்படுத்திய கல்வியறிவால், விடுதலை வேட்கையும், விழிப்புணர்வும் பெற்ற தலித்துகள் அவ்வப் பகுதிகளில் உள்ள பெரு நிலச்சுவாந்தார்களின் பிடியிலிருந்து விடுபட்டு அரசிலயமைப்பின்படி தங்களது உரிமைகளை நிலைநாட்டவும் சட்டத்திற்குப் புறம்பான வன்கொடுமைகளிலிருந்து விடுபடவும் அணி திரண்டனர்.

தாழ்த்தப்பட்டவர்களின் நலனைக் கருதாத பலவீனமான அரசுகளின் செயல்பாடுகள், தமிழக அரசு உட்பட, தாழ்த்தப்பட்டவர்களைக் கொடுமை செய்து வந்த ஆதிக்க சாதியினருக்கு ஊக்கமளிப்பதாகவே அமைந்தன. குடி உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955 மற்றும் SC மற்றும் ST வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989 ஆகியவை கூட இவ்வரசுகளால் முழுமையாக அமல்படுத்தப்பட முடியவில்லை. இந்த அரசுகளின் செயலின்மை தாழ்த்தப்பட்டவர்களை அடக்கி ஒடுக்கி தீண்டாமையின் பல்வேறு வடிவங்களைத் தொடர்ந்து செயல்படுத்த விரும்பிய ஆதிக்க சாதியினருக்கு வாய்ப்பாக அமைந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து தமிழகத்தில் நிகழ்ந்த துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள் தலித்துகளின் நிலைமையை வெளிப்படுத்துகின்றன. இப்பகுதியில் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே தாழ்த்தப்பட்டவர்கள் மீதான ஒடுக்குமுறை, தீண்டாமை அதனால் எழுந்த சாதீய மோதல்களின் நீண்ட வரலாற்றை தொடர்ந்து கண்காணிப்போர் அறிவர்.

## பரமக்குடி துப்பாக்கிச்சூடு எதிர்ப்பு நடவடிக்கைக் குழு தொடர் நடவடிக்கை அறிக்கை

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தியாகி இம்மானுவேல் சேகரன் நினைவிடத்தில் ஆண்டுதோறும் செப்டம்பர் –11 அன்று ஒடுக்கப்பட்ட மக்கள் குறிப்பாக பள்ளர் சமூக மக்கள் லட்சக் கணக்கில் ஒன்று கூடி அஞ்சலி செலுத்தி வருவது வழக்கம்.

## தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்களின் நினைவு நாள் பின்னணி

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகா, செல்லூர் கிராமத்தைச் சேர்ந்த தேவேந்திர குல சமூகத்தில் பிறந்த தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்தமைக்காக ஆதிக்க சாதியினரால் 10.09.1957 அன்று கொடூரமான முறையில் பரமக்குடி நகரில் படுகொலை செய்யப்பட்டார். தியாகி இம்மானுவேல் சேகரனின் தியாகத்தை போற்றும் வகையில் தலித் மக்கள் மட்டுமல்லாமல் பிற சமூகத்தினரும் அவரது நினைவுநாளான செப்டம்பர் 11– அன்று நினைவிடத்தில் தொடர்ந்து நினைவஞ்சலி செலுத்தி வருகின்றனர். இந்நிலையில் 2007ஆம் ஆண்டு அவரது 50வது நினைவு நாளில் தேவேந்திர சமூக அமைப்புகள் மட்டுமல்லாது மற்ற அமைப்புகளும் எழுச்சியுடன் அவரது நினைவிடத்தில் கூடி அஞ்சலி செலுத்தினர். ஒவ்வொரு வருடமும் நடைபெறும் அவரது நினைவஞ்சலியில் அனைத்து அரசியல் கட்சியினரும் கலந்து கொள்கின்றனர். அவரது நினைவு நாளை தமிழக அரசு, அரசு விழாவாக அறிவிக்காவிட்டாலும், அவ்விழா காவல்துறை மற்றும் வருவாய் துறையினரின் முழு பங்கேற்புடன்தான் நடைபெற்று வந்துள்ளது.

இந்நிலையில் 2010 செப்டம்பர் 11 அன்று நடைபெற்ற தியாகி இம்மானுவேல் சேகரனின் குரு பூஜை விழாவில் கலந்து கொண்ட அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் “அம்மா ஆட்சிக்கு வந்தவுடன் தியாகி இம்மானுவேல் சேகரனின் நினைவுநாளை அரசு விழாவாக அறிவிக்கப்படும்” என உறுதியளித்தார். அதனைத் தொடர்ந்து 9.10.2010 அன்று மத்திய அரசு தலித் அமைப்புகளின் கோரிக்கையை ஏற்று தியாகி இம்மானுவேல் சேகரனுக்கு தபால்தலையை வெளியிட்டு சிறப்பு செய்தது.

## தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்களின் 54 வது நினைவஞ்சலி

மேற்கண்ட காரணங்களால் தியாகி இம்மானுவேல் அவர்களின் பெயர் தமிழகம் தாண்டியும் முக்கியத்துவம் பெற்றுவிட்டது மட்டுமில்லாமல், தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்களின் நினைவு நாள் படிப்படியாக அரசியல் முக்கியத்துவம் பெற்று பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் ஜாதியை கடந்து இந்நினைவு நாளை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று வெளிப்படையாகக் கோரிக்கை விடுக்கத் தொடங்கினர். தலித் இயக்கங்களும், 2011–ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள நினைவு நாளை அரசு விழாவாகக் அறிவிக்க வேண்டும் என்று முதல்வர் மாண்புமிகு ஜெயலலிதா அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை வைத்துள்ளனர்.

## “தெய்வத் திருமகனார்” என்ற பெயரை பயன்படுத்தத் தடை

சமீபத்தில் வெளியான தெய்வத்திருமகள் என்ற திரைப்படத்தில் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த நடிகர் விக்ரம் அவர்கள் நடித்தார் என்ற காரணத்திற்காக தேவர் சமூகத்தினர் தெய்வத்திருமகன் என்ற பெயரை வைக்க கூடாது என்று மிரட்டவே அதற்கு பயந்து பட தயாரிப்பாளர் தெய்வத்திருமகள் என பெயரை மாற்றி திரையிட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மத்திய அரசு தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்களின் தபால்தலையை வெளியிட்டு தேசிய அந்தஸ்து கொடுத்ததினால் 2011–ல் நடைபெற்ற தியாகியின் நினைவஞ்சலி விழாவிற்கு தேவேந்திர மக்கள் வைத்த தட்டி பலகையில் தேசிய தலைவர் தெய்வத்திருமகனார் தியாகி இம்மானுவேல் சேகரனின் 54 வது குரு பூஜை என வாசகம் எழுதியுள்ளனர்.

தேசிய தலைவர் தெய்வதிருமகன் என்ற அடைமொழி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைக் குறிப்பதாகச் சொல்லி, அப்பெயரை தியாகி இம்மானுவேல் சேகரனுக்குப் பயன்படுத்தக் கூடாது என பரமக்குடியில் உள்ள மறத்தமிழர் சேனை என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் பரமக்குடி நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர்.

மேற்படி புகாரின் அடிப்படையில் 07.09.2011 அன்று காவல் துணைக் கண்காணிப்பாளர் கணேசன், ஆய்வாளர் சிவக்குமார் ஆகியோர் மேற்கண்ட பிரபாகரன் தரப்பினரையும், தியாகி இம்மானுவேல் பேரவையின் பொதுச்செயலாளர் தோழர் பூ. சந்திரபோஸ் மற்றும் தேவேந்திர குல பண்பாட்டுக் கழகத்தினர் சிலரையும் பரமக்குடி நகர் காவல் நிலையத்திற்கு அழைத்து அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். காவல் துணைக் கண்காணிப்பாளர் கணேசன் தேவேந்திர சமூகத்தினர் டிஜிட்டல் போர்டு அடித்தால் காவல் துறைக்குத் தெரியாமல் அடிக்கக் கூடாது என உத்தரவிட்டும், எங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை என்றால் பின்னால் வருத்தப்பட வேண்டியிருக்கும் என மிரட்டும் வகையில் பேசியுள்ளார்.

பின்னர் காவல்துறையினர் உள்ளூர் அச்சகம் மற்றும் பிரிண்டிங் உரிமையாளர்களிடம் மேலே குறிப்பிட்ட வாசகங்களை அச்சிடக்கூடாது எனவும் மிரட்டியுள்ளனர். அதனால் உள்ளூர் அச்சகத்தினர் அச்சிட்டு கொடுக்க மறுத்துவிட்டதால் தேவேந்திர சமூகத்தைச் சேர்ந்த சிலர் வெளி மாவட்டங்களில் அதே வாசகங்களை கொண்ட பிளக்ஸ் மற்றும் போஸ்டர்களை அச்சிட்டு பரமக்குடியில் கொண்டு வந்து ஒட்டியுள்ளனர்.

## பரமக்குடியில் காவல்துறை துப்பாக்கிச்சூடு

இந்நிலையில் சற்றும் எதிர்பாராத நிலையில் அடையாறு காவல்துறை துணை ஆணையர் செந்தில்வேலன், பரமக்குடி டி.எஸ்.பி. கணேசன், பரமக்குடி காவல் ஆய்வாளர் சிவக்குமார் ஆகியோருக்கு தடியடி நடத்த உத்தரவிடவே ரோட்டில் உட்கார்ந்து இருந்தவர்கள் மட்டுமல்லாது வேடிக்கை பார்த்தவர்களையும், ரோட்டில் நடமாடிக் கொண்டிருந்தவர்களையும் காவலர்கள் விரட்டி விரட்டி அடித்துள்ளனர். அப்போது வருவாய் கோட்டாசியர், வட்டாசியர் மற்றும் வருவாய் அதிகாரிகள் சம்பவ இடத்தில் இருந்துள்ளனர். அடுத்த 5 நிமிடத்திலேயே எவ்வித முன்னெச்சரிக்கையுமின்றி காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்கள். மேற்படி துப்பாக்கிச் சூட்டில் சம்பவ இடத்திலேயே ஜெயபாலன், பன்னீர் செல்வம், கணேசன் ஆகிய மூவரும் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். துப்பாக்கிச் சூட்டில் கீழே விழுந்த நபர்களை காவல்துறையினர் கும்பலாக சேர்ந்து கொண்டு அவர்கள் வைத்திருந்த துப்பாக்கியைப் பின்புறமாகத் திருப்பிக் குத்தியும், பூட்சு கால்களால் மிதித்தும் சித்திரவதை செய்து கொலை செய்துள்ளனர். மேலும் 80க்கும் மேற்பட்டோர் கொடுங்காயங்கள் ஏற்பட்டு கொடூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## சிந்தாமணியில் துப்பாக்கிச்சூடு

இந்நிலையில் 11.09.11 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே உள்ள பாட்டம் கிராமத்தில் இருந்து தேவேந்திர சமூக மக்கள் சுமார் 100 பேர் லாரி மூலம் தியாகி இம்மானுவேல் சேகரரின் நினைவுநாளில் கலந்து கொள்ள ரிங் ரோடு வழியாக சென்றபோது அப்பகுதியில் பாதுகாப்பு பணியில் இருந்த அவனியாபுரம் சார்பு ஆய்வாளர் சண்முகம் தனது முன்விரோதத்தின் காரணமாக அவனியாபுரம் காவல் நிலைய ஆய்வாளர் கஜேந்திரன் அவர்களுக்கு தவறான தகவல்களைக் கொடுத்ததின் அடிப்படையில் ஆய்வாளர் கஜேந்திரன் எவ்வித முன்னறிவிப்பும் செய்யாமல் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பாட்டம் கிராமத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் த/பெ. ராமர், ஜெயப்பிரசாத் த/பெ. தனபால் ஆகியோர் மீது துப்பாக்கிக் குண்டுகள் துளைத்து படுகாயம் அடைந்துள்ளனர். இவர்களை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அவசரப் பிரிவில் சேர்த்து சிகிச்சையளித்துள்ளனர்.

## இளையான்குடியில் காவல்துறை தடியடி, துப்பாக்கிச்சூடு

பரமக்குடியில் நடந்த சம்பவத்தை அறிந்து அன்று மாலை சுமார் 5 மணியளவில் இளையான்குடி சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள தேவேந்திர குல மக்கள் சுமார் 25 நபர்கள் இளையான்குடி காவல் நிலையத்தை முற்றுகையிட முயன்ற போது அங்கும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இளையான்குடி அருகே உள்ள காரைக்குடி கிராமத்தைச் சேர்ந்த ராமச்சந்திரன் என்பவரது மகன் ஆனந்த், பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவன், டியூசனுக்கு சென்று விட்டு திரும்பிக் கொண்டிருக்கும் போது, சிவகங்கை டி.எஸ்.பி. இளங்கோவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் குண்டு துளைக்கப்பட்டு மயக்கமாகி கீழே விழுந்துள்ளார். இளையான்குடியிலும் துப்பாக்கிச்சூட்டினாலும், தடியடியினாலும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## பரமக்குடி துப்பாக்கிச் சூடு எதிர்ப்பு நடவடிக்கைக் குழு உருவாக்கம்

இச்சம்பவத்தையொட்டி பல்வேறு மனித உரிமை அமைப்புகள், இயக்கங்கள், கட்சிகள் ஆகியோர் களஆய்வு செய்தனர். அவ்வாறு களஆய்வு செய்த அமைப்புகள் ஒன்று சேர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கைக்காக 15.10.2011 அன்று பரமக்குடி தேவேந்திர பண்பாட்டு திருமணமண்டபத்தில் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று நடத்தியது. இக்கூட்டத்தில் தியாகி இம்மானுவேல் பேரவை, தேவேந்திரர் பண்பாட்டுக் கழகம், மள்ளர் கழகம், மத்திய மாநில SC/ST அரசு ஊழியர் சங்கம், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், ஒடுக்கப்பட்டோர் விடுதலை முன்னணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா–லெ) மக்கள் விடுதலை, தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி, தாத்தா இரட்டை மலை சீனிவாசனார் பேரவை, மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கம், பொன்னையாபுரம் மகளிர் மன்றங்கள், தலித் உரிமைக்கான கூட்டமைப்பு, அருந்ததியர் மனித உரிமை

அமைப்பு, மத்திய மாநில SC/ST அரசு ஊழியர் (Tasmac) சங்கம், தலித் பவுண்டேசன், தலித் தோழமை மையம், தலித் உரிமைக்கான தேசிய பிரச்சாரம் – டெல்லி, சகோதரர் மறுமலர்ச்சி நலச்சங்கம் – சென்னை, மக்கள் கண்காணிப்பகம் போன்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்நிலையில்தான் பரமக்குடி துப்பாக்கிச் சூட்டில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதியும், நியாயமும் கிடைப்பதற்காக இக்கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து அமைப்புகளையும் ஒருங்கிணைத்து 'பரமக்குடி துப்பாக்கிச்சூடு எதிர்ப்பு நடவடிக்கைக் குழு' என்ற குழு உருவாக்கப்பட்டது. இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக தியாகி இமானுவேல் பேரவையின் பொதுச்செயலாளர் திரு.பூ.சந்திரபோசு தேர்ந்தெடுக்கபட்டார்.

## சம்பத் கமிஷன் குறித்த திட்டமிடல்

பரமக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தை விசாரணை நடத்துவதற்காக தமிழக அரசு முன்னாள் நீதியரசர் திரு. கே. சம்பத் தலைமையில் ஒரு நபர் விசாரணைக்கு உத்தரவிட்டது. அதன் அடிப்படையில் 16.10.2011 அன்று நீதியரசர் திரு. கே. சம்பத் பரமக்குடி துப்பாக்கிச்சூடு நடந்த பகுதிகளுக்கு வருவது குறித்து இக்கூட்டத்தில் கலந்து பேசப்பட்டது. அக்கூட்டத்தில் 1952ஆம் ஆண்டு விசாரணை ஆணையங்களின் சட்டத்தின்படி நீதியரசர் சம்பத்தின் விசாரணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. அவர்களின் விசாரணை அதிகார எல்லையாக பரமக்குடிச் சம்பவத்தை மட்டுமே வரையறை செய்துள்ளது. மற்ற இரு துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் குறித்தோ, ஜான்பாண்டியனின் கைது குறித்தோ விசாரிப்பதற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. தேசிய மனித உரிமை ஆணையம் சட்டரீதியாக ஆணையமாக இருந்து விசாரிப்பதற்கும் பரிந்துரை செய்வதற்கும் அதிகாரம் இருக்கும் பொழுது 1952ஆம் ஆண்டு விசாரணை ஆணையைப் பயன்படுத்தாமல் மனித உரிமை பாதுகாப்பின் சட்டத்தின் படி உருவாக்கப்பட்ட தேசிய மனித உரிமை ஆணையம் விசாரிக்க தமிழக அரசு வழிவகை செய்ய வேண்டும் என கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

துப்பாக்கிச்சூடு சம்பவம் தமிழக அரசே திட்டமிட்டு நடத்தியதாகக் கருதினர். எனவே, துப்பாக்கிச்சூடு சம்பவத்தை சி. பி. ஐ.(CBI) விசாரணைக்கு உத்தரவிடவேண்டும் என்ற முடிவுகள் எடுக்கப்பட்டன.

## பொதுவிசாரணை குறித்த திட்டமிடல்

பரமக்குடி துப்பாக்கிச்சூடு எதிர்ப்பு நடவடிக்கை குழு சார்பில் முன்னாள் நீதியரசர் திரு. H. சுரேஷ் (மும்பை) அவர்கள் தலைமையில் அக்டோபர் 22, 23 தேதிகளில் பொதுவிசாரணை நடத்தலாம் என திட்டமிடப்பட்டது. அதனடிப்படையில் அரசே விசாரணைக்குழு ஒன்றை நியமித்து விசாரணை செய்ததால் Public Hearing என நடத்தாமல் Public Inquest ஆக நடத்தலாம் என அரசு அதிகாரிகளை நேரடியாக சென்று இக்குழு சந்தித்து விசாரணை நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. பொது விசாரணைக்கான நடுவர்களை தேர்வு செய்து அழைத்துவரும் பொறுப்பு மக்கள் கண்காணிப்பகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## பொதுவிசாரணையின் முறைமை நிலை

இங்கு அவசியம் குறிப்பிடப்படவேண்டிய செய்தி என்னவெனில் சம்பவத்தின் போது பரமக்குடி நகர் காவல் நிலைய காவல்துறை ஆய்வாளர் (தற்போது சிவகங்கைக்கு மாற்றப்பட்டுள்ளார்) திரு. சிவக்குமார், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் இவ்விசாரணையின் செயல்பாடுகளைத் தடை செய்ய வேண்டி விண்ணப்பித்த W.P. No. WP (MD) No. 12208 if 2011 என்ற எண்ணுள்ள ரிட் மனுவாகும்.

நீதியரசர் ராமசுப்பிரமணியம் அந்த ரிட் மனுவைத் தள்ளுபடி செய்தார். அவர் தன்னார்வக்குழுக்கள் உண்மையறியும் முயற்சிகளில் ஈடுபடுவதையும் வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களிடம் விசாரணை மேற்கொள்வதையும் தடுக்கமுடியாது என்றும் அது அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள விசாரணைக்குழுவிற்கு இணையானது அல்ல என்றும் அரசு நியமித்துள்ள விசாரணைக் குழு செயல்பட்டுவரும் நிலையில் இவர்களின் இம்முயற்சி நீதிக்கெதிரானது அல்ல என்றும் தம்முடைய தள்ளுபடி ஆணையில் குறிப்பிட்டிருந்தார்.

நீதியரசர் ராமசுப்பிரமணியம் அவரது ஆணையில் பொது விசாரணைக்கு முழு அங்கீகாரம் அளித்தார். ''கடந்த பல ஆண்டுகளில் சட்டமானது அதன் கூட்டுக்குள்ளிருந்து தொலைதூரம் பயணித்துவிட்டது. முன்பு குற்றவியல் சட்டத்தின்படி நிலைய அதிகாரி புலன் விசாரணை செய்து வந்தார். இன்று சட்டமானது பல தரப்பிலும் விசாரணைகளையும், உண்மையறியும் முயற்சிகளையும் அங்கீகரித்துள்ளது. இவைத்தவிர சிறப்புப் புலன் விசாரணைக் குழுக்களும் நீதிமன்றத்திற்கு அறிக்கையளிப்பதற்காக அமைக்கப்பட்டுவரும் சூழல் எழுந்துள்ளது'' என்று குறிப்பிட்டார். அவர் மேலும் ''சர்வதேச அமைப்புகள் கூட மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனைகளில் மோதல்களை தவிர்த்து அமைதியை நிலைநாட்டுவதற்காக தற்காலிக உண்மையறியும் குழுக்களை அமைத்து வருகின்றன. இரண்டாம் உலகப்போருக்குப் பின் மனித உரிமைகளை மீறுபவர்கள், படுகொலைகளுக்குக் காரணமாகணவர்கள் ஆகியோரையும் மனித குலத்திற்கு எதிரானவர்களையும் கட்டுப்படுத்தவும், உள்ளூர் நீதிமன்றங்களுக்கு வழிகாட்ட உதவவும் தன் அதிகார வரம்புகளை விரிந்து வருகிறது'' என்று குறிப்பிட்டார். ஆயுதம் தாங்கிய மோதல்கள் நடந்த

பால்கனிலும், கொசாவோ, போஸ்னியா, கிழக்கு திமோர், சியரா லியான், கம்போடியா மற்றும் லெபனான் போன்ற இடங்களில் ஐ.நாவின் அங்கமான ஹேக் நகரில் இயங்கும் பன்னாட்டு நீதிமன்றம் பன்னாட்டு குற்றவியல் தீர்ப்பாயம் அமைத்து விசாரணை செய்ததையும் மாண்புமிகு நீதியரசர் சுட்டிக்காட்டினார். உலக அளவிலான தொண்டு நிறுவனங்களான அம்னஸ்டி இண்டர்நேசனல் அமைப்புக்கூட உண்மையறியும் முயற்சிகளில் ஈடுபட்டதைச் சுட்டிக்காட்டினார். 1967ஆம் ஆண்டில் ஐ.நா.வின் மனித உரிமை ஆணையம் உண்மையறியும் குழுக்கள் அமைத்த நிகழ்வுகளையும் குறிப்பிட்டுக் காட்டினார். குஜராத் கலவரங்களுக்குப் பிறகு (2002) இந்திய பத்திரிக்கையாளர் தணிக்கை குழுமம் உண்மையறியும் குழுவாக குஜராத்திற்கு சென்ற நிகழ்வினையும் குறிப்பிட்டார். ஆகவே "ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம் இணையான விசாரணையை மேற்கொள்ள முடியாது" என்ற வாதத்தினை நீதியரசர் நிராகரித்தார். எனினும் அவ்விசாரணைகளின் முடிவுகள் பத்திரிக்கைகளில் வெளியிடப்படும் அறிக்கைகள் ஆகியவை எந்த ஒரு நீதிமன்றத்தையோ அரசாங்கத்தையோ கட்டுப்படுத்த முடியாது என்பதையும் குறிப்பிட்டார்.

**1995ம் ஆண்டுகளில் கொடியன்குளம், ஆலந்தா மற்றும் 1994ம் ஆண்டு காசிலிங்கபுரம் கலவரங்கள் அரசின் இந்நிலையினை வெளிப்படுத்துவதாகவே அமைந்தது. இந்நிகழ்வுகளில் காவல் துறையின் அதிகாரங்கள் தலித்துக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டு துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. அரசியலமைப்பைச் சார்ந்து தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் தலித்துகளுக்கு எதிராகவே அரசின் நடவடிக்கைகள் இருந்தது.**

### செயல்முறை

பொதுவிசாரணைக் குழு அக்டோபர் 22 மற்றும் 23, 2011ஆம் தேதிகளில் பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பார்வையாளர்கள், தலைவர்கள் மற்றும் தொடர்புடைய பலர் உட்பட 61 சாட்சிகளை விசாரணை செய்தது. மேலும் நடுவர்கள் கீழ்க்கண்ட அரசு அலுவலர்களையும் சந்தித்தனர்.

1. திரு. V. அருண்ராய், IAS, மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம்.
2. திரு. U. சகாயம், IAS, மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை.
3. திரு. ராஜேஷ்தாஸ், IPS, காவல்துறைத் தலைவர், தென்மண்டலம்.
4. திரு. அஸ்ரா கார்க், IPS, மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மதுரை.
5. Dr. K.A செந்தில்வேலன், IPS, துணை ஆணையாளர், அடையாறு, சென்னை. (11.09.2011 அன்று பரமக்குடியில் மாற்று பணியமர்த்தப்பட்டவர்)

### பொது விசாரணை நடுவர்களை நீதியரசர் பி.சுரேஷ் தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. நீதிபதி H. சுரேஷ் (முன்னாள் நீதியரசர், மும்பை உயர்நீதிமன்றம்)
2. திரு.பி.எஸ். கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ் (ஓய்வு) முன்னாள் மத்திய அரசுச் செயலர்
3. முனைவர் வே. வசந்திதேவி, (முன்னாள் துணைவேந்தர் – மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், முன்னாள் தலைவர் – தமிழ்நாடு மகளிர் ஆணையம்)
4. திரு. கே. சுப்பிரமணியம், ஐ.பி.எஸ் (ஓய்வு) முன்னாள் காவல்துறை இயக்குனர், திரிபுரா.
5. பேராசிரியர். பலராம், முன்னாள் தலைவர், மாநில மனித உரிமைகள் ஆணையம், கேரளா.
6. திரு. வி. கருப்பன், ஐ.ஏ.எஸ் (ஓய்வு) முன்னாள் தமிழ்நாடு அரசுச் செயலர்
7. திரு. ஆர்.பி. ஸ்ரீகுமார், ஐ.பி.எஸ் (ஓய்வு) முன்னாள் கூடுதல் காவல்துறை இயக்குனர், குஜராத்
8. முனைவர். ஆர்.ஜெ. ராஜ்குமார், சர்வதேச மனித உரிமைப் பயிற்சி ஆலோசகர், சென்னை
9. டாக்டர் ரூத் மனோரமா, தேசிய ஒருங்கிணைப்பாளர் – தேசிய தலித் பெண்கள் கூட்டமைப்பு
10. திருமிகு. சுதா ராமலிங்கம், மூத்த வழக்குரைஞர், சென்னை உயர்நீதிமன்றம்.
11. திரு. கிருஷ்ணா ஆனந்த், வழக்குரைஞர்–சென்னை உயர்நீதிமன்றம், (பத்திரிக்கையாளர்)
12. டாக்டர். சேவியர் செல்வசுரேஷ், தடையவியல்துறை பேராசிரியர்.
13. திரு. பொன்னீலன், தமிழ் எழுத்தாளர்.
14. பேராசிரியர். கல்விமணி, மூத்த மனித உரிமை செயல்பாட்டாளர்
15. திரு. தியாகு, மூத்த மனித உரிமைச் செயல்பாட்டாளர், ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

### பொது விசாரணைக் குழு கண்டறிந்தவைகள் மற்றும் பரிந்துரைகள்

சமீபத்தில் பரமக்குடி ஐந்து முக்கு சாலை, மதுரை சிந்தாமணி மற்றும் இளையான்குடி ஆகிய இடங்களில்

காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு துயரச் சம்பவத்தை அதன் பின்னணியுடன் பார்க்கப்பட வேண்டியது அவசியமாகும்.

## பொது விசாரணைக் குழு கண்டறிந்தவைகள் மற்றும் பரிந்துரைகள்

இவ்வரலாற்றின் குறிப்பிடத் தகுந்த பகுதி தலித்துக்களின் தன்னிகரற்ற தலைவர் தியாகி இமானுவேல் சேகரன், தீண்டாமை மற்றும் தலித்துகளுக்கெதிரான ஒடுக்குமுறைகளை ஒழிக்க நடத்திய போராட்டமும் அதனால் அவர் 11 செப்டம்பர் 1957ம் ஆண்டு கொலையுண்டதும் ஆகும். அதுமுதல் அவ்வப்பொழுது அப்பகுதிகளில் சாதீய மோதல்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. ஆனால் தமிழக அரசு, அரசியலைப்பின் கொள்கைகளான சமத்துவம், சமுதாய சமத்துவம், நீதி, சமூக நீதி ஆகியவற்றை மலரச் செய்ய எவ்வித முழுவீச்சான நடவடிக்கைகளையும் எடுப்பதை விடுத்து அவ்வப்பொழுது நடைபெறம் சாதீய ஒடுக்குமுறை மற்றும் பாகுபாட்டால் ஏற்படும் கலவரங்களை ஒடுக்க சட்டம் ஒழுங்கு நிலைநாட்டல் என்னும் குறுகிய வட்டத்திற்குள் போலிக் காரணங்களுடன் தொடர்ந்து துப்பாக்கிச் சூடுகளை நடத்தியுள்ளது. பிரச்சினைக்கான காரணங்களை வேரறுக்கத் தவறிவிட்டது.

1995ம் ஆண்டுகளில் கொடியன்குளம், ஆலந்தா மற்றும் 1994ம் ஆண்டு காசிலிங்கபுரம் கலவரங்கள் அரசின் இந்நிலையினை வெளிப்படுத்துவதாகவே அமைந்தது. இந்நிகழ்வுகளில் காவல் துறையின் அதிகாரங்கள் தலித்துக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டு துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. அரசியலமைப்பைச் சார்ந்து தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் தலித்துகளுக்கு எதிராகவே அரசின் நடவடிக்கைகள் இருந்தது.

நீதிபதி சம்பத் விசாரணைக் குழுவின் வரம்புகள் மிகக் குறுகியதாகவே உள்ளது. அதன் வரம்பு 11 செப்டம்பர் 2011 அன்று பரமக்குடியில் நடந்த துப்பாக்கிச்சூடு பற்றி மட்டுமே விசாரிக்க குறிக்கப்பட்டுள்ளது. அதே தேதியில் இளையாங்குடி மற்றும் மதுரையில் நடந்த துப்பாக்கிச்சூடுகள் அதன் வரம்பிற்கு உட்படவில்லை. மேலும் இப்பிரச்சனையை ஒரு சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சனையாக மட்டுமே கருதுகிறதேயன்றி ஒரு அரசியல் நெருக்கடியாகக் கருதவில்லை. இவ்வாறு மிகக்குறுகிய வரம்பிற்குள் செயல்படும் குழுவின் அறிக்கை பாரபட்சமாகவும் சாதாரண சட்டம் ஒழுங்குப் பிரச்சனைத் தொடர்பானதாகவும் மட்டுமே இருக்குமேயன்றி அரசியலமைப்பின் சாரம் மற்றும் குடியரசின் கோட்பாடுகளோடு ஒன்றியதாக இருக்காது.

இம்மானுவல் சேகரனின் இறந்த தினத்தை ஆண்டு தோறும் மிகவும் கட்டுக்கோப்பாகவும் லட்சக்கணக்கான மக்கள் கூடி அஞ்சலி செலுத்தும் ஒரு பெரும் நிகழ்வாகவும் வளர்ச்சிடைந்தது மறுக்க முடியாத உண்மை. அவரது ஜனநாயக விழுமியங்களையும் அரசியலமைப்புச் சட்டத்தின் சாரங்களையும் நிலைநாட்ட அவர் நிகழ்த்திய போராட்டம் மக்கள் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிகழ்வு ஆண்டு தோறும் கட்டுக் கோப்பாகவும் பிரம்மாண்டமாகவும் நடந்ததை நடுவர்கள் முன்பு வருவாய்த்துறை மற்றும் காவல் துறை அலுவலர்களே சான்று பகர்ந்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் விழா அமைப்பாளர்கள் அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்து நட்புறவுடனும் கூட்டுறவுடனும் மிகச்சிறப்பாக நடத்தியுள்ளனர். அதே போன்று இவ்வருடமும் அமைப்பாளர்களும் அரசு அலுவலர்களும் கூட்டாகத் திட்டமிட்டுள்ளனர். இவ்வாண்டு மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு அரசியல் தலைவர்கள் விழாவில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்த ஒவ்வொருவருக்கும் நேரம் ஒதுக்கியுள்ளனர். இதைப் பலதரப்பட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் மாநில அரசு அலுவலர்களும் நடுவர்கள் முன்பாக உறுதி செய்துள்ளனர்.

**காயம்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி அளிக்காததும் அவர்களிடம் காவல்துறையினர் மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொண்டதும் கண்டிக்கத்தக்கது. அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். துப்பாக்கிச்சூடு அவசியமற்றது. நியாயப்படுத்த முடியாதது.**

கடந்த சில ஆண்டுகளாக செப்டம்பர் 11 ஆம் நாளுக்கு சில நாட்கள் முன்னதாக தலித்துகளில் சிலரைக் கொலை செய்வதின் மூலம் குரு பூஜை நடைபெறுவதைத் தடுக்கும் எண்ணத்துடன் ஆதிக்க சாதியினர் செயல்படுவதை நடுவர்கள் கவனித்தனர். இருப்பினும் இவற்றால் குரு பூஜை தடைப்படவில்லை. இவ்வாண்டு குரு பூஜைக்கு ஒரு நாள் முன் அதாவது 9 செப்டம்பர் 2011 அன்ற இரவு இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுகா மண்டலமாணிக்கம் அருகில் உள்ள பள்ளப்பச்சேரியைச் சார்ந்த 16 வயது மாணவன் பழனிக்குமார் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டான். அது மண்டலமாணிக்கம் காவல் நிலையத்தில் 9.9.2011 அன்று இரவு 10.9.2011 அன்று அதிகாலை 3.00 மணிக்குக் கொலை நடைபெற்றதாக முதல் தகவலறிக்கை எண் 33/2011ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வு 10.9.2011 அன்று மாலை அப்பகுதிகளில் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் கொலையுண்ட நபர் 10.9.2011 அன்று எரியூட்டப்பட்டார்.

இங்கு குறிப்பிடத்தக்கது என்னவெனில் கொலையுண்ட நபரின் தந்தை குறிப்பிட்ட குற்றவாளிகள் என்று சந்தேகப்பட்ட சிலர் கைது செய்யப்பட்டனர்; சிலர் போலீசாரால் விடுவிக்கப்பட்டனர். பழனிக்குமாரின் கிராமத்தவர் கலகத்தில் ஈடுபடவும் இல்லை. இவை ஒருபுறமிருக்க மாவட்ட நிர்வாகம், காரணங்களால் தலித்துகளின் செல்வாக்குப்பெற்ற தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஜான் பாண்டியனை பழனிக்குமார் குடும்பத்திற்கு ஆறுதல் கூற வருவதைத் தடை செய்தது. இந்த ஜனநாயக விரோதமான உணர்வுகளுக்கு எதிரான தடையை ஏற்று ஜான் பாண்டியன் அக்கிராமத்திற்குச் செல்லாமல் இருந்தார். ஜான் பாண்டியன் தமது இம்முடிவை நிர்வாகத்திற்கும் தெரிவித்தார். ஆகவே, ஜான் பாண்டியன் அக்கிராமத்திற்குச் செல்வதால் பதட்டம் ஏற்படும் என்ற நிர்வாகத்தின் ஐயம் அடிப்படையில்லாதது.

**பார்வையாளர்களாக வந்தவர்களும் வழிப்போக்கர்களும் ஆயுதமின்றி அமைதியாக குரு பூஜைக்குச் சென்றவர்களும் தடியடி மற்றும் துப்பாக்கிச் சூட்டில் இறந்துள்ளனர், சிலர் காயமடைந்துள்ளனர். இவை இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் SC–ST வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்படி குற்றமாகும்.**

ஜான் பாண்டியன் மீதான குற்றப்பிரிவு 151–ன் படியான ஆணை அவர் இராமநாதபுரம் மாவட்டத்திற்குள் நுழையத் தடை செய்யும் ஆணை 10.11.2011 அன்று மாலை அவருக்கு வழங்கப்பட்டதாக நிர்வாகம் ஏற்றுக் கொண்டது. இம்முடிவு திருநெல்வேலி மாவட்டத்திலிருந்த ஜான் பாண்டியனுக்கு 11.9.2011 அன்று காலை 10.30 மணிக்குத்தான் அறிவிக்கப்பட்டது. மேலும் 11.9.2011 அன்று மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை அவர் குரு பூஜையில் கலந்து கொள்வதற்குகெனவே அவருக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. காவல்துறை ஜான் பாண்டியன் வருகையால் எவ்வித கலவரமும் வர வாய்ப்பில்லை என்று உணர்ந்திருந்தது.

இந்நிலையில் 11.9.2011 அன்று காலை 11.00 மணிக்கு குற்ற எண் 151–ன் படி தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு என்னுமிடத்தில் ஜான் பாண்டியனைக் காவல்துறை கைது செய்தது. அவர் பரமக்குடிக்கு வருவதற்கு சில மணி நேரங்களுக்கு முன் நடைபெற்றது. அவரைத் துப்பாக்கிப் பயிற்சி மைதானத்தின் காவலில் துறை விருந்தினர் இல்லத்தில் காவலில் வைத்தனர். இந்தக் கைது சம்பவம் தேவையற்றது என்பதே உண்மை.

கைது செய்யப்பட்ட செய்தி இம்மானுவேல் சேகரனின் நினைவிடத்திற்குச் சிறிது தூரத்தில் ஐந்து முக்கு சாலையில் இருந்த ஜான் பாண்டியனின் ஆதரவாளர்களை எட்டியது. அங்கிருந்த சுமார் 1000பேரில் ஜான்பாண்டியனின் ஆதரவாளர்கள் சுமார் 50 பேர் சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். அன்று ஐந்து முக்கு சாலையில் இருந்தவர்கள் கால்நடையாகவும் வாகனங்களிலும் குரு பூஜைக்குச் செல்பவர்கள் மட்டுமே.

### கண்டறிந்தவைகள் (Findings)

1. ஜான் பாண்டியனைக் கைது செய்தது மற்றும் அவரை குருபூஜையில் கலந்து கொள்ள முடியாமல் தடை செய்தது தேவையற்றதும் கலவரத்தைத் தூண்டியதுமாகும்.
2. குரு பூஜைக்குச் சென்ற பட்டியலின சாதியினர் அனைவரும் அமைதியான முறையில் ஆயுதங்கள் எதுவுமின்றி சென்றனர். அவர்களுக்கெதிரான பலப்பிரயோகம் நீதிக்குப் புறம்பானது.
3. நீண்ட நேரமாக, அதாவது நான்கு மணி நேரத்திற்கு மேலாக (12.45 முதல் 16.45 மணி வரை) துப்பாக்கிச் சூடு நடத்தியது முற்றிலும் நியாயத்திற்குப் புறம்பானது.
4. காயம்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி அளிக்காததும் அவர்களிடம் காவல்துறையினர் மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொண்டதும் கண்டிக்கத்தக்கது. அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
5. துப்பாக்கிச்சூடு அவசியமற்றது. நியாயப்படுத்த முடியாதது.
6. பார்வையாளர்களாக வந்தவர்களும் வழிப்போக்கர்களும் ஆயுதமின்றி அமைதியாக குரு பூஜைக்குச் சென்றவர்களும் தடியடி மற்றும் துப்பாக்கிச் சூட்டில் இறந்துள்ளனர், சிலர் காயமடைந்துள்ளனர். இவை இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் SC–ST வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்படி குற்றமாகும்.
7. நீதிபதி சம்பத் விசாரணைக் குழு அமைக்கப்பட்டதால் நிர்வாக நீதிபதி நடத்த வேண்டிய குற்ற விசாரணை பரமக்குடியில் நடத்தப்படவில்லை. இது அவசியமான ஒன்று. இந்நிர்வாக அலுவலரின் குற்ற விசாரணை நடத்தாதது கடமை தவறிய செயலாகும்.

நடுவர் குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளை முன் வைக்கிறது.

– பரிந்துரைகள் அடுத்த இதழில்

–ஆதாரம்: மக்கள் கண்காணிப்பகம் தொகுத்த பரமக்குடி துப்பாக்கிச்சூடு – பொதுவிசாரணை அறிக்கை

# வாச்சாத்திக்கு கிடைத்த நீதி

## தமிழ் நாட்டில், தர்மபுரி மாவட்டத்திலுள்ள இந்தப் பழங்குடியின கிராமத்து மக்களுக்கு நீண்ட கடினப் பயணமாகத்தான் இருந்தது நீதி கிடைக்கப் பெறுவதற்கு ஆனபாதை என்பது,

– எஸ். துரைராஜ்.

**எப்படி இருந்த போதிலும் யாருடைய கவனத்துக்கும் வராமல் போன ஒரு பெரிய விசயம் என்னவென்றால் அரசியலில் செல்வாக்கு உள்ள சந்தனக் கடத்தல் காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையிலிருந்த மறைமுகத் தொடர்பு; அவ்வதிகாரிகள் அப்பாவி கிராமத்தார்கள் மீது குற்றத்தை சுமத்த கடுமையாக முயற்சி செய்தனர் என்பதும்.**

எப்படி இருந்த போதிலும் யாருடைய கவனத்துக்கும் வராமல் போன ஒரு பெரிய விசயம் என்னவென்றால் அரசியலில் செல்வாக்கு உள்ள சந்தனக் கடத்தல் காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையிலிருந்த மறைமுகத் தொடர்பு; அவ்வதிகாரிகள் அப்பாவி கிராமத்தார்கள் மீது குற்றத்தை சுமத்த கடுமையாக முயற்சி செய்தனர் என்பதும்.

இந்தியப் பழங்குடியின மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்பது நம் நாட்டின் சரித்திரத்தில் உள்ள வெட்கக் கேடான பகுதிகளாகும். இவர்கள் ராட்சசர்கள், அசுரர்கள் இன்னும் என்னென்ன பெயரிலெல்லாம் அழைக்கப்பட்டார்கள். பல நூற்றாண்டுகளாக பெரிய எண்ணிக்கையில் கொன்று குவிக்கப்பட்டதோடு எஞ்சிய அவர்தம் வாரிசுகளும் அவமானம் படுத்தப்பட்டார்கள் மேலும் அவமதிக்கப்பபட்டார்கள் மற்றும் எல்லாக் கொடுமைகளுக்கும் உட்படுத்தப்பட்டார்கள். அவர்கள் நிலங்களிலிருந்தும் அப்புறப்படுத்தப்பட்டு மலைகளிலும் காடுகளிலும் தள்ளப்பட்டு வறுமை, கல்வியின்மை, நோய் போன்றவற்றால் அவதிப்படப்பட்டார்கள்.

இப்போது அவர்கள் வாழும் காடு மற்றும் மலைகளிலிருந்தும் துரத்தி அடிக்கப்படவும் காட்டிலிருந்து கிடைக்கும் பொருட்களை வைத்து வாழ்க்கை நடத்துவதிலிருந்தும் விரட்டிவிட சிலரால் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நீதிபதி மார்க்கடெய் கட்சு மற்றும் நீதிபதி கியான் சுதா மிஸ்ரா இருவரின் உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஜனவரி 5, 2011. கைலாஷ் மற்றும் பிறர் மகாராஷ்ரா மாநிலம்.

வாச்சாத்தி என்னும் கிராமம் தமிழ்நாட்டில் தர்மபுரி மாவட்டத்திலுள்ள சித்தேரி என்னும் மலையடிவாரத்தில் சென்னையில் இருந்து 350 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. காவல், வனம் மற்றும் வருவாய்த் துறையைச் சார்ந்த ஒரு குழுவினர் இந்த கிராமத்திலுள்ள மலையாளி பழங்குடியினரை சந்தனக் கட்டை கடத்தல் தொடர்பாக என்று ஒரு சாக்கை சொல்லி கடுமையாகத் தாக்கப்பட்டதிலிருந்து எல்லா தேசிய நாளிதழ்களும் இவர்கள் பெயர் அடிபடத் துவங்கியது ஜூன் 20ம் தேதி 1992 (“வாச்சாத்தியின் மானம்” பிரான்ட்லைன் ஆகஸ்டு 1992) அடி, உதை, பாலியல் பலாத்காரம், மானபங்கப்படுத்துதல் மற்றும் எல்லாவித தொந்தரவுகளையும் துயரங்களையும் சந்தித்த வாச்சாத்தி கிராமவாசிகளின் வீடுகள் மற்றும் வாழ்வாதாரங்களும் இந்தத் தாக்குதலில் அழிக்கப்பட்டதுடன் நீதிக்காக நீண்ட கொடிய பயணம் மேற்கொள்ள வேண்டிவந்தது. தாக்குதலின்போது பாலியல் பலாத்காரத்துக்கு பலியான 18 நபர்களில் ஒருவர் பஞ்சாயத்து தேர்தல் அக்டோபரில் நடந்தபோது போட்டியிட்டார் ஆனால், செப்டம்பர் 29ம் தேதியன்று பட்டாசுகள் முழங்கியதுடன் கோலாகல ஊர்வலங்களும் உள்ளூர் தெய்வங்களுக்கு வேண்டுதல்களும் நிறைவேற்றப்பட்டது. காரணம் என்னவென்றால் அன்றுதான் குற்றஞ்சாட்டப்பட்ட 269 நபர்களில் உயிரோடிருந்த 215 நபர்களையும் தண்டித்து தீர்ப்பு வழங்கியிருந்தது நீதிமன்றம். குற்றஞ்–சாட்டப்பட்டவர்களில் 126 நபர்கள் வனத்துறையினர், 84 நபர்கள் காவல் துறையினர் மற்றும் ஐவர் வருவாய்த் துறையைச் சேர்ந்தவர்கள். சிறை தண்டனை வெவ்வேறு குற்றங்களுக்கு ஏற்ப ஒரு வருடம் முதல் 10 ஆண்டுகள் கடுங்காவல் என வழங்கப்பட்டிருந்தது.

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 376ன் கீழ் வனத்துறையைச் சார்ந்த 17 நபர்களுக்கு பாலியல் பலாத்காரம் செய்த குற்றத்திற்காக ஏழு ஆண்டு கடுங்காவல் தண்டனையும் ஒவ்வொருவரும் ரூ.2000/– அபராதம் கட்டும் படியும் தண்டனை விதிக்கப்பட்டிருந்தனர். இந்திய தண்டனைச் சட்டம் 357 (1) (b)ன் கீழ் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி (இழப்பு மற்றும் காயங்களுக்கான இழப்பீடு வழங்கல்) பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்ட 18 பேரும் நபர் ஒன்றுக்கு ரூ.15000/–வீதம் மேல்முறையீட்டுக்காலம் முடிந்தவுடன் இழப்பீடு பெற உரிமையுடையவர்கள் ஆவர். இந்த 17 நபர்களில் 12 நபர்கள் பழங்குடி இனமக்களை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் (1989) கீழும் 10 வருடக் கடுங்காவல் தண்டனைக்குரியராவர் மீதமுள்ள 198 குற்றவாளிகளும் இந்தியக் குற்றவியல் பிரிவு மற்றும்

பழங்குடியினர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறைத் தண்டனை 1 முதல் 3 வருடம் வரையும் அபராதமும் விதிக்கப்பட்டனர்.

முதன்மை மாவட்ட நீதிபதி மற்றும் செசன்ஸ் நீதிபதி எஸ். குமரகுருவால் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் நால்வர் இந்திய வனவியல் துறையைச்சார்ந்த உயரதிகாரிகள் அதாவது இ.வ.து. (IFS) அதிகாரிகளாவர். இவர்களில் முதல் குற்றவாளியாகிய எம். ஹரிகிருஷ்ணன் முன்னாள் வனப்பாதுகாப்பு அதிகாரியாகப் பணியாற்றியவர் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 201ன் கீழ் தடயத்தை அழித்த குற்றம் அல்லது குற்றவாளியை மறைப்பதற்கு தவறான தகவல் கொடுத்த குற்றம் என்பவருக்கு மூன்றாண்டுகள் சிறை தண்டனையும் மேலும் மூன்றாண்டுகள் கடுங்காவல் தண்டனையோடு கூடிய அபராதம் ரூ.1000 வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி வழங்கப்பட்டது. கூடுதல் வனப்பாதுகாப்பு அதிகாரி பி.முத்தையன் ஒரு வருட தண்டனை (இ.பி.கோ. சட்டம் 342ன் கீழ் (தவறாக அடைத்து வைத்தல்) பெற்றார். வேறு இரண்டு உயரதிகாரிகளான எஸ். பாலாஜி, முதன்மை வனப்பாதுகாப்பு அதிகாரி மற்றும் எல்.நாதன், வனப்பாதுகாப்பு அதிகாரி இருவரும் சிறை தண்டனை பெற்றனர். அக்டோபர் 11ம் தேதியன்று ஹரிகிருஷ்ணன் மற்றும் பாலாஜியின் தண்டனைகளை நிறுத்தி வைக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் கட்டளையிட்டது. இருந்தபோதிலும் இருவரும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராக கேட்டுக்கொண்டது

வாச்சாத்தி வாழ் மக்கள் நீதிமன்றத்துக்கு வெளியே காத்துக்கொண்டிருந்தார்கள். தீர்ப்பு வழங்கப்படும்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தலைவர்கள் மற்றும் செயல்பாட்டாளர்களுக்கும் தமிழ்நாடு மலைவாழ் பழங்குடி கழகத்தினரையும் மற்றும் வழக்குரைஞர்களும் அவர்களோடு இணைந்து நின்று தங்களின் சட்டப்போராட்டத்தில் ஆதரவு தந்தமைக்காக தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்த அந்த சமயத்தில் வெளிவந்த கவித்துவமான நீதிமன்றத் தீர்ப்பாகும் இது. 1992ல் இக்கட்சிதான் ஆளும் கட்சியாக இருந்ததோடு வழக்கில் சம்மந்தப்பட்டிருந்த அதிகாரிகளைப் பாதுகாக்க எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டது. பி. சண்முகம், பொதுச் செயலாளர், தமிழ்நாடு மலைவாழ் மக்கள் கழகம் தீர்ப்பை பற்றி கல்போன்று அமைதி காப்பதாக குறிப்பிட்டார்

அரசாட்சியில் இருந்த சமயத்தில் அக்கிராமத்து பழங்குடி மக்களிடம் எந்தவிதமான கொடுமைகளும் நடத்தப்படவில்லை என்று அரசாங்கம் கூறிக்கொண்டது. ஆனால், குற்றப்பத்திரிகையும், மத்தியப் புலனாய்வுத் துறை (CBI) அறிக்கையும் அப்போதிருந்த அட்டவணை ஜாதி மற்றும் பழங்குடியினர் துறை இயக்குநர் மற்றும் அத்துறையின் ஆணையர் பி. பானுமதி அறிக்கை போன்றவை அரசின் கூற்றை மறுதளித்தது. இந்த அறிக்கைகள் வாச்சாத்தி மக்கள் கூறிய கூற்றுக்களோடு ஒத்துப்போயின.

**கடந்ததை நினைவு கூர்தல்**

1990ம் வருடம் ஜூன் 20ம் தேதி வனத்துறையைச் சேர்ந்த ஒரு குழுவினர் வாச்சாத்தியை சுற்றி இருந்த கிராமங்களில் ரெய்டு நடத்தினர். வனப்பாதுகாப்புப் படை அப்போதைய வனப்பாதுகாவலர் டி. சிங்காரவேலு தலைமையில் 'வரட்டாறு' என்னும் ஆற்றுப்படுகையில் புதைத்து வைத்திருந்த சந்தனக் கட்டைகளை தோண்டி எடுக்க வந்திருந்தது. அப்படை சின்னப் பெருமாள் என்பவர் தன் நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்ததை கவனித்தது. தனக்கு எதுவும் தெரியாது புதைக்கப்பட்ட சந்தனக்கட்டைகளைப் பற்றி என்று சின்னப் பெருமாள் சொல்லிக்கொண்டிருந்தார். அக்குழுவில் ஒருவரான வனக்காவலர் ஆர். செல்வராஜ் என்பவர் சின்னப் பெருமாளைத் தாக்கத் துவங்கினார். அவர் கத்திய அபாயக் குரலைக் கேட்டு அவரை மற்ற கிராமத்தினர் காப்பாற்ற வந்தார்கள். இடையில் ஏற்பட்ட தகராறில் செல்வராஜ் காயமடைந்தார். கிராமத்தினர் அவருக்கு முதலுதவி செய்ததோடு ஒரு காளை மாட்டு வண்டியில் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்.

அன்று மதியம் ஒரு பெரும் கூட்டமான வனத்துறை மற்றும் காவல்துறையைச் சேர்ந்த 300 பேர் அவர்களில் 80 பெண் காவலரும் சில வருவாய்த்துறை அலுவலரும் அடங்கிய எல்லோருமாய் கிராமத்தை முற்றுகையிட்டனர். சில கிராமவாசிகள் மலைக்குள் ஓடி ஒளிந்தனர். எஞ்சிய மக்கள் "இந்தக் கூட்டுப்படை"–யினரால் காவல், வனத்துறை மற்றும் வருவாய்துறையினரால் தாக்கப்பட்டனர். அக்கிராமத்தினர் சீருடை அணிந்தவர்கள் பூட்டிய வீடுகளை உடைத்து உள்ளே நுழைந்து கொள்ளையடித்தனர். சமூகத்தினரின் தொலைக்காட்சி பெட்டி நொறுக்கப்பட்டது. பம்புசெட்களும், சைக்கிள்களும் சமூகத்துக்கு சொந்தமான கிணறுகளில் எறியப்பட்டு குடிக்கத் தகுதியில்லாமல் தண்ணீர் மாறிப் போயிற்று என்று கூறினார்கள்.

தமிழ்நாடு பழங்குடி (மலைவாழ்) மக்கள் அமைப்பின் செயல்பாட்டாளனர்கள் கூறியதாவது, மாலையில், ரெய்டு நடத்தியவர்கள் ஒரு ஆலமரத்தின் அடியில் மக்களை ஒன்று திரட்டினர். வன அலுவலர்கள் 18 இளம் பெண்களை வரண்ட ஆற்றில் உள்ள சந்தன மரங்களை 'டிரக்'–ல் ஏற்ற உதவுவதற்காக என்று சொல்லி அழைத்துச் சென்றனர். பெண் காவலர்களோ அல்லது கிராமத்துப் பெண்களில் வயதானவர்களோ அவர்களுடன் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அத்தனை 18 பெண்களும் ஆற்றுப்படுகையில் பாலியல் அவஸ்தைக்கும் பாலியல் பலாத்காரத்துக்கும் உட்படுத்தப்பட்டனர். அவர்களில் சிலரை பலர் கூட்டாக பலாத்காரம் செய்தனர். அதன் பின்னர் அவர்கள் சந்தனக்கட்டைகளை டிரக்கில் ஏற்றுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டன.

வாச்சாத்தி கிராமத்திலிருந்து 16கி.மீ. தூரத்திலிருந்த வனத்துறை அலுவலகத்துக்கு 94 பெண்களும் 28 குழந்தைகளும் உள்ளடக்கிய 217 கிராமத்தினர் கொண்டு செல்லப்பட்டனர். அனைவரும் சட்டத்துக்கு புறம்பாக போலீஸ் காவலரின் பாதுகாவலின்றி அடைத்து வைக்கப்பட்டனர். அங்கும் ஒரு காட்டுமிராண்டித் தனமான

ஒரு தாக்குதல் அவர்கள்மீது நடந்தது. கைது செய்யப்பட்ட பெண்கள் ஒருவர் உடையை மற்றவர்கள் களைந்தெறியுமாறு செய்து அவமானப்படுத்தப்பட்டனர். ஊர் கவுண்டர் என்று சொல்லப்படும் பெருமாள் எனும் கிராமத்தலைவரை துடைப்பத்தால் அடிக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். மறுத்த பெண்களை வனத்துறையினர் லத்திக் கம்பினால் அடித்தனர். அன்றைக்கு மறுநாள்தான் அவர்கள் நீதிமன்றக் காவலுக்கு ஒப்படைக்கப்பட்டனர்.

1992, ஜூன் 21ம் தேதி மீண்டும் ''இந்தக் கூட்டுப்படை'' வாச்சாத்தி கிராமத்துக்குள் நுழைந்து கடத்தப்பட்ட சந்தனக் கட்டைகளை ''மீட்டெடுக்க'' என்று நுழைந்தது. நாற்பதுடன் சந்தனக்கட்டைகள் தோண்டி எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படாலும் அன்றுயாரும் கைது செய்யப்படவில்லை. மீண்டும் அந்தக் குழுவினர் வீடுகளில் புகுந்து கொள்ளையடித்ததோடு விலையுயர்ந்த பொருட்களையும் ஆடுகளையும் எடுத்துச் சென்றதோடு உணவு தானியங்களில் கண்ணாடித் துண்டுகளை கலந்து சென்றனர் என்று கிராமத்து வாசிகள் சொன்னார்கள்.

ரெய்டு செய்தவர்கள் ஆண்கள் 76 நபர்களையும் பெண்கள் 12 நபர்களையும் வழக்கமான மரம் தொடர்பான மூன்று வழக்குகளில் STORன் கீழ் பதிவு செய்தார்கள். சிங்கார வேலுவிடமிருந்து ஒரு புகாரைப் பெற்றுக்கொண்டு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 332, 307, 325, 324, 323 மற்றும் 506ன் கீழும் இந்திய ஆயுதச் சட்டம் 25ன் கீழ் 14 நபர்களையும் வழக்கில் பதிவு செய்தனர். STOR வழக்குகளில் பதிவு செய்தவர்களை காவல்துறையிடம் ஒப்புவித்தார்கள். ரிமாண்டுகள் மீண்டும் மீண்டும் தள்ளிப்போடப்பட்டு இறுதியில் ஆகஸ்டு 27ம் (1992) தேதிதான் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்கள். உயர்நீதிமன்றம் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறும் குற்றமனு நகல் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் G. சம்கிராஜ், அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்க உபதலைவர் நினைவு கூர்ந்தார். மேலும் தாக்குதல் தொடரும் என பயந்த மலைவாழ் பழங்குடியினர் சித்தேரி மலையில் வாரக்கணக்கில் பதுங்கி வாழ்ந்தனர். செய்திகள் படிப்படியாக வெளியாகத் துவங்கியதும் தமிழக மலைவாழ் மக்கள் அமைப்பு ஜூலை மாத முதல்வார ரெய்டு பற்றி கேள்விப்பட்டது. பாஷா ஜான், தலைவர் சண்முகம் பொதுச் செயலாளர் மற்றும் கரூர் தொகுதியில் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எம். அண்ணாமலை CPI(M) தலைவர் ஆகியோர் அடங்கிய குழு பார்வையிடுவதற்காக ஜூலை 14–1992ல் அங்கு சென்றனர். வீடு திரும்பக் கோரி கூறியபோது அவர்களை நம்ப வைப்பது மிகக் கடினமான முயற்சியாய் இருந்தது. இறுதியாக அவர்கள் தனியாக இல்லை என்றும் வீடு திரும்ப கேட்டுக்கொண்டதில் ஒருவாறு திருப்தி அடைந்தனர் கிராமத்தினர்.

கிராமத்தினர் கூறியவைகளின் அடிப்படையில் அந்த மாவட்ட ஆட்சியருக்கு அன்றைய தினமே ஒரு ''மெமோரண்டம்'' தயாரிக்கப்பட்டு பார்வையிட்ட குழுவினர் சமர்ப்பித்தனர். கம்யூனிஸ்டு கட்சியின் CPI(M) மாநிலக்குழுவின் செயலாளரும் ராஜ்ய சபை உறுப்பினருமான எ.நல்லசிவன் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு மெமோரண்டம் ஒன்றை சமர்ப்பித்து அவர் இதில் தலையிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

ஆனால், அரசு எந்தவிதமான வன்கொடுமையும் அங்கு நடக்கவில்லை என்றே மறுதளித்தது. வனத்துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் ஜூலை 21ம் தேதி, வெளியிட்ட செய்தி அறிக்கையில் ஒன்றரைக் கோடி பெறுமானமுள்ள சந்தனக்கட்டைகள் வாச்சாத்தியில் நடத்திய 'ரெய்டில்' கைப்பற்றப்பட்டதாகவும் கிராமத்தினர் அரசு அதிகாரிகள் மீது வன்முறையை கையாண்டதாகவும் கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தியதாகக் கூறியிருந்தார். அக்கிராமத்தில் வசிக்கும் 300 குடும்பங்களுமே சந்தனக்கட்டை கடத்தலில் வருடம் முழுவதும் ஈடுபட்டு நாள் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் சம்பாதித்து வருவதாகவும் நல்ல சிவனின் வெளியீடு அறிக்கை முதிர்ச்சி இல்லாததோடு ஆதாரமற்றது என்றும் முதலமைச்சர் சந்தனக் கடத்தல் நடைபெறுதலை தடுக்கும் முயற்சியில் வரலாறு படைக்கின்றார் என்றும் வாச்சாத்தி சம்பவம் அதன் முதல்படிதான் என்றும் கூறி இருந்தார்.

மேலும் நல்லசிவனுக்கு எதிராக நையாண்டியாக குறிப்பிட்டு வயதான தலைவர் சித்தேரி மலை போன்று உயரமான இடங்களுக்கு செல்ல முடியாதென்றும் ''மிக உயரத்திலுள்ள கிராமத்துக்குச் செல்ல வழியில்லை'' என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்த விமர்சனம் மிகவும் வேடிக்கையானது. ஏனெனில் வாச்சாத்தியானது சித்தேரி மலையடிவாரத்தில்தான் அமைந்துள்ளது.

சண்முகம் கூறுவது என்னவென்றால் தாக்குதலுக்கு இரண்டு நாட்கள் பின்பு அமைச்சர் கரூர் (Karur) சென்றார் என்றும் வாச்சாத்தி அங்கிருந்து 16 கி.மீ, என்றும் ஆளுங்கட்சியின் உள்ளூர் செயல்பாட்டாளர் கேட்டுக் கொண்டும் கூட அவர் வாச்சாத்தி சென்று பார்க்கவோ பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறவோ இல்லை என்பதாகும்.

பாலியல் பலாத்காரத்துக்கு உட்பட்டவர்கள் கரூர் காவல் நிலையத்தில் ஆகஸ்டு 22ல் புகார் அளித்தபோது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய மறுத்துவிட்டார். மாவட்ட ஆட்சியர் ஜூலை 22ம் தேதி RDOவை கிராமத்தைப் பார்வையிட்டு விசாரித்து அறிக்கை அனுப்பக் கேட்டும் ஒரு மாதம் கழித்துதான் அவர் அங்கு சென்றார். ''சுதந்திரமாகவும் பாரபட்சமின்றியும்'' அவர் ஆகஸ்டு 10ம் தேதி அளித்த அறிக்கையில் ''நடந்ததாய் கூறப்படும் பாலியல் பலாத்கார நிகழ்வு நடந்ததாய் நம்ப முடியவில்லை'' என்றும் ''கிராமத்துக்காரர்கள் வனத்துறை மற்றும் காவல்துறையினரை குற்றஞ்சாட்டுவதற்காக தாங்களே தங்கள் வீடுகளை சேதப்படுத்தி இருந்தனரென்றும் அறிக்கை அளித்திருந்தார்.

அரசாங்கத்தின் உதவக்கூடாது என்னும் மனப்பான்மைதான் வாச்சாத்தி மக்களை சட்டத்தின் உதவியை நாட வைத்தது என்றும் கூறினார் சம்கிராஜ். CPI (M) மேலும் பொதுநல வழக்கொன்றை சென்னை

## சிவப்பு அடையாள அட்டை தந்த தைரியம்

தைரியமும் இரும்பு போன்ற மன உறுதியும் கொண்டு அவ்வளவு பெரிய எண்ணிக்கையிலான அரசு அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை அதிலும் அரசாங்கம் மற்றும் அரசியல் பெருந்தலைகளின் ஆதரவும் கொண்ட அவர்களை எதிர்த்து நிற்க வாச்சாத்தி வாழ் மக்களுக்கு எப்படி முடிந்தது ? இந்தக் கேள்வியை மாரந்தாயி என்னும் 59 வயது பழங்குடிப் பெண்ணிடம் கேட்டபோது வந்த பதில் "செங்கொடி".

கண்ணீர் கண்களில் மினுமினுக்க மெலிந்த அந்தப் பெண் 1000க்கு மேற்பட்ட அக்கிராம மக்களுக்கு உதாரணமாக விளங்கிய அந்தப் பெண் வாச்சாத்தி கிராம மக்களுக்கு ஆதரவு கொடுத்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும் தமிழ்நாடு மலைவாழ் மக்கள் அமைப்பையும் மிக்க நன்றியுடன் நினைவு கூர்ந்தார். "எப்படி எங்களால் அவர்களை மறக்க முடியும் ? சீருடை அணிந்த நபர்களின் அதிரடித் தாக்குதலில் நாங்கள் தவித்த சமயத்தில் எந்த அரசியல்வாதியும் வந்து எங்களை, கிராமத்தை பார்க்கவில்லை. எங்களில் பலர் குழந்தைகளோடு சிறையில் வாடிக்கிடந்தோம். கிராமத்து மக்கள் பலர் மலைப்பகுதிகளில் ஒளிந்து திரிந்தோம். அவர்கள்தான் எங்களை காப்பாற்ற வந்தார்கள். எங்களுக்கு உணவு, உடுத்த உடை, சமைக்கப்பாத்திரங்கள் தந்தார்கள். இது எல்லாவற்றுக்கும் மேலாக அப்பாவி மக்களான எங்கள் மீது அவிழ்த்துவிடப்பட்ட ஆதிக்க அடக்குமுறையை மீறி எழுந்து நிற்கவும் எதிர்த்துப் போராடவும் கற்றுக்கொடுத்தவர்கள். அதனால்தான் வேறு கட்சிகாரர்கள் எங்களுக்கு நிவாரண பொருள்கள் கொடுத்திட முன் வந்தபோது மறுத்துவிட்டோம். ஏனென்றால், அவர்கள் நாங்கள் அவதிப்பட்ட நேரத்தில் கண்களை மூடிக்கொண்டிருந்தார்கள்" என்றார் அப்பெண்மணி.

பாலியல் பலாத்காரத்துக்கு பலியான 18 பெண்களில் இவர் மகளும் ஒருவர். ரெய்டுக்கு பின்பு மகனும் மகளும் பள்ளியில் படிக்கச் செல்லவே இல்லை. "லத்திக் கம்பியினால் அடிக்கப்பட்டதைவிட வாயினால் பேசிய அவதூறுகளும் அவமானங்களை குவித்த வார்த்தைகளின் கொடூரங்களும் ஆறாத வடுக்களாக எங்கள் நெஞ்சில் நிலைத்திருக்கின்றன" என்று கம்மிய குரலில் பேசினார் அவர். பழங்குடி கிராமத்தில் வேறு பல பெண்களும் இதேபோன்ற உணர்வுகளை வெளிப்படுத்தினர். சி.அலமேலு என்னும் விவசாயத் தொழிலாளி தான் பத்து வயதாக இருக்கும்போது நடந்த அத்தாக்குதலில் தம் வீடு மிக மோசமாக சேதமடைந்ததை கூறினார். மலையில் தன் பெரியவர்களோடு ஒளிந்து கொண்டிருந்தார். "கிராமத்துக்கு நாங்கள் திரும்பியபோது எங்கள் வீட்டுமனைப் பட்டாக்கள் ரெய்டு நடத்தியவர்களால் துண்டு துண்டுகளாய் கிழித்துப் போடப்பட்டிருந்தன."

வி. வெள்ளச்சி என்ற வயதான விவசாய தொழிலாளி ரெய்டு நடத்திய கூட்டுக் கும்பல் வீட்டில் இருந்தார் என்றும் உடைகளை களைந்து கம்பினால் உதைத்து முடித்தனர் என்றும் கூறினார். பி. உண்ணாமலை, கே. பஞ்சாலம் மற்றும் எம். ராமாயி என்னும் பழங்குடி இனப்பெண்கள் தாக்குதலால் பாதிக்கப்பட்ட இன்னும் சிலராகும். கிராமத்துத் தலைவர் பெருமாளின் சகோதரி பி.லட்சுமி கூறும்போது, ரெய்டு நடத்தியவர்கள் குழந்தைகளைகூட விட்டு, வைக்கவில்லை என்று கூறினார். "என் சகோதரரை அடித்த மோசமான அடியில் நடக்கவே முடியவில்லை. என் நாத்தனாரின் கை எலும்பு முறிந்தது. ஆறுமாதக் குழந்தையைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்களில் அவருடைய இரண்டு மகள்களும் உண்டு. பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான இன்னொரு பெண் கூறினார். "அந்த கொடுமை மிகுந்த துயரத்திலிருந்து அவ்வளவு எளிதாக வெளியில் வந்துவிட முடியாது. 19 வருடங்களுக்கு முன்னாள் எங்கள் கிராமத்தில் நடந்த சம்பவங்களை என்னால் மறக்க முடியவில்லை. அந்த கொடூரங்களை நாங்கள் சமாளித்துதான் ஆக வேண்டும். நடந்த செயல்களுக்கான பரிகாரமாக அரசாங்கம் உடனே ஏதாவது தொழில் துவங்கி உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கினால் மிகுந்த எண்ணிக்கையில் வேலை தேடி திருப்பூர் போன்ற இடங்களுக்கு புலம் பெயர்ந்து இளைஞர்களுக்கு மாற்றாக இருக்கும்" என்று கூறினார்.

நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்றுப் பேசிய தமிர்நாடு பழங்குடியினரமைப்பு பொதுச் செயலாளர் சண்முகம் குற்றஞ்சாட்டப்பட்ட அனைவருக்கும் தண்டனை வழங்கி தீர்ப்பளித்ததன் மூலம் நாட்டிலுள்ள அனைத்து பழங்குடியினருக்கும் தங்கள் மீது தீங்கிழைக்கும் மற்றும் கொடுமைப் படுத்துபவர்களை எதிர்த்துப் போராடுவதற்கான பெரிய நம்பிக்கை வந்திருக்கின்றது என்றார். பேசத்திரானியற்ற மக்களை இப்படிப்பாடு படுத்துகின்ற அனைவருக்கும் இது ஒரு எச்சரிக்கையாகவும் இருக்கும் என்றார். இந்த வழக்கு பற்றிய விவரங்களை ஒரு செய்திப்படமாகவும் ஆவணமாகவும் தயாரிக்கப்பட்டு பல தேசிய மொழிகளில் வெளிக்கொணரப்பட்டு பழங்குடியினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்று கூறினார். அரசாங்கம் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் இரண்டு ஏக்கர் நிலம் வழங்குவது உட்பட மறுவாழ்வுக்கான திட்டங்கள் தீட்டி பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இழப்பீடுதனை அதிகப்படுத்தி தர வேண்டும் என்று கூறினார்.

உள்ளூர் சட்டசபை அங்கத்தினரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவருமான டில்லிபாபு சொன்னதாவது: தமிழ்நாடு பழங்குடியினரமைப்பு மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவுடனான பழங்குடி மக்களின் நீடித்த நிலைத்த 18 வருடப் போராட்டம் நீதிப்பெற்றுத் தந்திருக்கிறது. தாக்குதலினால் கிராமம் மொத்ததும் உருக்குலைக்கப்பட்டு, வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டு குடி தண்ணீர் மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருக்கும் வாச்சாத்தி கிராமத்தை அரசாங்க உயர்மட்டக் குழு ஒன்று பார்வையிட்டு மறுவாழ்வுக்கான மக்களின் ஆலோசனைகளைப் பெற்று செயல்பாடுகள் தொடங்கப்பட வேண்டும் என்று கூறினார். போதுமான இழப்பீடு அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை என்றும் கூறினார். அகில இந்திய வழக்குரைஞர் சங்கத்தின் மாநிலப் பிரிவின் உபதலைவர் சம்கிராஜ் கூறியது; அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் இரட்டை வேட நடவடிக்கைகள் கடந்த 19 வருடங்களாக பழங்குடி மக்களின் வாழ்க்கையை பாழ்படுத்தத்தான் செய்திருக்கின்றது என்றார். குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் குற்றம் புரிந்தவர்கள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது எதிர்பார்க்காதது. பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான பெண்கள் அனைவரும் நீதிமன்றத்தில் தைரியமாக சாட்சி கூறியது. அவர்கள் எந்தவிதமான ஒதுக்கி வைத்தல் பழக்கங்களுக்கும் அடிமையாக இல்லாததால் முடிந்திருக்கின்றது என்று மேலும் கூறினார்.

உயர்நீதிமன்றத்தில் ஜுலை 30ம் தேதி பதிவு செய்தனர். ஆனால், அவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டது. காரணம் சொல்லப்பட்டது என்னவென்றால் அரசாங்க அதிகாரிகள் அவ்விதம் நடந்து கொண்டிருக்கமாட்டார்கள் என்றும் எனவே பொதுநல வழக்காக எடுத்துக்கொள்ள முடியாதென்று சொல்லப்பட்டது. நல்லசிவன் செப்டம்பர் 3ம் தேதியன்று 'ரிட் மனு' ஒன்றை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். உச்சநீதிமன்றம் அம்மனுவை நான்கு நாட்களுக்குப் பின்பு உயர்நீதிமன்றத்துக்கு மாற்றி அனுப்பி எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் விசாரிக்க ஆணையிட்டுக்கொண்டது.

மாற்றி அனுப்பப்பட்ட ரிட் மனு அரசுக்கு ஆணை பிறப்பிக்கும் ரிட் மனுவாக உயர்நீதிமன்றத்துக்கு வந்து ஜுன் 20, 1992 முதல் என்ன நடந்தது என்று விசாரிக்க வேண்டும் என்றும் அதன்பின் வாச்சாத்தி மக்கள் சந்தித்த துயரங்களை தீரவிசாரிக்க ஆணையிட்டது. தவறாக நடந்துகொண்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் பலியானவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் கேட்டுக்கொண்டது. அந்தப் பகுதிகளில் நடக்கும் சந்தனக் கடத்தல் விவகாரத்தினை ஆராய்ந்து அறிந்து “அரசியல்வாதிகள், குற்றவாளிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் (அரசு நிர்வாக அதிகாரிகள்) கூட்டை ஒழிக்க வேண்டும்” என்றும் கேட்டுக்கொண்டது.

நவம்பர் 14ம் தேதி உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. அதன்படி அடிப்படை வசதிகளை அக்கிராமத்துக்கு மீட்டுத் தரும்படியும் அட்டவணை ஜாதியினர் மற்றும் பழங்குடியின ஆணையர் அக்கிராமத்தை பார்வையிட்டு இரண்டு வாரத்துக்குள் அறிக்கை அனுப்பக் கேட்டுக்கொண்டது. மேலும் நீதிமன்றம் மாவட்ட ஆட்சியர் அக்கிராமத்துக்கு அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டதா என உறுதி செய்யுமாறு ஆலோசனை கூறியது.

“இவ்வழக்கு தினசரி விசாரணை நடத்தியதாலும் அரசாங்க அதிகாரிகள் சாமர்த்தியமாக ஒவ்வொரு முறையும் தாக்குதல் நடத்தப்படவேயில்லை என்று எதிர்மனு கொடுத்து வந்ததாலும் உயர்நீதிமன்றத்துக்கு மத்திய புலனாய்வுத்துறையிடம் 18 பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டதையும் ஊருக்குள் புகுந்து கொள்ளையடித்ததையும் 90 பெண்கள் மற்றும் 28 குழந்தைகளை சட்டத்துக்குப் புறம்பாக அடைத்து வைத்திருந்ததையும் விசாரணை செய்ய உத்தரவிடுவதற்கு மூன்று ஆண்டுகாலம் பிடித்தது. ஆர்.டி.ஒ.(RDO) விசாரித்த விதம் மற்றும் அவர் முடிவுக்கு வந்தவிதத்தை நீதிமன்றம் கண்டனம் செய்தது” என்று சம்கிராஜ் கூறினார்.

பிப்ரவரி 24, 1995ல் நீதிபதி வெளியிட்ட ஆணையில் கூறப்பட்டதாவது: “இந்த எல்லா விஷயங்களையும் வைத்துப் பார்க்கும்போது காவல்துறை விசாரணை மேற்கொள்வதை 18 பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்கு உட்பட்ட புகார் மனு மற்றும் அதுதொடர்பான பிறவற்றையும் குறித்தான விசாரணையை தள்ளிப்போடுவதையே குறிக்கோளாக கொண்டுள்ளது என்பதை எளிதாக ஊகித்து முடிவுக்கு வரமுடியும். இது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். இவைகளை கணக்கில் எடுத்துப்பார்க்கும்போது மத்தியப் புலனாய்வுத்துறை இதில் கால் பதித்து விசாரித்தறிந்து சட்டப்பூர்வமாக என்ன தேவையோ” அதைச் செய்ய வேண்டும்”.

சட்ட நடவடிக்கையை தாமதப்படுத்தும் மாநில அரசு ரிட் மனுவை பதிவு செய்து மத்திய புலனாய்வு ஏற்பதில் மறுப்பு தெரிவித்தது. இதில் அரசாங்கத்தின் வாதம் என்னவென்றால் உள்ளூர் காவல்துறையைவிட மத்தியப் புலனாய்வு கொலை மற்றும் ரகளை போன்ற வழக்குகளில் பெரிய அளவில் விசாரணை செய்துவிட பெரிய வாய்ப்புகள் ஏதுமில்லை. சிறப்பான காரணங்கள் இருந்தால்தான் மத்திய உளவுத்துறை விசாரணை மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்பதாகும்.

மத்திய உளவுத்துறை விசாரணை மேற்கொள்ளக்கூடாது என்று அரசு தரப்பில் விண்ணப்பித்த இடைக்கால தடை உத்தரவை நிராகரித்த டிவிசன் பெஞ்ச் மார்ச் 23ல் 1995 கூறியதாவது: “வழக்கின் சம்பவம் மற்றும் சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கும்போது அப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கவேயில்லை என்று மாநில அரசாங்கம் நிலைப்பாடு கொள்வதால் மாநில அரசும் மற்றும் மாநில காவல்துறையும் சம்பந்தப்படாத ஒரு அமைப்பிடம் விசாரணை பொறுப்பை ஒப்படைப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.” இந்த டிவிசன் பெஞ்ச் ஆணையை ரத்து செய்யுமாறு உச்சநீதிமன்றத்தை மாநில அரசு அணுகியது. ஆனால், இந்த அரசு விண்ணப்பத்தை உச்சநீதிமன்றம் மார்ச் 24, 1995 தேதியன்று தள்ளுபடி செய்தது.

ஜுலை 15, 1995 அன்று மாநில அரசு ஒரு தர்மசங்கடமான நிலைக்கு தள்ளப்பட்டது. அது என்னவென்றால் கூடுதல் மாவட்ட செசன்ஸ் நீதிபதி பானுமதி தலைமையிலான விசாரணை குழு (கமிஷன்) சந்தனக்கடத்தல் வீரப்பனைப் பிடிக்க ஏற்படுத்தப்பட்ட சிறப்பு காவல்படை மலைவாழ் பழங்குடி இனப் பெண்கள் இருவரை பாலியல் பலாத்காரம் செய்தது மற்றும் ஏழு நபர்களை சித்ரவதை செய்தது கோவை மாவட்டத்து சின்னம்பட்டி கிராமத்தில் என்று குற்றஞ்சாட்டியது.

மத்திய உளவுத்துறை விசாரணை மேற்கொள்வதை தவிர்க்க முடியாது என்று உணர்ந்து கொண்ட மாநில அரசு எல்லாவித பிரச்சனைகளையும் கொண்டு வந்து செசன்ஸ் நீதிமன்றம் விசாரிக்க தாமதப்படுத்தியது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் ஒத்துழைப்பு கிடைக்காததால் இன்னாரென்று அடையாளம் காட்டும் பரேடு நான்கு முறை தள்ளிப்போடப்பட்டது. இந்த அடையாளம் காட்டுவதை தடுக்கும் அரசின் முயற்சி உயர்நீதிமன்றத்தால் வீணாக்கப்பட்டது என கண்டித்து எஸ். ஜகநாதன் தலைமையிலான மத்திய புலனாய்வு உண்மையை வெளிக்கொணர்வதில் ஆற்றிய பங்கு எல்லோராலும் ஒரே சேரப் பாராட்டப்பட்டது. மிகுந்த

சிரத்தையோடு தயாரிக்கப்பட்ட மத்திய உளவுத்துறையின் (CBI) அறிக்கை சென்னை உயர்நீதிமன்றத்தில் ஏப்.25, 1996 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. கோயம்பத்தூரிலுள்ள முதன்மை நீதிபதியிடம் 269 நபர்களுக்கு (காவல், வனத்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள்) பலாத்காரம் உள்ளிட்ட பலவித குற்றங்கள் அடங்கிய குற்றப்பத்திரிகை இரண்டு நாள் முன்பு (23.4.1996) பதிவு செய்யப்பட்டது. இந்த 269 நபர்களில் நால்வர் வனத்துறை உயரதிகாரிகள் (IFS) மொத்தம் 244 நபர்கள் கைது செய்து காவலில் வைக்கப்பட்டனர். இவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 143, 147, 149, 323, 427, 201 மற்றும் 203ன் கீழும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும் குற்றஞ்சாட்டப்பட்டது. அக்டோபர் 10, 1996 அன்று இவ்வழக்கு தர்மபுரி மாவட்டத்திலிருந்த கிருஷ்ணகிரியிலுள்ள மாவட்ட மற்றும் செசன்ஸ் நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

ஏறத்தாழ ஆறு ஆண்டுகளாக இவ்வழக்கில் மேற்கொண்டு எதுவும் நடைபெறாத காரணத்தால் ஜனவரி 30, 2002 அன்று சிறப்பு நீதிமன்றம் ஒன்றை அமைக்குமாறு வன்கொடுமை தடுப்புச்சட்டம் பிரிவு 14ன் படி ரிட் மனு ஒன்று பதிவு செய்யப்பட்டது. சிறப்பு பொது வழக்கறிஞர் ஒருவரை நியமிக்குமாறும் ரிட் மனுவில் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதற்கு அப்புறம்தான் உயர்நீதிமன்றம் மாநில அரசுக்கு ஜூன் 27, 2002 அன்று மத்திய உளவுத்துறையைச் சார்ந்த கே. ஜெயபாலன் நியமித்து கிருஷ்ணகிரியிலுள்ள நீதிமன்றத்தில் வழக்கை நடத்த உத்தரவிட்டது என்று சம்கி மேலும் கூறினார்.

வழக்கு விசாரணையை பல முறை தள்ளி வைக்க வேண்டியதாயிற்று. ஏனெனில், நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆஜராகாத காரணத்தால் வனத்துறையை சார்ந்தவர்களின் வருகை நடைபெறாததால் நீதிமன்றம் பலமுறை தட்டிக் கேட்க நேரிட்டது. நீதிமன்ற வளாகத்துக்குள் புதிய அரங்கம் ஒன்றே கட்ட வேண்டியதாயிற்று. அதிக எண்ணிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இருந்த காரணத்தால் ஏப்ரல் 2002ல் மீண்டும் அணுக வேண்டி வந்தது. வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி அவ்விதிகளின்படி (1995) இழப்பீடு ஜூலை 2007ல்தான் வழங்கப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் எல்லா முயற்சிகளும் (விடுவிக்கக் கோரியது) முறியடிக்கப்பட்டது. எனவே, அவர்களில் ஏழு நபர்கள் மாவட்ட ஆட்சியர் காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் ஆர்.டி.ஓ. வையும் இணைத்து குற்றவழக்கை ஆரம்பத்திலிருந்து நடத்துமாறு உயர்நீதிமன்றத்தில் கோரிக்கை வைத்தது. ஜூன் 24ம் தேதி நீதிமன்றம் இது தேவையில்லாதது என்று கூறி நிராகரித்தது. விசாரணை ஏறத்தாழ முடிவு அடைந்துவிட்ட நிலையில் தாமதப்படுத்தும் எந்தவித நடவடிக்கைக்கும் இடமில்லை என்று உச்சநீதிமன்றம் கூறிவிட்டதோடு வழக்கு விசாரணையை துரிதப்படுத்திட கீழ் நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டது. அந்த ஏழுநபர்கள் தலா ரூ.10000 வழங்குமாறும் உத்தரவிட்டது.மிகப்பெரியதொரு விசயம் பலரின் கவனத்தில் இருந்து தப்பிவிட்டதென்னவென்றால் அரசியலில் செல்வாக்குள்ள சந்தனக் கடத்தல்காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையிலான உள்கூட்டு. அதனால் அதிகாரிகள் குற்றத்தை ஒன்றுமறியா கிராமவாசிகளின் மீது திருப்பிவிடுவதைதான் வழக்கமாய் வைத்திருந்தனர். இந்த விசயம் நல்ல சிவனின் ரிட் மனுவில் குறிப்பிடப்பட்டதோடு மத்திய புலனாய்வுத்துறை அறிக்கையிலும் அட்டவணை ஜாதி மற்றும் பழங்குடியினர் துறை இயக்குநர் பானுமதி அறிக்கையிலும் ஆகஸ்ட் 1992 இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"வாச்சாத்தி கிராம ஜனத்தொகையில் மூன்றில் இரண்டு விகிதம் பேர் நிலமற்ற விவசாய தொழிலாளர்கள். இவர்கள் காட்டு விளை பொருட்களை மற்றும் விறகுகளை சேகரித்து விற்று பிழைப்பவர்கள். சந்தனக் கடத்தலில் ஒரு சிலர் ஈடுபடுத்தப்பட்டிருக்கலாம் என்பது உண்மை என்றாலும் அவர்களை பயன்படுத்துபவர்கள் மிகப்பெரிய ஆட்கள்தான். கடத்துவதற்கு என்று இவர்களை உபயோகப்படுத்துவது பலம் மிகுந்தவர்கள்தான் பெரிய கும்பலை அந்த அதிகாரம் படைத்தவர்களை வழக்குக்கு கொண்டு வராமல் அப்பாவிகளான கிராமவாசிகளை மட்டும் சட்டவிரோத வாணிபம் என்று சொல்லி தண்டிக்க முடியாது" என்று பானுமதி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மத்திய புலனாய்வு அறிக்கையில் இந்த கடத்தல்காரர்களுக்கும் வனத்துறை அலுவலர்களுக்கும் உள்ள உள்கூட்டு பற்றி வெளிப்படுத்தப்பட்டு உள்ளது. சித்தேரி மலைப்பகுதியில் சட்டத்திற்கு புறம்பாக சேகரிக்கப்பட்ட சந்தன கட்டைகளை அனுப்ப வசதியாக வாச்சாத்தியும் அருகிலுள்ள கிராமங்களும் பயன்பட்டிருக்கின்றன. வனத்துறையின் களப்பணியாளர்கள் கடத்தல்காரர்களோடு திரைமறைவில் இணைந்து செயல்பட்டிருக்கின்றார்கள் என்று மேலும் அவ்வறிக்கை கூறுகிறது. உண்மையில் ஆய்வறிக்கைதன்னில் "துண்டு சீட்டு / டோக்கன் அமைப்பு பின்பற்றப்பட்டிருக்கிறது. சந்தன கட்டைகளை வெட்டுவது, கடத்துவது, ஆற்றுப்படுகையில் மறைத்து வைப்பது மற்றும் பட்டா நிலங்களில் ஒளித்து வைப்பது போன்றவை நிகழ்ந்து வந்திருக்கின்றது கடத்தல் கட்டைகள் இறுதி இலக்கை அடைவதற்கு முன்னால்" கூறப்பட்டுள்ளது.

வாச்சாத்தி கிராமத்தின் வாழ்க்கை தரம் மற்றும் பொருளாதார அந்தஸ்தை வைத்து பார்க்கும்போது அவர்கள் முக்கியக் கடத்தல்காரர்களாக இருந்திருக்க முடியாது. அலுவலகக் கோப்புகள் மற்றும் மறைமுகத் தகவல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிவதென்னவென்றால் கிராமத்தார்கள் மேலோட்டமான பணிகளில் தான் இருந்திருக்கிறார்கள்... கிடைத்ததைப் பங்கு போட்டுக்கொள்வதில் வனத்துறையில் இருந்த ஊழல்பேர்வழிகளுக்குள் அதிருப்தி இருந்து வந்திருக்கின்றது".

**ஆதாரம் : Front Line, Nov. 2011**

# ஆம்னெஸ்டி இன்டர்நேசனல் அறிக்கை 2011
# உலகின் மனித உரிமைகள் நிலை

## இந்தியா

**இந்தியக் குடியரசு:**

நாட்டின் தலைமை – பிரதிபா பட்டீல்
அரசின் தலைமை – மன்மோகன் சிங்
மரண தண்டனை – நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது
ஜனத்தொகை – 1214.5 மில்லியன் உள்ளது.
சராசரி வயது – 64. 4 வருடங்கள்
ஐந்து வயதுக்கு கீழ்
இறப்பு ஆண் / பெண் – 77/86–1000க்கு
வயதுவந்தோர் கல்வி – 62.8 சதவீதம்

**ஆயுதந்தாங்கிய மாவோயிஸ்டுகள் மற்றும் அரசின் பாதுகாப்புப் படைகளுக்கு இடையிலான மோதல்கள் சட்டீஸ்கர், ஜார்க்கண்ட் மற்றும் மேற்கு வங்காள மாநிலங்களில் அதிகரித்து வருகின்றது. இந்த மாநிலங்களில் குண்டு வெடிப்புகள் காரணமாக 350 நபர் கொல்லப்பட்டனர். அசாம் மற்றும் பிற மாநிலங்களில் இன ரீதியாக தாக்குதல்கள் தொடர்கின்றன. பழங்குடி (ஆதிவாசி) மற்றும் சிறுபான்மையினரின் போராட்டங்கள் தொடர்கிறது. தங்கள் நிலங்களை மற்றும் இயற்கை வளங்களை அவர்களிடம் ஆலோசிக்காமலே வணிக நிறுவனங்களுக்கு கொடுப்பதை எதிர்த்து நடக்கும் போராட்டமிது. மனித உரிமைக்காவலர்கள் இது தொடர்பான வழக்குகளில் அரசு மற்றும் தனியார் தரகர்களால் தாக்கப்படுகின்றனர். அதுவும் அரசியல் ஆதாயத்துக்காக அவர்கள் மீது பொய் வழக்குகளும் போடப்படுகின்றன. ஜூன் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் நூற்றுக்கும் அதிகமான மக்கள் அதிலும் இளவயதினர் காஷ்மீர் பள்ளத்தாக்குகளில் போராட்டத்தின்போது கொல்லப்பட்டனர். சித்ரவதை மற்றும் மோசமான செயல்பாடுகள், நீதியற்ற கொலைகள், காவலில் சாவு மற்றும் நிர்வாகத்தினரே அடைத்து வைத்தல் போன்றவை மிதமிஞ்சிய அளவில் தொடர்ந்து நடந்து வருகின்றன. மனித உரிமைகளைக் காக்க நிறுவப்பட்ட நிறுவனங்கள் மற்றும் மனித உரிமைக் காவலர்கள் பலமிழந்து செயல்படுகின்றன. ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிமன்றம் தொடர்பான செயல்பாடுகள் நீதி பெற்றுத் தருவதில் தோல்வி கண்டு வருகின்றது. குறைந்தபட்சம் 105 நபர்களாவது மரணதண்டனையை தீர்ப்பாக பெற்றுள்ளனர். ஆனால், தொடர்ந்து ஆறாவது வருடமாக அத்தண்டனை நிறைவேற்றப்படவில்லை.**

**பின்னணி:** இந்தியாவின் வேகமான பொருளாதார முன்னேற்றம் என்பது நகர்ப்புறங்களிலும் புறநகர்ப் பகுதிகளுக்கு மட்டும் வந்திருக்கிறது. இந்தியாவின் பெரும்பாலான ஊரகப் பகுதிகள் அல்லது கிராமப் பகுதிகள் வறுமையின் கோரப்பிடியில் விவசாய நெருக்கடி மற்றும் உணவுப் பற்றாக்குறையால் தவிக்கின்றன. அதிகாரவட்டங்கள் தரும் தகவல்களின்படி 30 முதல் 50 சதவீத மக்கள் வறுமைப்பிடியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களிலும் கிராமப் பகுதிகளில் வருடத்தில் 100 நாள் வேலை காரணமாக ஓரளவு சமாளிக்க முடிந்தாலும் அதிகாரிகள் தேசிய குறைந்த ஊதியத்துக்கும் குறைவாகத்தான் கூலி தருகிறார்கள்.

அமெரிக்க அதிபர் ஒபாமா பாராக்கின் நவம்பர் மாதத்தில் இந்தியாவைப் பார்வையிட்டது. சர்வதேச அளவிலும் பிராந்திய அளவிலும் பெரிதாக ஒன்றும் அந்தஸ்தை உயர்த்திடவில்லை. எப்படி இருந்தபோதிலும் மனித உரிமைகளைவிட பொருளாதாரம் மற்றும் யுத்த தந்திரங்களில்தான் அதிக அக்கறை இந்தியாவில் காட்டப்படுகிறது. இந்திய அதிகாரிகள் பக்கத்து நாடுகளான மியான்மர் மற்றும் இலங்கையில் 2009 போரில் அதிகாரிகளின் மனித உரிமை மீறல் செய்திகள் பற்றிப் பேசுவதில்லை.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள உறவு வலுவாக இல்லை. அதிலும் நவம்பர் 2008ல் மும்பையில் நடந்த தாக்குதலுக்கு பின் இன்னும் மோசாக காஷ்மீரிலும் சுதந்திரத்துக்கு முந்தைய நிலைய காரணமாக இந்திய நிர்வாக குளறுபடியால் உறவுகள் சரியாக இல்லை.

### எல்லைக் காவல், இராணுவம் மற்றும் மாவோயிஸ்டுகளின் இடையிலான வன்முறை:

சட்டீஸ்கரில் இராணுவம் மற்றும் மாவோயிஸ்டுகள் மற்றும் அரசினரின் ஆதரவுடையதாக நம்பப்படும் சல்வா ஜீடும் மிலிசியா. இவர்களிடையே எப்போதும் சச்சரவு இருந்துகொண்டேயிருக்கிறது. நவம்பரில் உச்சநீதிமன்றத்தில் அரசின் தண்டிக்கப்படாத தன்மை குறித்து வழக்கு நடந்து கொண்டிருந்தபோது மிலிசியா செயல்பாட்டில் இல்லை என்று அரசு அதிகாரிகளால் கொல்லப்பட்டது. ஆனால், மனித உரிமை நிறுவனங்கள் உள்ளூர் அமைதிப்படை என உருமாறி இருப்பதாகக் கூறின.

இதுபோன்றே ஜார்கண்டு மற்றும் மேற்கு வங்காளத்தில் பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளில் சச்சரவு ஏற்பட்டது. இரண்டு சண்டை பிரிவுகளும் பொதுமக்கள் பழங்குடியினரையே குறிவைத்து தாக்கினர். ஏறத்தாழ 30000 பழங்குடியினர் சத்தீஸ்கரிலேயே இடமாற்றம் செய்யப்பட்டனர். இவர்களில் 10,000 நபர்கள் 'காம்ப்'களிலும் மீத 20000 நபர்கள் அருகிலுள்ள ஆந்திரா மற்றும் ஒரிசா மாநிலத்தில் வாழ்ந்து வரலாயினர்.

- மே மாதத்தில் 144 பயணிகள் கொல்லப்பட்டார்கள் மற்றும் 200 நபர்கள் காயமடைந்தார்கள். இது மேற்கு மனிப்பூர் மாவட்டத்தில் ஒரு ரயில் வண்டி தண்டவாளத்தில் நிகழ்ந்த குண்டு வெடிப்பால் தடம் புரண்டதில் நேர்ந்தது. இந்த பகுதி வழக்கமாக மாவோயிஸ்டுகளாலும் ஆளுங்கட்சியான கம்யூனிஸ்டுக் கட்சிகளாலும் (மார்க்சிஸ்ட்) வன்முறையை சந்தித்து வருகின்றது. மேலும் மத்திய பாரா ராணுவ படைகளும் இந்த வன்முறைச் சம்பவங்கள் நிகழ்வதில் அடங்குவர். ஆகஸ்டு மாதத்தில் குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்களுள் ஒருவரான உமாகாந்த் மகதாவோ, போலீஸ் அராஜகத்துக்கு எதிரான பழங்குடி மக்களின் குழுவின் (PC PAI) தலைவர் சட்டத்திற்கு மாறாக நீதிமன்ற உத்தரவின்றி கொல்லப்பட்டார். இந்த வகையில் அரசியல் வன்முறை சம்பவத்திலுனூடே மூன்று கம்யூனிச (மார்க்சிஸ்ட்) ஆதரவாளர்கள் PCPAவால் கொல்லப்பட்டார்கள்.
- செப்டம்பர் மாதத்தில் எல்லைக் காவல் படையினர் மாவோயிஸ்டுகளை அழிக்கும் பணியில் 40 ஆதிவாசிகளை சிறைப் பிடித்ததோடு அவர்களை நிர்வாணமாக்கி சித்திரவதைக்கு உள்ளாக்கின. மேலும் 17 பிற நபர்களை சிறைக்குள் தள்ளினர். அவர்களுள் 16 வயதுப் பையனும் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளான இரு பெண்களும் அடங்குவர். ஆரம்பகட்ட விசாரணையில் வெளியான இது வன்முறைகள் எல்லை காவல் படையினரால் நிகழ்ந்தது குறித்து அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முன் வரவில்லை.
- அமைதிச் செயல்பாட்டாளர்களான வனவாசி சேத்தனா ஆசிரமம் என்னும் காந்திய அரசு சாரா நிறுவனம் (NGO) சட்டீஸ்கரில் அமைதிப்பணி ஆற்றுவதிலிருந்து கட்டாயமாக நிறுத்தி வைக்கப்பட்டனர். இதன் நிறுவனர் ஹிமன் சுகுமார் என்பவர் சல்வா ஜீடும் மற்றும் பாரா ராணுவ சக்திகளால் தண்டிவாட நகரத்திலிருந்து வெளியேற்றப்பட்டதோடு பின் மீண்டும் திரும்பிடவே இல்லை.
- செப்டம்பரில் சட்டீஸ்கரின் காவல்துறை ஆதிவாசி தலைவரும் கைதியுமான கர்டாம் ஜோகா என்பவரின் மீது குற்றஞ்சாட்டியதை உச்சநீதிமன்றம் விசாரணை நடத்தியது. இதில் இவர் மாவோயிஸ்டுகளோடு தொடர்பு வைத்து இருந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது.
- டிசம்பர் மாதத்தில் மருத்துவ பணியோடு மனித உரிமைக் காவலருமான கைதி பினாயக் சென் அவர்கள் மாவோயிஸ்டுகளின் தொடர்பிலிருந்ததற்காக என்று உள்ளூர் நீதிமன்றம் முடிவு செய்து அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது.

## வணிகப் பொறுப்புடைமை

உள்ளூர் வாசிகளிடம் அதிலும் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்ட மக்களிடம் (சுரங்கப்பணி, நீர்தேக்கம் மற்றும் பிற பணித்திட்டங்களில்) கலந்தாசிக்காமலும் அவர்களுடைய பாதுகாப்பை கணக்கில் எடுக்கவும் தனியார் வணிக நிறுவனங்களும் அரசு அதிகாரிகள் தவறவிட்டனர். பல மாநிலங்களில் ஆதிவாசி மக்கள் மற்றும் சிறுபான்மையினர். இதுபோன்ற ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக போராடி சிலர் வெற்றியும் பெற்றனர். அரசியலமைப்புச் சட்டம் உறுதி அளித்த உரிமைகள் பறிபோனதால் வந்த இப்போராட்டங்கள் ஆதிக்க சக்திகளோடு போட்டியிட முடியாமல் தோற்றுப்போயின. அதிலும் சமீபத்திய நிலங்குறித்தான சட்டங்கள் வணிக நிறுவனங்களுக்கு சாதகமாகவும் மக்களுக்கு எதிராக செயல்படும் அச்சுறுத்தல் உள்ளது.

- ஆதிவாசி மக்களின் குறிப்பிடத்தக்க வெற்றி என்னவெனில் இந்திய அரசு ஒரிசாவிலுள்ள நியாம்கிரி குன்றுகளில் பாக்சைட் தோண்டி எடுக்க மறுத்துவிட்டதும் அதற்கு அருகிலுள்ள லான் கார் என்னுமிடத்தில் அலுமினிய சுத்திகரிப்பு ஆலை நிறுவ தடை விதித்ததும் ஆகும். இந்த திட்டங்கள் வேதாந்தா ஆதாரவனங்கள் மற்றும் ஒரிசா சுரங்க கார்போரேசன் ஆகியவற்றால் கொண்டுவரப்பட்டது. இந்த இரு திட்டங்களும் வனம் மற்றும் சுற்றுச்சூழலை பாதிக்கும் என்பதோடு டோங்கிரியா கோந்த் போன்ற பழங்குடி இன மக்களை பயன்படுத்தி சுரண்டலுக்கு வழிகோறும் என்பது கண்டுபிடிக்கப்பட்டதால் அனுமதி மறுக்கப்பட்டது.
- ஜூன் மாதம் போபால் நீதிமன்றம் யூனியன் கார்பைடு கம்பெனி பணியிலிருந்த 8 இந்திய நிர்வாகிகளை 1984–ல் நடந்த போபால் விஷவாயு விபத்துக்கு இரு வருட தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. விஷவாயுக் கசிவு நிகழ்ந்ததும் 7000 முதல் 10000 நபர்களை உடனடியாக கொன்றதோடு கடந்த 20 ஆண்டுகளில் 15000க்கும் மேற்பட்ட மக்களை கொன்றுள்ளது. இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தால் திரும்பவும் ஆகஸ்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மிகவும் எளிய, சிறிய தண்டனைகளே கொடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் கோபங்கொண்டுள்ளதின் அடிப்படையில் இது நிகழ்ந்துள்ளது.

**மிக அதிகப்படியான அதிகாரப் பிரயோகம்:**

- உள்ளூர் மக்கள் போராட்டங்கள் நிலங்களை வணிக நிறுவனங்களுக்காக எடுத்துக்கொண்டது, குடியிருப்புகளை வெளியேற்றி எதிர்த்து நடத்தினர். இந்தப் போராட்டங்களை காவல்துறை அளவுக்கு அதிகமான அதிகாரத்தை பயன்படுத்தி ஒடுக்கினர். இந்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை ஆளுங்கட்சி அரசியல் சக்திகள் வன்முறையால் எதிர்கொண்டபோது காப்பாற்றுவதற்கு காவல்துறை தவறிவிட்டது. இந்த நிகழ்வுகளில் அதிகாரிகளே பாரபட்சமற்ற உரிய நேரத்திலான விசாரணையை மேற்கொள்ளவில்லை.

- மே மாதம் ஆதிவாசித் தலைவர் இலக்குமன் ஜாமுண்டா கலிங்கா நகரில் (ஒரிசா) டாடா எஃகு நிறுவனம் துவங்க அரசு செய்த நில அபகரிப்பை எதிர்த்து போராடும்போது கொல்லப்பட்டார். 19 நபர்கள் காயப்பட்டனர். 10 நபர்கள் புல்லட் காயமடைந்தனர். 1000 காவல் அதிகாரிகள் கிராமங்களை சேதப்படுத்தினர். 200 தனியார் படையை சேர்ந்தவர்கள் கிராமத்தினுள் புகுந்து பல வீடுகளை நொறுக்கித் தள்ளினர்.

- மே மாதத்தில் ஒரிசாவிலுள்ள ஜகத்சிங்பூரில் தங்கள் நிலங்களை அரசு எடுத்து கொரியன் போகாங்க எஃகு கம்பெனிக்கு (போஸ்கோ – POSCO) கொடுத்ததை எதிர்த்து போராடிய 1000 விவசாயிகள் மீது கண்ணீர் புகை குண்டுகளை காவல்துறை வீசியதில் 20 நபர்கள் காயமுற்றன.

- ஜுலை மாதத்தில் ஆந்திர மாநிலத்தில் சோம்பேட நகரில் நாகர்ஜுனா கட்டிட கம்பெனியின் உலோக இயந்திர மின் தயாரிப்பிற்காக (thermal power plant) இடம் கைபற்றுதலை எதிர்த்து போராடியவர்களை காவல்துறையினர் சுட்டதில் இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்டனர். 5 நபர்கள் புல்லட் காயங்கள் பெற்றதும் மக்களின் 350 நபர்கள் மற்றும் 60 காவல்துறை அதிகாரிகள் 10 கிராமத்திலிருந்து வெளியேற்றும்போது காயமடைந்தனர். மறுநாள் அதிகாரிகள் சுற்றுச்சூழல் தடை உத்தரவை ரத்து செய்தனர். தொடர் போராட்டங்கள் நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தை மறு ஆய்வு செய்யும் நெருக்கடிக்கு தள்ள வேண்டியதாயிற்று. செப்டம்பரில் அதிகாரிகள் புதிய சட்டம் ஒன்றை கொண்டுவந்தனர். அதன்படி கிடைக்கும் நன்மைகளை உள்ளூர் மக்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டி இருப்பதோடு, ஆதிவாசி மற்றும் உள்ளூர்வாசிகளை திட்டம் ஆரம்பிக்கும் முன்னரே கலந்து ஆலோசிக்க வேண்டும் என்பதாகும். இது சட்டமாவதற்காக பாராளுமன்றத்தில் காத்திருக்கிறது.

**மனித உரிமைக் காப்பாளர்கள்:–**

- ஆதிவாசி மக்கள் மற்றும் பிற இனத்தவர்களின் நில உரிமைக்காக போராடும் மனித உரிமைக் காப்பாளர்கள் தனியார் கொடுங்கோல் அடியாட்களின் அச்சுறுத்துதலை சந்திக்க வேண்யிருக்கிறது.

- ஜனவரியில் சாதுசிங் தத்ழரா உள்ளூர் விவசாயிகளை அரசு நிலம் கையகப்படுத்துவதை எதிர்க்க தலைமை தாங்கியதற்காக பஞ்சாப் அமிர்தசர் மாவட்டத்தில் கொல்லப்பட்டார். கட்டிட ஒப்பந்ததாரர் மற்றும் ஊழல் அதிகாரிகளால் அக்டோபரில் பிர்திபாலசிங் அலிசார் என்னும் பிறதொரு விவசாயத் தலைவர் கொல்லப்பட்டார். இவர் கந்துவட்டிக்கடன்காரர்களை எதிர்த்து பிரச்சாரம் செய்தார் என்பதற்காக கொல்லப்பட்டார். இந்த இரண்டு வழக்குகளிலுமே காவல்துறை சரியாக விசாரித்து தவறு செய்தவர்களை நீதிக்கு கொண்டு வந்து நிறுத்தவில்லை என்று உள்ளூர் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

- ஜனவரியில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தி பூனாவில் அரசு நிலம் கையகப்படுத்துவதை எதிர்ப்பதை நிறுத்த மறுத்ததற்காக சதீஷ் ஷெட்டி கொலை செய்யப்பட்டார்.

- ஜுலையில் அமித் ஜெத்வா சட்டத்திற்கு புறம்பாக குஜராத்திலுள்ள கிர்வனப் பகுதியில் சுரங்க வேலை நடைபெறுவதை எதிர்த்து பிரச்சாரம் செய்தமைக்காகக் அகமதாபாத் உயர்நீதிமன்ற வளாகத்துக்கு வெளியில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

- மனித உரிமை மீறல் வன்முறையை எதிர்த்து பிரச்சாரம் செய்தவர்கள் அலைக்கழிக்கப்படுதல், அவமானப்படுத்தப்படுதல் மற்றும் பொய் வழக்குப் போடப்படுதல் போன்ற அலைக்கழிவுகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

- மார்ச் மற்றும் ஜுன் மாதத்தில் குஜராத் போலீஸ் துறை 13 செயல் பாட்டாளர்களை அடைத்து வைத்தது. இப்படி அடைக்கப்பட்டவர்களில் ஆதிவாசி தொழிலாளர் தலைவர் அவினாஸ் குல்கானியும் ஒருவர். ஆயுதந்தாங்கிய மாவோயிஸ்டுகளுடன் இவர்களுக்கு தொடர்பிருந்ததாக விசாரணைக்கு வழக்கில் இருக்கின்றனர்.

**தண்டனை விலக்கு:**

- விதி மீறல்களும் பெருந் தவறுகளும் நடந்து வருவது வளர்ந்துகொண்டே போகின்றது. வட கிழக்கு பகுதிகளில் தொடர்ந்து போராட்டங்கள் நடந்து வந்த போதிலும் இராணுவத்தினருக்கான சிறப்பு அதிகாரச் சட்டம் 1958ஐ திரும்பப் பெற அதிகாரிகள் விரும்பாததால் தண்டனைகள் எதுவுமில்லாமல் போக ஏதுவாயிருக்கிறது. உரிமை மீறல்கள் செய்பவர்கள் மற்றும் வன்முறையாளர்கள் தொடர்ந்து காணாமல் போகிவிடுதல், சட்டம் நீதிமன்ற ஆணையின்றி

கொன்றுவிடுதல் மற்றும் பிற உரிமை மீறல்கள் செயல்களை 1984 முதல் 1994 வரை பஞ்சாபிலும் 1998ல் இருந்து 2001 வரையிலும் நீதியின் பிடியிலிருந்து தப்பித்துக்கொண்டே வருகின்றார்கள். தலித் இனத்தினர்களை பல மாநிலங்களில் தாக்குவதோடு பாரபட்சமும் காட்டப்படுகின்றனர். இப்படிப்பட்ட வன்முறைகளை செய்பவர்களை தண்டிப்பதற்காக இயற்றப்பட்டன. முக்கிய சட்டங்களை பயன்படுத்த அதிகாரிகள் தவறவிட்டார்கள்.

### 1984ல் நடந்த படுகொலைகள்

செப்டம்பரில் உச்சநீதிமன்றம் காங்கிரஸ் கட்சித் தலைவர் சாஜ்சன் குமார் மீதான விசாரணையைத் தொடருமாறு கூறியது. பிறிதொரு காங்கிரஸ் கட்சி தலைவர் ஜகதீஷ் டைட்லர் மீதான வழக்கு ஏப்ரலில் டெல்லி நீதிமன்றம் ஒன்றால் முடித்து வைக்கப்பட்டது. இந்த இருவர் மீதும் 1984ல் பிரதம மந்திரியாயிருந்த இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டதை ஒட்டி பல்லாயிரக்கணக்கான சீக்கியர்களை கொன்று குவித்தவர்களை ஆதரித்தவர்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்கள்.

### சமூக வன்முறை

2002ம் வருடம் முஸ்லிம் சமூகத்தினரான சிறுபான்மையினரை குஜராத்தில் தாக்கியதற்கு காரணமாயிருந்தவர்கள் மீதான வழக்கில் முன்னேற்றம் எதுவுமில்லை. அத்தாக்குதலின்போது ஏறுத்தாழ 2000 மக்கள் கொல்லப்பட்டனர். வழக்கு நடவடிக்கைகளை அதிகாரிகளின் மெத்தனப் போக்காலும் சாட்சி சொல்பவர்களை மோசமாக நடத்தியதாலும் முக்கிய தடயங்களை கணக்கில் எடுத்துக்கொள்ளாததாலும் டெலிபோன் கோப்புகள் மற்றும் முக்கிய அரசியல் தலைவர்களுடனான தொடர்பு குறித்த தடயங்கள் அழிக்கப்பட்டதாலும் வழக்கு சரிவர நடைபெற முடியவில்லை. நீதி மற்றும் அமைதிக்குழு மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்காக அவர்தம் உரிமைகளை காப்பாற்ற முனைந்த வழக்கறிஞர்களை குஜராத் காவல்துறைக்கு எதிர்மறையாக சந்தித்தது.

### ஜம்மு மற்றும் காஷ்மீர்

கடந்த 1989ல் ஆயுதமேந்திய ராணுவக் கிளர்ச்சி காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல்போனதற்கான வன்முறை நடந்தும் அதற்கு காரணமானவர்கள் மீது தண்டனை ஏதுமின்றி தொடர்கிறது. வன்முறை மீதான அலுவலக விசாரணை என்பது மிகக் குறைவான அளவில்தான் நடந்திருக்கிறது.

- ஜூன் முதல் செப்டம்பர் வரை எல்லைக் காவல்படையும் காவல்துறையும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் கடந்த காலத்தில் நடத்திய வன்முறைக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களை சுட்டுத் தள்ளியது. நூற்றுக்கும் அதிகமான நபர்கள் பெரிதும் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். 800 நபர்கள் ஊடகப் பணியாளர் உட்பட காயமடைந்தனர். மாநில அரசு அதிகாரிகள் அமைத்த விசாரணைக்கு 17 நபர்களை 100 சாதிகளை விசாரித்தது. ஆம்னஸ்டி இன்டர்நேசனல் மற்றும் பிற அமைப்புகளும் சுதந்திரமான பாரபட்சமற்ற ஆழ்ந்த விசாரணை சாவுகளுக்கு வேண்டும் என்று கேட்டுக்கொண்டும் பலனெதுவுமில்லை. முன்னேற்றமும் ஏதுமில்லை.
- ஜனவரியிலிருந்து செப்டம்பர் வரை 322 மக்களை நிர்வாகத்திலிருக்கும் அதிகாரிகள் அடைத்து வைத்திருக்கின்றனர். பலத்த எதிர்ப்புக்கும் பின் சாபில் ஷா மற்றும் முகமது நாயிம்கான் இருவரையும் விடுதலை செய்தது.
- முஸ்தக் அகமது ஷேக் என்னும் 14 வயது நபரை வன்முறை போராட்டங்களில் பங்கு பெற்றார் என்று கூறி கைது செய்து ஏப்ரலில் ஸ்ரீநகரில் அடைத்து வைக்கப்பட்டார். பின்னர் இவர் உத்தம்பூர் மற்றும் ஜம்முவிலுள்ள சிறைக்கு மாற்றப்பட்டு தங்க வைக்கப்பட்டார்.

### நீதிமன்ற ஆணையின்றி நடநத் மரணங்கள்

தேசிய மனித உரிமைக் கழகம் வெளியிட்ட சமீபத்திய கணக்குப்படி 1993 முதல் 2008 வரை கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை 2560 மற்றும் நீதிமன்ற ஆணையின்றி நடந்த மரணங்கள் அதாவது மோதல் சாவுகள் என்னும் பெயரில் நட போலீசார் நடத்திய கொலை 1224ஆகும். வருட இறுதியில் மனித உரிமைக் கழகம் பாதிக்கப்பட்ட 16 நபர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்கியது. நீதிமன்ற ஆணையின்றி நிகழும் மரணங்களுக்கு காரணமானவர்களை தண்டிப்பது மிக அரிதான ஒன்று. அப்படியே நடவடிக்கைகள் நிகழ்ந்தாலும் அது மிக மிக மெதுவாக நகருவதாய் இருக்கும்.

- ஜனவரியில் உச்சநீதிமன்றம் மத்திய புலனாய்வு துறையை விசாரித்து 2005ஆம் வருடம் கொல்லப்பட்ட அல்லது மரணங்களை ஏற்படுத்திய உண்மையை வெளிக்கொணர ஆணையிட்டது. இது குஜராத் போலீஸ் நடத்திய போலி விசாரணையின்படி ஷொராபுதீன், அவர் மனைவி கெலிசார்பி மற்றும் துள்சிராம் பிரஜாபதி என்று சொல்லி கொல்லப்பட்டதன்பின் நடந்ததாகும்.
- நவம்பர் மாதத்தில் குஜராத் அரசு ஒரு சிறப்பு காவல்துறை குழு ஒன்றை நியமித்து இஸ்ரத் கான் மற்றும் மூன்று நபர்களை குஜராத் காவல்துறையால் கொல்லப்பட்டதை விசாரிக்கச் சொல்லியது.

### அராஜகமான கைதுகள் மற்றும் சிறை அடைப்புகள்

100 மக்களுக்கு மேல் எந்தவித குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்படாமல் சிறையில் அடைத்து

வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் டெல்லி, உத்தரபிரதேசம் மற்றும் இராஜஸ்தான் போன்ற பல மாநிலக்ங்ளில் குண்டு வெடிப்புக்கான காரணகர்த்தாக்கள் என்று சொல்லி கைது செய்யப்பட்டவர்கள். கைது செய்தவர்களை சித்ரவதை மற்றும் பிறமோசமான நடவடிக்கைகளை கண்டித்து முஸ்லிம் இந்து அமைப்புகள் போராட்டம் நடத்தின. 2008ல் மும்பையில் நடந்த தாக்குதலை அடுத்து பாதுகாப்பு சட்டத்தின்படி மேலும் இறுக்கமானது. தொடர்ந்த போராட்டங்களுக்குப் பின்னும் இராணுவத்துக்கான சிறப்பு அதிகாரச் சட்டம் 1958, திரும்பப் பெறப்படவில்லை. இந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு பாதுகாப்புப் படைகள் ஒரு சில குறிப்பிட்ட இடங்களிலும் மற்றும் சில மாநிலங்களிலும் கொல்வதற்காக துப்பாக்கிச் சூடு பயன்படுத்தி மனிதர்களை கொன்றனர். கொல்லப்பட வேண்டிய அளவுக்கு சூழ்நிலைகளோ பாதுகாப்புக் குறைவோ இல்லாதபோதும் தேவையற்ற விதத்தில் துப்பாக்கிச் சூடு பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது கவலை கொள்ளக் கூடிய ஒரு விசயமாகும்.

**மரணதண்டனை:** டிசம்பர் மாதத்தில் இந்திய ஐக்கியநாடுகள் சபையின் தீர்மானமான உலகந்தழுவிய மரண தண்டனை விதிப்பது குறித்து எதிர்ப்பை எதிர்த்து தெரிவித்துக்கொண்டது. குறைந்தது 105 நபர்கள் மீது மரணதண்டனை விதிக்கப்பட்டது. இதில் மும்பை தாக்குதல் 2008ல் தொடர்பு இருப்பதாக கூறப்பட்டு உயிரோடிருந்த ஒரே நபரான அஜ்மல்காப் என்பவரும் அடங்கும். எப்படியாயினும் தொடர்ந்து ஆறாவது வருடமாக எந்த மரணதண்டனை நிறைவேற்றப்படாததோடு 13 நபர்கள் ஆயுள் தண்டனைக்கு மாற்றப்பட்டார்கள். கடத்தல்காரர்களுக்கும் மரணதண்டனை வழங்கலாம் என சட்டத்தில் விரிவுப்படுத்தப்பட்டது. புதிய சட்டத்தின்கீழ் 16 மாநிலங்கள் மரண தண்டனைக்காக காத்திருப்பவர்களின் பட்டியலை வெளியிட்டாலும் பிற ஐந்து மாநிலங்கள் மறுப்பு தெரிவித்துவிட்டன.

**ஆம்னஸ்டி இன்டர்நேசனல் பார்வையிடல் / மற்றும் அறிக்கைகள்:** ஆம்னெஸ்டி இன்டர்நேசனல் பிரதிநிதிகள் இந்தியாவில் பார்வையிட்ட மாதங்கள் பிப்ரவரி, மே/ஜூன் மற்றும் டிசம்பர்.

- எங்களை உயிர் வாழ்தலின் இருந்து தோண்டிவிடாதீர்கள்: பாக்சைட் சுரங்கங்களில் சுத்திகரித்தல் தளங்களில் இந்திய வாழ்க்கை (ASA 20/001/2010)
- **இந்தியா:** சட்டீஸ்கர் அதிகாரிகள் நீதிமன்ற உத்தரவின்றி நிகழ்த்திய மரணங்களுக்கு சாட்சியானவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும். (ASA 20/002/2010)
- **இந்தியா:** மணிப்பூர் அரசு சர்மீளா சானுவிடமிருந்து விடுதலை பெற வேண்டும். (ASA/20/003/2010)
- மியான்மர் உடனான இந்திய உறவுகளில் மனித உரிமைகள் தேர்தலையொட்டி நிகழ்ந்தவைகள் (ASA 20/016/2010)
- **இந்தியா:** இந்திய அரசு உடனடியாக காஷ்மீரில் நிகழும சாவுகளுக்கு நடவடிக்கை தேவை (ASA 20/027/2010)
- **இந்தியா:** சித்திரவதையை நிறுத்தத்திற்கான மசோதா பற்றிய சிறுவிளக்கம் (ASA/20/030/2010).

## போலி என்கவுன்டரில் உத்தர பிரதேசம் முதலிடம்

போலி என்கவுன்டர் நடந்ததில் உத்தர பிரதேசம் மாநிலம் முதலிடத்திலும், மணிப்பூர் மாநிலம் இரண்டாவது இடத்திலும் உள்ளது. ரவுடிகளை போலீசார் பிடிக்கச் செல்லும் போது, அவர்கள் போலீசாரை தாக்குவதுண்டு. அப்போது போலீசார் பதிலுக்கு தாக்குதல் நடத்துவார்கள். இந்த என்கவுன்டரில் இருதரப்புக்கு காயம் ஏற்படலாம். ஆனால், என்கவுன்டரில் பெரும்பாலும் ரவுடிகள் தான் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இதனால், போலீசுக்கு பிடிக்காத ரவுடிகள் அல்லது ஆளுங் கட்சிக்கு பிடிக்காதவர்கள் இந்த 'போலி' என்கவுன்டரில் சுட்டு கொல்லப்படுகிறார்கள் என்று பரவலாக கூறப்படுகிறது. இது குறித்து நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான புகார்கள் தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு வருகிறது.

கடந்த 2008ம் ஆண்டு முதல் இந்த ஆண்டு ஜூன் மாதம் வரை மனித உரிமை ஆணையத்தில் 369 போலி என்கவுன்டர் புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 90 வழக்குகளில் போலி என்கவுன்டர் நடத்தியது கண்டு பிடிக்கப்பட்டு, அவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.4.54 கோடி நிவாரணம் அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இன்னும் 271 வழக்குகள் நிலுவையில் உள்ளது. போலி என்கவுன்டர் புகார் பட்டியலில் முதல் இடத்தில் இருப்பது உத்தர பிரதேசம். இங்கு கடந்த 3 ஆண்டுகளில் 120 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாக புகார் வந்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் 40 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். மணிப்பூர் மாநிலம் 2வது இடத்தில் உள்ளது. இங்கு கடந்த 3 ஆண்டுகளில் 60 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். தீவிரவாத அச்சுறுத்தல் உள்ள ஜம்மு காஷ்மீரில் கடந்த 3 ஆண்டுகளில் 14 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். கடந்த ஆண்டில் தான் அதிகபட்சமாக 11 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். நக்சல் அபாயம் உள்ள சட்டீஸ்கர் மாநிலத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 11 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஜார்கண்ட்டில் 13 பேரும், ஒரிசாவில் 12 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அமைதி பூங்கா என கூறப்படும் தமிழ்நாடு, மத்திய பிரதேசத்தில் கடந்த 3 ஆண்டுகளில் தலா 15 பேர் போலி என்கவுன்டரில் பலியாகியுள்ளதாக புகார் கூறப்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தில் 23 பேரும், தலைநகர் டெல்லியில் 6 பேரும் என்கவுன்டரில் பலியாகியுள்ளனர்.

**தினகரன், 8.8.2011**

# சத்திஷ்கர்: காவல் நிலையத்தில் ஆதிவாசி மரணம்

## தற்கொலை என்கிறது போலீஸ், சித்திரவதை அறிகுறிகளைக் காட்டுகிறது மருத்துவ அறிக்கை

அமாம் சேத்தி

மாவோயிஸ்ட்டுகளால் பாதிக்கப்பட்டுள்ள தண்ட்டேவாடா வட்டாரத்தைப் பிரித்துப் புதிதாக சுக்மா மாவட்டம் உருவாக்கப்பட்டிருப்பதையொட்டி ஒரு பொதுநிகழ்ச்சியில் சத்திஷ்கர் முதலமைச்சர் ராமன் சிங் உரையாற்றிய அதே நாளில், சுக்மா நகரத்தில் ஒரு காவல் நிலைய சாவு நிகழ்ந்தது. இது, தீவிரவாதத்திற்கு எதிரான மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவரும் பின்னணியில், நம்பிக்கையிழந்த பழங்குடி மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பது எவ்வளவு கடினமானது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

கோண்ட்ரே கிராமத்தைச் சேர்ந்த போடியம் மாரா ஜனவரி 13 அன்று இரவு காவல் நிலையத்தில் மரணம் அடைந்தார். ஒரு நீதிபதியின் முன் நிறுத்தப்பட்ட அவரை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு ஆணையிடப்பட்ட சில மணி நேரங்களில் அவர் மரணம் அடைந்தார். "காவல் அறையில் ஒரு படுக்கை விரிப்பைப் பயன்படுத்தி மாரா தூக்குப் போட்டுக்கொண்டார். நான்கு காவலர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்," என்று காவல்துறை அதிகாரி ஒருவர் கூறினார். "அவர் தண்டேவாடா சிறைக்கு மாற்றப்படுவதாக இருந்தார். ஆனால், 13ம் தேதி இரவு மிகவும் தாமதமாகிவிட்டதால் அவர் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தார்," என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

மத்திய தயார்நிலை காவல் படை (சிஆர்பிஎப்) தலைமை ஆய்வாளர் (ஐ.ஜி.) பங்கஜ்மிஸ்ரா இவ்வாறு கூறினார்: "ஜனவரி 12 அன்று சிஆர்பிஎப் நடவடிக்கையின்போது மாரா பிடிபட்டார். மறுநாள் காலையில் அவரை காவல்துறையிடம் ஒப்படைத்துவிட்டோம். எங்களது சோதனை நடவடிக்கையில் சந்தேகத்துக்குரிய நபர் பிடிபடுவாரானால் அவரை உள்ளூர் காவல்துறையினரிடம் ஒப்படைத்துவிடுவோம்."

ஆனால், சில காவலர்களும் அரசியல் வேறுபாடின்றி பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் வேறுவிதமாகச் சொல்கிறார்கள். மாராவை பல நாட்களுக்கு முன்பே சிஆர்பிஎப் பிடித்துச் சென்றுவிட்டது, உள்ளூர் காவல்துறையிடம் ஒப்படைப்பதற்கு முன்பாக அவரைக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்திருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுகளை சிஆர்பிஎப் அதிகாரிகளும் காவல்துறை அதிகாரிகளும் மறுத்துள்ளனர்.

"சுக்மா நகரத்திற்கு வெளியே சிஆர்பிஎப் காவலர்கள் ஜனவரி 9 அன்று மாராவைப் பிடித்துச் சென்றனர். பீடி இலைகள் பறித்துக்கொடுத்ததற்காகப் பெற்ற காசோலையைப் பணமாக மாற்றுவதற்காக அவர் நகரத்திற்கு வந்தபோது அவரை சிஆர்பிஎப் ஆட்கள் பிடித்துச் சென்றார்கள்," என்றார் சத்திஷ்கர் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரும் கோன்டா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான கோவாசி லக்மா. சுக்மா நகரம் அந்தத் தொகுதியோடு இணைந்ததுதான். "காவல் பொறுப்பாளர் முதல் மேல்மட்ட அதிகாரிகள் வரை நான் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு அவரை விடுவிக்க முயன்றேன். ஆனால், அவர் சித்திரவதை செய்து கொல்லப்பட்டுவிட்டார்.அவரது பிறப்புறுப்பில் சிஆர்பிஎப் ஆட்கள் மின்சாரத்தைச் செலுத்தினர். அவரது மலத்துவாரத்தில் பெட்ரோல் ஊற்றினர்," என்றார் கோவாசி. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களில் ஒருவரும் கோன்டா தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மணிஷ் குஞ்ஜாம் தொலைபேசி மூலம் இவ்வாறு கூறினார்: "மாரா தற்கொலை செய்துகொண்டதாகக் காவல்துறையினர் கூறுவது பொய். சுக்மா நகர சிஆர்பிஎப் முகாமில் அவர் கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டார். இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்டும்."

### நான்கு காவலர்கள் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்: காவல்துறை சிஆர்பிஎப் முகாமில் கொடூரமாகத் தாக்கப்பட்டார் மாரா: முன்னாள் எம்எல்ஏ

'இண்டியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டின் ஜனவரி 16ம் தேதி இதழில் வெளியான செய்தியின்படி, "மாராவின் ஆண்குறியிலும், மலத்துவார உள்பகுதியிலும் வீக்கம் இருந்தது" என பிரேதப் பரிசோதனை அறிக்கை உறுதிப்படுத்துகிறது. மாராவின் பிறப்புறுப்பின் மேல் பெட்ரோல் தெளிக்கப்பட்டு தீ வைக்கப்பட்டது என காவலர் ஒருவர் தெரிவித்ததாகவும் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' செய்தி கூறுகிறது.

உளவுத் துறையைச் சேர்ந்த சிலர், தங்களது பெயரை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, மாராவின்

மரணத்தில் சிஆர்பிஎப் கைங்கர்யம் இருக்கிறது என்று உறுதிப்படுத்தினர். ''அவரை ஒரு நக்சலைட் என்று நினைத்து சிஆர்பிஎப் பிடித்துச்சென்றது. கடுமையான முறையில் விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது. உள் ரத்தக்கசிவின் காரணமாக அவர் மரணமடைந்திருக்கக்கூடும்,'' என்று அவர்கள் கூறினர். மாரா ஒரு அப்பாவியா என்று கூற அவர்கள் மறுத்துவிட்டனர். எனினும், ''தொடர் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இது, அவரிடமிருந்து பயனுள்ள தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்பதைக் காட்டுகிறது,'' என்று அவர்கள் கூறினர்.

இதே போன்ற ஒரு சம்பவம் குறித்த செய்தி கடந்த ஆண்டு செப்டம்பரில் 'தி ஹிண்டு' நாளேட்டில் வந்துள்ளது. பழங்குடியினத்தைச் சேர்ந்த மட்காம் ஜோக்ரா என்பவர் கைது செய்யப்பட்டு, சிஆர்பிஎப் மற்றும் மாவட்ட காவல்துறையினரின் விசாரணைக்குப் பிறகு சில மணி நேரங்களில் மூளை ரத்தக்கசிவின் காரணமாக மரணமடைந்தார் என்பது அந்தச் செய்தி.

மூத்த பழங்குடி தலைவர்களில் ஒருவரும் பாஜக நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான நந்த்குமார் சாய் இவ்வாறு கூறினார்: ''சுக்மா என்ற புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டதன் நோக்கமே அரசு நிர்வாகத்தையும் நீதித்துறையையும் ஆதிவாசி மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டுவர வேண்டும் என்பதுதான். சாதாரண மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் உணர்கிறபோதுதான் இது சாத்தியமாகும்.'' அவர் மேலும் கூறியது வருமாறு: ''மாரா சித்திரவதை செய்யப்பட்டார் என்பதை மருத்துவ அறிக்கை உறுதிப்படுத்துகிறது. காவலர்களை சஸ்பெண்ட் செய்திருப்பது மட்டும் போதுமானதல்ல. ஒரு சுதந்திரமான நியாயமான விசாரணை நடத்தப்பட்டு, குற்றத்திற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பது திட்டவட்டமாக முடிவு செய்யப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.''

**ஆதாரம்:** தி ஹிண்டு – **17.1.2012**

## போலி என்கவுன்டரில் ஈடுபடும் போலீசாருக்கு தூக்கு

போலி என்கவுன்டர்களில் ஈடுபடும் போலீசாருக்கு, தூக்கு தண்டனை விதிக்க வேண்டும் என, சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது. ராஜஸ்தானைச் சேர்ந்த பிரபல தாதா தாரா சிங், 2006ம் ஆண்டில், அம்மாநில சிறப்பு போலீசார் நடத்திய என்கவுன்டரில் சுட்டுக் கொல்லப்பட்டார். இதை எதிர்த்து, அவரது மனைவி சுசிலா தேவி, சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.

'என் கணவரை, போலீசார் கடத்திச் சென்று, கொடூரமாக சுட்டுக் கொன்று விட்டனர். இது போலி என்கவுன்டர்; இதில் தொடர்புடைய போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, அவரது மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனு, சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் மார்கண்டேய கட்ஜு, பிரசாத் ஆகியோரை கொண்ட பெஞ்ச் முன், நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் உத்தரவிட்டதாவது:

சட்டத்தின் பாதுகாவலர்களாகக் கருதப்படும் போலீசார், பொதுமக்களை பாதுகாப்பதற்காகவே நியமிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்களை ஒழித்துக் கட்டுவதற்காக, அவர்கள் பணியாற்றக்கூடாது. போலி என்கவுன்டரில், சுட்டுக் கொல்வதை ஏற்க முடியாது. சாதாரண மக்கள் குற்றம் செய்தால், அவர்களுக்கு சாதாரண தண்டனை வழங்கப்பட வேண்டும். ஆனால், போலீசார் இந்த குற்றத்தைச் செய்தால், அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். ஏனெனில் போலி என்கவுன்டர் என்பது, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணிக்கு முற்றிலும் முரணானது. போலி என்கவுன்டரில் ஈடுபடும் போலீசாருக்கு தூக்கு தண்டனை விதிக்க வேண்டும். இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள, ராஜஸ்தான் உயர் போலீஸ் அதிகாரிகள் இருவரும், உடனடியாக சரணடைய வேண்டும். இல்லையெனில், அவர்கள் இருவரையும் கைது செய்ய வேண்டிய பொறுப்பு, சி.பி.ஐ., அதிகாரிகளைச் சேர்ந்தது. ஏனெனில், அவர்கள் தான், இந்த வழக்கை விசாரிக்கின்றனர். என்கவுன்டர் என்ற பெயரில், ரத்தத்தை உறைய வைக்கும் வகையிலான கொலைகளை செய்யக்கூடாது என, போலீசாரை இந்த கோர்ட் எச்சரிக்கிறது. இவ்வாறு நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறினர்.

**தினமலர், 9.8.2011**

# டாக்டர்கள் இல்லாமல் பிரேத பரிசோதனை

## கீழ்ப்பாக்கம் மருத்துவமனை குளறுபடிகள் அம்பலம்

கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில், டாக்டர்கள் இல்லாமல், துப்புரவுத் தொழிலாளர்கள், உதவியாளர்கள் மூலமே, பிரேத பரிசோதனை நடப்பதாக புகார்கள் எழுந்துள்ளன. மேலும், பிரேத பரிசோதனை அறிக்கை தருவதிலும், பல்வேறு முறைகேடு நடப்பதாகவும் பகீர் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய குற்றவியல் மற்றும் மருந்துவச் சட்டப்படி, பிரேத பரிசோதனை அறிக்கைப்படி தான், கேள்விக்கு உள்ளான ஒரு இறப்பு, இயற்கையானதா, விபத்தா, கொலையா, சதியா என்பது தெரிய வரும், அதன்படி தான், சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### சாதாரண ஊழியர்களே...

சில அரசு மருத்துவமனைகளில், சட்டம் சார்ந்த மருத்துவத்துறை டாக்டர்கள் இல்லாமல், உதவியாளர்கள் மற்றும் பிணவறை தொழிலாளர்கள் மூலம், பிரேத பரிசோதனை நடப்பதாக, புகார்கள் எழுந்துள்ளன. குறிப்பாக, கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில், இதுபோன்ற முறைகேடுகள் தொடர்ந்து நடப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து, மருத்துவக் கல்வி இயக்குனரகத்திற்கு, கடந்த 16ம் தேதி புகார் அனுப்பப்பட்டுள்ளது. அதில், பிரேத பரிசோதனை செய்யும் சில டாக்டர்கள், பணிக்குவராமல், வருகைப்பதிவேட்டில் போலியாக கையொப்பம் இடுவதாகவும், தாங்கள் இல்லாத பிரேத பரிசோதனைகளுக்கு, ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் தருவதாகவும் கூறப்படுகிறது.

### போலி கையொப்பம்

சட்டம் சார்ந்த மருத்துவத்துறை பேராசிரியர் முருகேசன் என்பவர் தலைமையில், டாக்டர்கள் அன்புச்செல்வன், ஜோசப் ஹெலன் மற்றும் விக்ரம் ஆகியோர், பிரேத பரிசோதனை டாக்டர்களாக பணிபுரிகின்றனர். இவர்கள், பல நேரங்களில் பணிக்கு வருவதில்லை அல்லது பணி நேரத்தில், ஏதாவது காரணம் கூறி வெளியே சென்றுவிடுவதாகவும், முக்கிய வழக்குகள் தொடர்பான பிரேத பரிசோதனையில் மட்டும் பங்கு கொள்வதாகவும் புகார்கள் எழுந்துள்ளன. மருத்துவமனை டீன் அலுவலகம் மற்றும் சட்டம் சார்ந்த மருத்துவத்துறை பிரிவு அலுவலகம் ஆகியவற்றின் வருகைப்பதிவேடுகளில், டாக்டர்களின் கையெழுத்துகள், பல விதங்களில் உள்ளன.

இதனால், எது உண்மையான கையெழுத்து என தெரியாமல், குழப்பம் ஏற்பட்டுள்ளது. டாக்டர் அன்புச்செல்வனுக்கு மட்டுமே, டி.ஏ., ஏ.எஸ்., த.அ., என்ற மூன்று வகை கையெழுத்துகள் போலியாக போடப்பட்டுள்ளன. இதேபோல், அங்குள்ள பல டாக்டர்கள் கையெழுத்து, வெறும் 'இனிஷியல்' ஆகவே உள்ளது.

### நடைமுறைக்கு வரவில்லை


கடந்த 2009ல், மருத்துவக் கல்வி துணை இயக்குனர் சுகுமார், கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில், திடீரென ரெய்டு நடத்தினார். அப்போது வருகைப் பதிவில் கையெழுத்திட்டிருந்த சில டாக்டர்கள், மருத்துவமனை வளாகத்தில் இல்லை. டாக்டர்கள் அன்புச்செல்வன், டெக்கால் போன்றோர் வருகைப்பதிவில் கையெழுத்திட்டிருந்தும், அவர்கள் பணியில் இல்லாதது தெரிந்தது. சுப்பிரமணியன் என்ற மருத்துவர் கையெழுத்திட வந்தார். அப்போது, துணை இயக்குனர் வருகைப் பதிவை ஆய்வு செய்தபோது, அவரது கையெழுத்து ஏற்கெனவே போடப்பட்டிருந்தது. இதை அறிக்கையிலேயே சுகுமார் பதிவு செய்துள்ளார். இதையடுத்து, அனைத்து டாக்டர்களும், ஆர்.எம்.ஓ.,விடம் தனி வருகைப்பதிவேடு வைத்து, அவர் முன்பும் கையொப்பமிட வேண்டும் என, உத்தரவிடப்பட்டது. ஆனால், இந்த உத்தரவு தற்போது வரை பின்பற்றப்படவில்லை.

### கடிதம்

தடயவியல் பேராசிரியர் பணியில் இருக்கும் டாக்டர் முருகேசன், சமீபத்தில், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி முதல்வருக்கு, கடிதம் ஒன்றை எழுதினார். அதில் முறைப்படி பிரேதபரிசோதனை செய்ய, குறைந்தது ஒருமணி நேரமாகும். மாலை 6 மணிக்கு மேல், பிரேத பரிசோதனை செய்யக்கூடாது என்ற விதி உள்ளது. ஆனால், பல காரணங்களால், 6 மணிக்கு பின்பும், பிரேத பரிசோதனை செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனையில் ஏற்படும் பல்வேறு குளறுபடிகளால், சட்டப் பிரச்சனை ஏற்பட்டால், பெரும் சிக்கலாகிவிடும். அதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன் என கூறப்பட்டுள்ளது.

### 16 பக்க அறிக்கை

ஒரு பிரேத பரிசோதனையின்போது, 16 பக்க அறிக்கையில் குறிப்பு எடுக்க வேண்டும். இந்த குறிப்புகள் தயார் செய்ய மட்டுமே, குறைந்தது அரை மணி நேரம் ஆகும் என, மருத்துவமனை வட்டாரங்கள் தெரவிக்கின்றன. இவ்வாறு தயார் செய்யப்பட்டால் மட்டுமே அந்த அறிக்கை கோர்ட்டில் அனுமதிக்கப்படும். இப்படியிருக்க, காலை 10 மணியிலிருந்து, மாலை 6 மணிக்குள், எந்தவித இடைவேளையின்றி, அதிகபட்சம், எட்டு பிரேதப் பரிசோதனைகள் மட்டுமே செய்ய முடியும். ஆனால், டாக்டர் அன்புச்செல்வன், ஒரு நாளில் மட்டும் அதிகபட்சம் 14 பிரேத




டாக்டர் அன்புச்செல்வனின் கையொப்பம், வெவ்வேறு விதமாக உள்ளதை காட்டும் வருகைப் பதிவேடு.

## தலைமை ஆசிரியரின் கதி

வேலூர் மாவட்டம், சோளிங்கர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் பொன்னுரங்கம். இவரது மகன் சரவணன், சென்னை அம்பத்தூரிலுள்ள, தனியார் பொறியியல் கல்லூரியில், இரண்டாம் ஆண்டு பி.இ., படித்து வந்தார். கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன் அவர், கல்லூரி வளாகத்தில், மர்மமான முறையில் இறந்து கிடந்தார். கழிவறையில் வழுக்கி விழுந்து இறந்தார் என, போலீசில் புகார் பதிவாகி உள்ளது. ஆனால், இது ஒரு கொலையாக இருக்கலாம் என, பெற்றோர் தரப்பு வேதனைப்படுகிறது. இவரது உடல், கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. இதுகுறித்து, தலைமை ஆசிரியர் பொன்னுரங்கம் கூறும்போது, ''முதல்வரின் தனிப்பிரிவு, சென்னை போலீஸ் கமிஷனர் மற்றும் உயர் போலீஸ் அதிகாரிகள், கீழ்ப்பாக்கம் மருத்துவமனை முதல்வர், தடயவியல் துறை என, அனைத்திற்கும் புகார் அளித்து விட்டேன்; பிரேத பரிசோதனை சான்றிதழ் தராமல் இழுத்துதடிக்கின்றனர். இதன் பின்னணி என்னவென்பது, புரியாத புதிராக உள்ளது, என்றார்.

பரிசோதனை செய்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்படியென்றால், பிரேதப்பரிசோதனை முறைப்படி நடந்ததா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

### போலி அறிக்கை

பிரேத பரிசோதனையின்போது, கண்டுபிடிக்க வேண்டிய விவரங்கள் குறித்து, 16 பக்க அறிக்கைக்கான விண்ணப்பங்கள், மருத்துவமனைகளில் வைக்கப்பட்டுள்ளன. ஆனால், கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில், இவற்றை பயன்படுத்தாமல், வெறும் நான்கு பக்கங்களில், தாங்களாகவே விண்ணப்பங்களை அச்சிட்டு வைத்துள்ளனர். இவை, அங்குள்ள கூட்டுறவு அங்காடியில், ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் நடந்துள்ள, 5,000க்கும் மேற்பட்ட பிரேத பரிசோதனைகளுக்கு, அரசின் உத்தரவுப்படியான அறிக்கைகள் இல்லை எனக் கூறப்படுகிறது. முக்கியமான வழக்குகளுக்கு மட்டும், ரெடிமேடாக அறிக்கை தயாரித்து, அதை கோர்ட்டில் சமர்ப்பிப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

### சான்று தருவதில் தாமதம்

பிரேத பரிசோதனை சான்றிதழை, பரிசோதனை முடிந்த 48 மண நேரத்தில் தர வேண்டும் என்ற விதி உள்ளது. ஆனால், கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில், தாமதப்படுத்துவதாக தெரிய வந்துள்ளது. தற்போதைய நிலையில், 200 சான்றிதழ்கள் நிலுவையில் உள்ளதாகத் தெரிகிறது. சான்றிதழ் கொடுப்பதற்கான பதிவேடு, சரியான முறையில் பராமரிக்கப்படுவதில்லை. உயரதிகாரிகள் சோதனையிடும் போது, பதிவேடுகளையும், சான்றிதழ்களையும், பழைய தேதிகளில் தயார் செய்து, பாவ்லா காட்டி விடுகின்றனராம். இவ்வாறு தாமதம் செய்வதால், புதைக்கப்படும் பிணங்கள், அழுகிவிடும் நிலையில், எந்தவிதமான அறிக்கை தந்தாலும், பிணத்தை தோண்டி எடுத்து, மறுசோதனையில் உறுதிப்படுத்த முடியாது.

### இனி தவறுகள் நடக்காது

இந்த பிரச்சனை குறித்து, 'தினமலர்' நாளிதழுக்கு வந்த புகார்கள் தொடர்பாக, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை முதல்வர் ராமகிருஷ்ணனை தொடர்பு கொண்டோம். அவர் கூறும்போது, ''இது தொடர்பாக முழுமையாக விசாரணை நடத்துவோம். சம்பந்தப்பட்ட துறையினர், இனி எதிர் காலத்தில் எந்தவித குளறுபடிகளிலும் ஈடுபடாமல், விதிமுறைகளை சட்டப்படி பின்பற்ற, உறுதியான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்,'' என்றார்.

**ஆதாரம் : தினமலர் 29 டிசம்பர் 2011**

# ஆம்னெஸ்டி இன்டர்நேசனல் அறிக்கை 2011
# உலகின் மனித உரிமைகள் நிலை

## அமெரிக்க ஒன்றிய மாநிலங்கள்

அரசாங்க தலைமை – பாராக் H. ஒபாமா
மரணதண்டனை – நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது
ஜனத்தொகை – 317.6 மில்லியன்
வாழ்நாள் – 79.6 வருடங்கள்
5 வயதுக்கு கீழ்
இறப்பு ஆண் / பெண் – 7/8 ஆயிரத்துக்கு

**46 நபர்கள் இந்த வருடத்தில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதிகப்படியான பலம் மற்றும் கொடுமையான சிறைச்சாலை அனுபவங்கள் தொடர்வதாக அறிக்கைகள் சொல்கின்றன. மிகப்பெரும் எண்ணிக்கையில் ஆண்கள் ராணுவ காவலில் கொவாண்டோநாமவோவில் வைக்கப்பட்டுள்ளனர். ஏனெனில், அதிபர் ஒபாமாவினால் ஒரு வருடத்திற்குள் அது (சிறை) மூடப்பட்டுவிடும் என்று சொன்ன காலக்கெடு வந்து சென்றுவிட்டது. ராணுவ குழு அல்லது கமிசன் நடவடிக்கைகள் விரல்விட்டு எண்ணக்கூடிய வழக்குகளில் மட்டும் நடந்துள்ளது. கொவாண்டோ நாமாவில் இருந்து ஒரு நபர் மட்டும் யு.எஸ்–ன் முக்கிய இடத்துலுள்ள பெடரல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளார். நூற்றுக்கணக்கான மக்கள் ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்க பாக்ரம் என்னுமிடத்திலுள்ள விமான தளத்தில் அமெரிக்க ராணுவ காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அமெரிக்க அதிகாரிகள் ஏற்கெனவே சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட அமெரிக்க ரகசியக் காவலில் மற்றும் ஒப்படைப்புகளில் உள்ளவர்களை வெளியே கொண்டு வரும் முயற்சிகளுக்கு தடங்கல்கள் விதித்துள்ளார்கள்.**

### சர்வதேச நுண்ணாய்வு

நவம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் தொடர் மீளாய்வில் அமெரிக்காவின் மனித உரிமைகள் அறிக்கையானது சரிபார்க்கப்பட்டது. அமெரிக்க பிரதிநிதிகள் குழு ‘‘சர்வதேச 228 சிபாரிசுகள் கூறியவைகளின்’’ அடிப்படையில் மார்ச் 2011ல் ஒழுங்குமுறை மரபுக்கு ஏற்ப பதில் கூறுவதாக ஒப்புக்கொண்டுள்ளது.

### கொவாண்டாநாமோ

ஒரு வருட முடிவில் ஜனவரி 22ல் அதிபர் ஒபாமா கூறிய கொவண்டாநாமோவில் சிறை வைப்பு மூடல் என்பது நடைபெறாமல் அங்கு அடைக்கப்பட்டிருந்த 198 நபர்கள்களின் தண்டனை நீடிக்கப்பட்டன. அவர்களில் பாதி நபர்கள் ஏமென் நாட்டுக்காரர்கள் வருட முடிவில் அங்கு 174 ஆண்கள் சிறையிலிருந்தனர். அவர்களில் மூவர் சர்வதேச நியாய விசாரணைச் சட்டத்தின்படி விசாரிக்க வேண்டியவர்கள்.

ஜனவரி 5ம் தேதியன்று வெள்ளை மாளிகை ஏமென் நாட்டுக்காரர்களை கொவண்டாநாமோவிலிருந்து ஏமென் நாட்டுக்கே அனுப்பும் முடிவை நிறுத்தி வைத்திருப்பதாக அறிவித்தது. இது எதனால் என்றால் ஒரு வணிக விமானம் ஒன்றை டெட்ராய்குக்கு மேலே செல்லும்போது குண்டு வீச்சை சந்திக்க நேர்ந்ததற்கும் ஏமென் தீவிரவாதிகளுக்கும் உள்ள தொடர்பை இது உறுதிப்படுத்திய சந்தேகம் எழுந்ததால் இந்த அறிவிப்பு வருட முடிவு வரை செயல்பாட்டில் இருந்தது.

ஜனவரி 22ம் தேதி கொவாண்டாநாமோ ஆய்வுக்கான குழு இறுதி அறிக்கை ஒன்றை அதிபரின் ஆணையை ஒட்டி வெளியிட்டது (செயலாணை 22.1.2009) கொவாண்டாநாமோவில் அடைபட்டிருந்த 240 நபர்களின் வழக்குகள் பற்றியது அது. மேலும் அது கூறியதாவது 36 நபர்கள் பெடரல் நீதிமன்றம் அல்லது இராணுவ கமிசனின் கீழ் தண்டிக்கப்படலாம் என்றும் 126 நபர்கள் ‘‘பாதுகாப்பு நடவடிக்கைகளின்படி இடம் மாற்ற செய்யப்படமோ விடுதலை செய்யப்படவோ கூடும் என்று கூறியது. அந்த 126 நபர்களில் 29 ஏமெனின் நாட்டுக்காரர்களும் அடங்குவர். மேற்கொண்டு 30 ஏமென் நாட்டுக்காரர்கள் ‘‘நிபந்தனைகளின்’’படி அடைத்து வைக்கப்பட இருக்கிறார்கள். அதன்பொருள் என்னவென்றால் ‘‘ஏமெனின் பாதுகாப்பு நிலைமை’’ முன்னேறும் வரை அவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள் என்பதாகும் அல்லது ‘‘பொருத்தமான மறுவாழ்வுத் திட்டம் கிடைக்கும் வரை’’ அல்லது ‘‘பொருத்தமான மூன்றாம் நாடு ஒன்றுக்கு அனுப்பும் வாய்ப்பு கிடைக்கும் வரை’’ என்பதாகும்.

### கொவாண்டாநாமோவில் அடைக்கப்பட்டு உள்ளவர்கள் பற்றிய பற்றயி மீதான விசாரணைகள்

ஏப்ரலில் பென்டகனில் இருந்து ராணுவ கமிஷன் நடத்த வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விதிமுறைகள் வெளியாயின. புதிய கைதிக் கையேடு வெளியானபோது அதில் அமெரிக்க நிர்வாகம் ஏற்கெனவே இருந்ததைப்

போன்றே அடைத்து வைத்த நபர்களை ராணுவ கமிசன் நிரபராதி என்று விடுவித்தாலும் காலக்கெடு எதுவுமின்றி அடைத்து வைக்க அதிகாரமிருப்பதாக (அமெரிக்க நிர்வாகத்துக்கு) உறுதிப்படுத்தியது.

இரண்டு கொவாண்டாநாமோ கைதிகள் குற்றவாளிகளென தீர்ப்பளிக்கப்பட்டதில் இந்த வருடம் குற்றவாளிகள் ராணுவ கமிசனாக என தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை ஐந்தாகியது. ஜூலையில் பூடான் நாட்டைச் சேர்ந்த இப்ராகிம் அல்– கோசி பயங்கரவாத குற்றங்கள் தொடர்பாக 14 வருட சிறை தண்டனை பெற்றார். அக்டோபரில் கனடா நாட்டைச் சேர்ந்த உமர்காதர் என்பவர் 5 போர் குற்றங்களுக்காக குற்றவாளியென தீர்ப்பு பெற்றார். இவர் ஜூலை 2002ல் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ராணுவக் காவலர்களால் கைது செய்து சிறைக்கு அனுப்பியபோது 15 வயதே நிரம்பியவர். இவருக்கு ராணுவ கமிசனால் நாற்பது வருட சிறை தண்டனை வழங்கப்பட்டது. ஆனால், வேண்டுதலின் பேரில் விசாரணையில் எட்டு ஆண்டாகக் குறைக்கப்பட்டது. கனடா மற்றும் அமெரிக்க அதிகாரிகள் இவரை ஒரு வருட அமெரிக்க சிறைவாசத்திற்குப் பிறகு கனடாவிற்கு மாற்றுவதற்கு ஒப்புக்கொண்டனர்.

2001, செப்டம்பர் 11ம் தேதி நடந்த தாக்குதலில் தொடர்பு கொண்டவர்களாக குற்றஞ்சாட்டப்பட்ட காளிது சேக் மொகமது, வாளிது பின் அட்டாஸ், ராம்சி பின் அல் சிப், அலி அப்தல் அசிஸ் மற்றும் முஸ்தபா அல் ஹௌசாவி ஆகிய ஐவர் கொவாண்டாநாமோவிலே அடைத்து வைக்கப்பட்டனர். இவர்கள் ஒரு வருட முடிவில் பொது நீதிபதி எரிக் ஹோல்டர் தண்டனைக்காக நியூயார்க்கில் உள்ள பெடரல் நீதிமன்றத்துக்கு மாற்றப்படுவார்களென அறிவித்தார். இந்த ஐந்து நபர்களும் தொடர்பு கொள்ள வழியில்லா ரகசிய அமெரிக்க சிறையில் நான்கு வருடம் இருந்த பின்புதான் கொவாண்டாநாமோவுக்கு 2006ல் மாற்றப்பட்டார்கள். இராணுவ கமிசன் விசாரணைக்கு 2008ல் தான் குற்றப்பதிவு செய்யப்பட்டார்கள்.

வருட முடிவில் கொவாண்டாநாமோவிலிருந்து ஒருவர் அமெரிக்க பெடரல் நீதிமன்றத்துக்கு மாறுதல் செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டது. நவம்பர் மாதத்தில் டான்சானிய நாட்டைச் சேர்ந்த அகமது கைலானி 2009ல் கொவாண்டாநாமோவிலிருந்து நியூயார்க்கிலுள்ள முக்கிய நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு விசாரிக்கப்பட்டு குற்ற நிருபணம் ஆகியது. கிழக்கு ஆப்பிரிக்காவில் நடந்த குண்டு வெடிப்பில் சம்மந்தப்பட்டவர் என்று அமெரிக்க தூதரகத்தால் 1998ல் குற்றஞ்சாட்டப்பட்டு கொவாண்டாநாமோவுக்குக் கொண்டுவரப்பட்டவர் மற்றும் ஜூலை மாதங்களில் நடந்த விசாரணைக்கு முந்திய கட்டளை உத்தரவில் அமெரிக்க உளவுத்துறையின் சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டு பின்னர் 2006ல் கொவாண்டா நாமோவுக்கு அனுப்பப்பட்டார் என்னும் பின்பு வேண்டிய தற்காப்பு நடவடிக்கையை நீதிபதி தள்ளுபடி செய்தார். நியூயார்க்குக்கு கொண்டு வருமுன்னர் ஐந்தாண்டுகள் ராணுவக் காவலில் வைக்கப்பட்டார். ஜனவரி 2011ல் அகமது கைலானியின் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய காலக்கெடு உள்ளது.

## ஆப்கானிஸ்தானில் அடைக்கப்பட்டுள்ள அமெரிக்கக் கைதிகள்

நூற்றுக்கணக்கான கைதிகள் ஆப்கானிஸ்தானிலுள்ள பாக்ராம் விமானதளத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அமெரிக்க காவலில் (DFIP- US Detention Facility in Panwan) வைக்கப்பட்டுள்ளன. இவர்கள் 2009ல் இருந்து அங்கே அடைக்கப்பட்டுள்ளனர். உதாரணமாக 900 நபர்கள் இங்கு செப்டம்பரில் கொண்டுவரப்பட்டு அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஆப்கானிஸ்தானத்து அதிகாரிகளால் குற்றவாளிகளென "ஊர்ஜிதம்" செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்களென அமெரிக்க அதிகாரிகள் (DFIP) கூறுகின்றன. இந்த "மாற்று நடவடிக்கைகள்" ஜனவரி 2001ல் தொடங்கப்படவுள்ளன. இந்த மாற்று நடவடிக்கைகள் ஆப்கானிஸ்தான் அரசின் நீதிமன்ற பலம் மற்றும் அந்த அரசு இதைக் கையாளக் கூடிய பயிற்சி பெற்றுள்ளதா போன்ற நிலைமைகளை பொறுத்து மற்றும் ஆப்கானின் சட்டத்தை வைத்து அதன் விரைவு இருக்கும் என்று பென்டகனில் அக்டோபர் மாதத்தில் சொல்லப்பட்டது. (பாக்தம்–ல் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் அமெரிக்க நீதிமன்றங்களில் அவர்கள் அடைக்கப்பட்டுள்ள சட்ட விதிகள் குறித்து கேள்விகள் சட்ட வழியுள்ளதா என்பது இன்னமும் சிக்கலாகவே இருந்து வருகின்றது. மே மாதத்தில் அமெரிக்க நீதிமன்றம் ஆட்கொணர்வு சட்டத்தின் கீழ் மூன்று பாக்ரம் கைதிகளை, (இவர்கள் ஆப்கானிஸ்தானிய நாட்டினர் அல்ல ஆனால், ஆப்கானிஸ்தானத்துக்கு வெளியே கைது செய்யப்பட்டார்கள்) வெளியே கொண்டுவர வேண்டப்பட்டதற்கு மறுப்பு தெரிவித்து ஆணையிட்டார். ஜூலை 2010ல் இதற்கு மறுப்பு வந்ததை அடுத்து அடைபட்ட கைதிகளுக்காக வாதாடிய அமெரிக்க வழக்கறிஞர்கள் மாவட்ட நீதிமன்றங்களுக்கு திரும்பி வழக்கை தொடர்ந்து வந்துள்ளனர். இந்த ஆண்டு இறுதி வரை.

ஆம்னெஷ்டி இன்டர்நேசனல் மற்றும் பிறநிறுவனங்கள் அமெரிக்க ராணுவ செயலாளருக்கு ஜூன் மாதத்தில் தம் கவலை தெரிவித்து கடிதங்கள் எழுதினார்கள். அவர்கள் கவலை எதுபற்றியது என்றால் பாக்ரம்–ல் அடைபட்டுள்ள கைதிகள் சித்ரவதை மற்றும் பிறமோசமான நடவடிக்கைகளான நீண்டகால தனிமைப்படுத்துதல், தூங்கவிடாமல் செய்தல் மற்றும் உச்சகட்ட தட்பவெப்ப நிலைகளுக்கு உட்படுத்துதல் போன்றவற்றுக்கு ஆளாகின்றார்களோ என்பதுதான் அது.

## தண்டனை விலக்கு

சர்வதேச சித்ரவதை குற்றம் மற்றும் காணாமல் போக்கிவிடுதல் உள்ளிட்ட மனித உரிமைகள் மீறல்களுக்கு எந்தவித நிவாரணம் மற்றும் காரணங்கூறுதல் எதுவுமின்றி அமெரிக்காவின் இரகசிய காவலடைப்பு மற்றும் ஒப்படைப்பு (நீதிமன்றம் சார்ந்த அல்லது நிர்வாக நடைமுறை கணக்கில் வராத ஒரு அரசு அல்லது நாட்டிடம் இருந்து மற்றொரு அரசுக்கு நபர்களை மாற்றி அனுப்புவது) என்ற பெயரில் நடந்து வருகின்றது. இது அதிபர் ஜார்ஜ் புஷ் நிர்வாகத்திலிருந்து தொடர்ந்து நடந்து வருகின்றது.

நவம்பரில் வெளிவந்த ஜார்ஜ் புஷ் புத்தக வெளியீட்டுக்கு முந்தைய நேர்காணலில் முந்தைய அதிபரான ஜார்ஜ் புஷ் ''விரிவான விசாரணை தொழில் நுட்பங்கள்'' குறித்து தானே நேரிடையாக ஒப்புதல் தெரிவித்தது குறித்து, அதாவது இரகசிய காவலில் இருப்பவர்களிடம் விசாரிக்கும் முறை குறித்து கூறினார். அவற்றுள் ஒரு தொழில்நுட்ப முறையாக அவர் ஒத்துக்கொண்டது ''தண்ணீர் ஏற்றும் முறை''. இது தண்ணீரில் ஒரு கைதியை மூழ்க வைக்கத் துவங்குவது ஆகும்.

நவம்பர் 9ம்தேதி அமெரிக்க நீதித்துறை ஒரு அறிவிப்பு வெளியிட்டது. அபு சுமைதா மற்றும் அப்தல் நஸ்சிரி என்னும் இருவரை 2002ல் இரகசிய காவலில் வைக்கப்பட்டு 2005ல் குற்றப்பத்திரிக்கை தயாரிக்கப்பட்டது என்றும் அதற்கு மேல் விபரங்கள் ஏதும் கூறாமல்விட்டுவிட்டது. இந்த இருவர் மீதும் நீர் ஊற்றுதல் என்னும் சித்ரவதை செய்யப்பட்டதை 92 வீடியோ ரீடப்கள் சாட்சியங் கூறின.

ஆகஸ்டு 2009ல் அட்டானி ஜெனரல் ஏரிக் ஹோல்டர் ஆணையிட்டு வெளிவந்த இரகசிய காவலில் வெளிவந்த உள்ளவர் மீதான விசாரணை முறைகள் இந்த ஆண்டு வரை தொடர்ந்து நடந்துதான் வருகின்றன.

செப்டம்பர் 8ம் தேதியன்று அமெரிக்க நிர்வாகமானது ''அரசின் இரகசிய அரசு சலுகையை'' பயன்படுத்தி ஐவரின் வழக்கை தள்ளுபடி செய்தது. யூ.கேயில் வசிக்கும் பின்யாம் முகமது, இத்தாலி நாட்டைச் சேர்ந்த அபவ் ஏல்காசிம் பிரிட்டல், எகிப்தைச் சேர்ந்த அகமது அஜியா, ஏமினியைச் சேர்ந்த முகமது பாரஜ் அகமது, பாஸ்மில்லா இராக்கை சேர்ந்த ஆளால் யு.கேவில் நிரந்தரமாய் வசிக்கும் பிஜர் அல் ரவி என்ற ஐவர்தான் இவர்கள். இவர்கள் அமெரிக்க உளவுத்துறையின் சித்ரவதைகள் மற்றும் எல்லா வகையான கொடுமைகளையும் அனுபவித்ததாக கூறினார். ஆறு நீதிபதிகள் அடங்கிய குழு நீதித்துறை சாராத நிவாரணம் வழங்கும் சாத்தியம் உள்ளதென்றும் இதனை நிர்வாகம் அல்லது காங்கிரஸ் எடுத்துக்கொள்ளலாம் என்றும் கூறியது. அமெரிக்க அதிகாரிகளுக்கு எந்த அளவு சிறைக் கைதிகள் மீது சித்ரவதை செலுத்தப்படுகிறது என்று தெரியுமா என்று கேட்டு அழைப்புகள் வந்த வண்ணம் இருந்தன. புதிய சாட்சியங்கள் தோன்றிய பின்பு கொடுமைப்படுத்தப்பட்டது பற்றி வக்கில் லீக்ஸ் நிறுவனம் அக்டோபரில் வெளியிட்ட பைல்கள் இதனை கூறின (ஆப்கானிஸ்தான்; இராக், ஏமென் அறிக்கைகளை காண்க)

## அதிகப்படியான பலத்தை பிரயோகித்தல்

ஐம்பத்தைந்து நபர்கள் போலீஸ் டேசாகள் மூலம் கொல்லப்பட்டார்கள். 2001ம் வருடத்திலுந்து இதன் மூலம் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 450 ஆகும். இறந்துபட்டவர்களில் பெரும்பாலனவர்கள் ஆயுதம் எதுவுமில்லாமல் இருந்தார்கள். இந்த அதிர்ச்சி கொடுக்கப்பட்டபோது ஒரு முறை அல்ல பல முறை பெரிய அச்சுறுத்தலாக அவர்கள் உணரவில்லை. இப்படிப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அதன் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து பலருக்கு அக்கறை இருந்தது.

மெக்சிகோவைச் சேர்ந்த இருவரை அமெரிக்காவின் வரித்துறை மற்றும் எல்லை காவல்துறை கொன்றது. இந்த அமைப்பின் செயல்பாடுகள் குறித்து பலத்த கேள்விகளை எழுப்பியது.

மே மாதத்தில் 32 வயதான அனஸ்தாசியோ ஹெர்னான்டஸ் மூச்சுத் திணறல் ஏற்பட்டு பின்னர் இறந்தார். இது அமெரிக்கப்படை அவரை மெக்சிகோவில் இறக்கிவிடும்போது பலமுறை தாக்கியதால் மற்றும் டேசர் அதிர்ச்சி தந்ததால் நேர்ந்தது.

ஜுன் மாதத்தில் 15 வயது ஆன செர்ஜியோ ஹெர்னான்டஸ் கியூரீகர் தலையில் அமெரிக்கப்படையினரால் சுடப்பட்டு இறந்தார். FBI நியூஸ் ரிப்போர்ட் கூறியது. பாறைகற்களை பலர் எரிந்தனர். அதிகாரி சுட்டார் என்றும் ஆனால், வீடியோ படங்கள் காட்டியது, அதிகாரி பலமுறை சுடப்பட்டு மெக்சிகோவிற்குள் ஓடியதை காட்டியது. இதுபற்றிய அமெரிக்க அதிகாரிகளின் விசாரணை இந்த வருட இறுதி வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஜுலையில் ஆறு நியூ அர்லியன் போலீஸ் அதிகாரிகள் குடிமக்கள் மீது துப்பாக்கிச் சூடு ஒன்றை காத்ரீனாபுயல் 2005க்கு பின் நடத்தியதற்காக குற்றஞ்சாட்டப்பட்டனர். குடிமக்களின் உரிமை மீறல் மற்றும் 17 வயது பையன் மற்றும் பிறிதொரு.. மனிதனும் இறந்தனர்.

## சிறைச்சாலை நிலவரங்கள்:–

நீண்ட காலமாக மிக அதீதப் பாதுகாப்பு காவலில் இருக்கும் கைதிகள் கொடூரமான நிலைமையில் இருப்பதாக புகார்கள் சொல்லுகின்றன. மோசமாக நடத்தப்படுவது உள்ளிட்ட புகார்கள் சிறப்பு நிர்வாக நடவடிக்கைகள் பற்றி வருகின்றன.

சையது பகத் ஹாஸ்மி என்னும் மாணவன் மூன்று வருடங்களுக்கு மேலாக நியூயார்க்கில் தனிமைப்படுத்தப்பட்ட காவலில் முன் விசாரணை கைதியாக உள்ளார். ஒவ்வொரு நாளும் 23 அல்லது 24 மணி நேரங்கள் இயற்கை வெளிச்சம் கிட்டாத ஒரு குட்டி அறையில் அடைக்கப்படுகிறார். தன் குடும்பத்தாருடன் தொடர்பு கொள்ளவோ வெளியிலே உடற்பயிற்சி செய்யவோ வழியின்றி அடைத்து வைக்கப்பட்டுள்ளார். ஏப்ரலில் அல்கொய்தாவுக்கு உதவி செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டார். மோசமாகி வரும் அவர் உடல் நிலை குறித்து அவர் வழக்கறிஞர் எப்படி வாதாடியும் எந்தப் பலனுமில்லை. ஜூனில் பதினைந்து வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பாகியது.

அல்பெர்ட் உட்பாக்ஸ் மற்றும் ஹெர்மன் வாலஸ் என்னும் முந்தைய கறுப்பு புலிகள் லூசியானாவிலுள்ள தனிமைப்படுத்தப்பட்ட சிறையில் கடந்த 35 வருடங்களாக எந்தவித வேலையும் மறுவாழ்வு திட்டமும் இன்றி அடைக்கப்பட்டுள்ளனர். சிறைக்காவலர் ஒருவர் 1972ல் கொலையுண்டதன் பின் அவருக்கு இத்தண்டனை அளிக்கப்பட்டது. கொலைக்கான சாட்சியங்களற்ற நிலையில் இதன் நியாயங்குறித்து கேள்விகளுக்கான பதில்கள் வருட இறுதிவரை வரவில்லை.

### நியாயமற்ற விசாரணைகள்:

ஜூன் மாதம் ஜெரால்டோ ஹெர்னான்டஸ் என்பவர் பற்றிய புதிய மனு பதிவு செய்யப்பட்டது. 2001ல் கியூபாவின் உளவாகப் பணியாற்றியதாகக் குற்றஞ்சாட்டப் பட்ட வரிஸ் ஒருவர் இவர் விசாரணை சமயங்களில் அமெரிக்க அரசு இரகசியமாக பனம் கொடுத்து பத்திரிக்கையாளர்கள் செய்திகளை திரித்து ஊடகங்களில் எழுத கூறியது. அக்டோபரில் இதுபற்றி கவலை தெரிவித்து அட்டானி ஜெனரலுக்கு அம்னஸ்டி இன்டர்நேஷனலுக்கு அறிக்கைதனை அனுப்பியது.

### பெண்கள் மீதான வன்முறை:

ஜூலையில் மலைவாழ் மக்களுக்கான சட்டம் மற்றும் ஒழுங்கு 2010 ஏற்பட்டது. இது பழங்குடி இனப் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்படுவதில் நீதி கிடைக்க நல்ல வாய்ப்பை தந்தது. இந்தச் சட்டம் பெடரல், மாநில, உள்ளூர் மற்றும் மலைவாழ் சட்டங்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் குற்றங்கள் நிகழும்போது பழங்குடியினரின் அதிகாரத்தை நிலைநாட்டவும் அவர்களின் நிலம் மற்றும் ஆதாரங்களை அவர்களுக்காக வென்றெடுக்கவும் உதவியது. இந்த சட்டம் பழங்குடி இன மக்களின் அமைப்புகள் மற்றும் ஆம்னஷ்டி இன்டர்நேசனலின் 2007 வருட அறிக்கை மாஸாவின் அநீதி (Maze of injustice) ஆகியவற்றின் தொடர் நடவடிக்கை காரணமாக உருவான சட்டமாகும். அதுவரை பழங்குடி இனப்பெண்களின் மீது நிகழ்ந்த பாலியல் குற்றங்கள் மற்றும் அது புரிந்தவர்களுக்கு தண்டனை விலக்கு போன்றவைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

### சுகாதார உரிமை:– பிரசவகால இறப்பு

நூற்றுக்கணக்கான பெண்கள் பிரசவ கால கவனிப்பு தவறியதால் இறந்து வருவது தொடர்கிறது. நல்ல சுகாதார கவனிப்பு என்பதில் இனம், மொழி, நகர்புறம் மற்றும் புலம் பெயர்தல் போன்ற பல பாகுபாடுகள் காணப்படுகின்றன. இத்தகைய பாகுபாடுகள் இன்றி செயல்பாடுமாறு பெடரல் மற்றும் மாநில அரசுகளை கேட்டு கொள்ளும் பல அழைப்புகள் வந்த வண்ணம் உள்ளன.

2014ம் ஆண்டுக்குள் 30 மில்லியன் மக்களை சுகாதார கவனிப்புக்கு உட்படுத்தும் சட்டம் ஒன்று மார்ச் மாதத்தில் இயற்றப்பட்டது. அமெரிக்க நீதிமன்றங்களில் சட்டங்களை சவால்களாக்கும் வழக்குகள் தேங்கிக்கிடக்கின்றன.

### குழந்தைகள் உரிமைகள்

18 வயதுக்குக் கீழ்பட்டவர்கள் மரணம் உண்டாக்கும் குற்றங்களில் ஈடுபட்டால் ஆயுள் தண்டனை வழங்குவது சட்டமாகாது என்று அமெரிக்க உச்சநீதிமன்றம் மே 17ல் விதி ஒன்று இயற்றியது. இது உருவாக்கப்பட்டதின் காரணம் என்னவென்றால் ஐக்கிய நாடுகள் சபை இயற்றிய சர்வதேச குழந்தைகள் பிரகடனத்தின்படி 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் குற்றமிழைக்கும்போது வெளியே சென்றுவரும் வழி இல்லா சிறை தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை கூடாதென்பதில் கையெடுத்து இடவில்லை.
ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் உரிமை சாசனத்தில் (CRC) குறிப்பிடப்பட்டவைகளை ஏற்றுக்கொள்ள அக்கமிட்டி அக்டோபர் 14ல் அமெரிக்க அரசை கேட்டுக்கொண்டது. இதை ஒத்துக்கொள்ளாதது சொமாலியா மற்றும் அமெரிக்கா மட்டும்தான்.

### புலம்பெயர்ந்தவர்களின் உரிமைகள்

அரிஜோனாவில் ஏப்ரல் மாதம் இயற்றப்பட்ட புலம் பெயர்வு பற்றிய சட்டம் குறித்து மனித உரிமை நிறுவனங்கள் (ஆம்னஷ்டி இன்டர்நேசனல் உள்ளிட்ட) தம் கவலையை வெளிப்படுத்தின. தம்முடைய குடிமை நிலைக் குறித்து உடனடியாக சான்று கொடுக்க முடியாதவர்களை அரிஜோனா போலீஸ் புலம்பெயர்தல் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைப்பது என்பது அச்சுறுத்தலாக இருந்ததோடு இது “இன பாகுபாட்டை” அதிகரிக்கும் என்றும் அஞ்சப்பட்டது. இதன் முக்கிய சரத்துகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

### மரண தண்டனை

45 கைதிகள், ஆண்கள் மற்றும் பெண்கள் அமெரிக்கா மரண தண்டனை காரணமாக கொல்லப்பட்டார்கள். லெதல்

ஊசியின் மூலம் 44 நபர்களும் மின்னூட்டல் முறையில் ஒருவரை ஒருவர் சுடப்பட்டும் கொல்லப்பட்டனர். இது அமெரிக்க உச்சநீதிமன்றம் மரண தண்டனையை நிறுத்தி வைக்க ஆணையிட்ட 1976ல் இருந்து மொத்தம் 1234வது ஆகும்.

- டேவிட் போவெல் ஜூன் 15ல் டெக்சாகில் கொல்லப்பட்டார். இது குற்றம் நடந்த 30 வருடங்களுககு பிறகு போதிய சாட்சியமின்றியும் நிறைவேற்றப்பட்டது. தன் வாழ்நாளில் பாதி நாட்களை சாவுக்காக நின்றதிலேயே கழித்தார்.

- ஹாலிவுட் செப்டம்பர் 9ம் தேதியன்று அலபாமாவில் கொல்லப்பட்டார். அனுபவக் குறைவு உள்ள அவர் வழக்கறிஞர் ஹாலிவுட்டின் மனநிலை பிறழ்வை குறிப்பிடவில்லை.

- பிரான்டன் ரோடி செப்டம்பர் 27ம் தேதியன்று ஜியார்ஜியோவில் கொல்லப்பட்டார். அதற்கு ஆறுநாள் முன்பு தன்கையையும் கழுத்தையும் காயப்படுத்திக் கொண்டார். சாவின் விளிம்பில் இருந்த அவரை கொண்டுவந்து லெதல் ஊசியை போட்டு கொன்ற அவருக்கு வயது 18.

- ஜெப்ரி லேண்ரிகள் அரிஜோனாவிய அக்டோபர் 26ல் கொல்லப்பட்டார். 13 நிதிகள் இவர் வழக்கு குறித்து விவாதித்தனர். லெதல் ஊசி தட்டுப்பாடு காரணமாக இவருக்கு சில காலம் நிறுத்தி வைக்கப்பட்டு வெளிநாட்டிலிருந்து வரவைக்கப்பட்டு கொல்லப்பட்டார். அக்டோபரில் அந்தோனி கிரேவ்ஸ் டெக்சாஸ்–ல் இருந்து விடுதலை ஆனார். மரணதண்டனை விதிக்கப்பட்ட 16 ஆண்டுகள் கழித்து இவர் விடுதலை ஆனார். புதிய விசாரணைக்கு இவருக்கு 2006ல் ஆணை வழங்கப்பட்டது. ஆனால், அவ்வாணை அக்டோபரில் தள்ளுபடி செய்யப்பட்டது. ஏனெனில், தகுந்த சாட்சியங்கள் 1992ம் வருடம் நடந்த குற்றத்திற்கு இல்லை என்பதால் இவர் 1973ம் வருடத்திலிருந்து சாவுக்காக காத்திருந்தார்.

- ஆம்னஸ்டி இன்டர்நேசனல் பிரதிநிதிகள் இராணுவ சமிசன் விசாரணையையும் மற்றும் ஓமர்காதர் விசாரணையையும் கவனித்தனர். அமெரிக்காவை அக்டோபர் மற்றும் நவம்பரில் பார்வையிட்டனர்.

- அமெரிக்கா: உலகத்தில் “போர்” என்னும் பெயரில் மனித உரிமைகள் இன்னும் தோற்கின்றன (AMR 51/006/2010)

- மரணம் சம்பவிக்க வைக்கும் அமெரிக்கப் பிரசவங்கள் (AMR 51/007/2010)

- அமெரிக்கா: ஐக்கிய நாடுகள் சபைக்கு அப்போதைக்கப்போ நடக்கும் மீளாய்வு. நவம்பர் 2010 (AMR 51/027/2010)

- அமெரிக்கா: குற்றவியல் நீதிமன்ற மாதிரி? அரசு தரப்பு வழக்கறிஞரின் தவறான நடவடிக்கையால் நேர்ந்த சாவு மற்றும் குவிந்து கிடந்த ஜீரிகள் (AMR 51/027/2010).

- அமெரிக்கா: இரட்டைதரம் அல்லது சர்வதேச தரம்? முக்கிய முடிவு 9/11 விசாரணை வாரங்கள் வெகுதூரம் (AMR 51/034/2010)

- அமெரிக்கா: தாமதத்தை சாதாரண விசயமாக்குதல், தொடர்ந்த அநீதி, சாலை விதிகளை மீறும் சட்டங்கள் (AMR 51/053/2010)

- அமெரிக்கா:– பதில் சொல்ல வேண்டியமைகளுக்கு தடை கல்லாகும் இரகசியங்கள்; மீண்டும்–பெடரல் நீதிமன்றங்கள் “ஒப்படைப்பு” வழக்குகளை தள்ளிப்போட்டன; நீதிமன்றம் தீப்பளிக்காத நிவாரணங்கள் பற்றிய குறிப்புகள் (AMR 51/081/2010)

- அமெரிக்கா: மரண தண்டனை, அமெரிக்கப் பரிசோதனையின் ஒருபகுதி மீண்டும் தவறு (AMR 5/089/2010)

- அமெரிக்கா: கியூபா நாட்டினர் ஐவரின் வழக்குகள் (AMR 51/093/2010)

- பதில் சொல்லவேண்டிய கடமை பிரிதொரு கதவு மூடியது: அமெரிக்காவில் நீதித்துறை சொல்கிறது அமெரிக்க உளவுத்துறையின் அரசு வழக்கறிஞர்களுக்கு தண்டனை இல்லை என்று, விசாரணை குறித்து ஒலிநாடாக்கள் அழிக்கப்பட்டன (AMR 51/104/2010)

# கேள்வி கேட்ட நாளந்தா கிராமவாசிகளை அடித்து நொறுக்கிய போலீஸ் ....

–சௌமோஜீத்பேனர்ஜி

**நித்தீஸ் புலன் ஆய்வு அதிகாரிகளையும் இரண்டு காவலர்களையும் தற்காலிகப் பணி நீக்கம் செய்ய உத்தரவு பிறப்பித்தார்.**

## பாட்னா :

மேலும் ஒரு சம்பவத்தில் காவல்துறையின் முரட்டுத்தனம் வெளிப்பட்டது. காவலர்கள், பெண்கள் உள்ளிட்ட பல நபர்களை இரக்கம் சிறிதுமின்றி அடித்துநொறுக்கினர். இது கடந்த வியாழக்கிழமையன்று பீகார் மாநிலத்திலுள்ள நாளந்தா மாவட்டத்தில் நடந்தது.

சமீபத்தில் பஞ்சாயத்து செயலராய் இருந்த இளம்பெண் ரீனாதேவி என்னும் சுஸ்மாகுமாரி காணாமல் போனதைப்பற்றி விசாரித்துக் கேட்க நூர்சராய் காவல்நிலையத்திற்கு முன்பாகக் கூடிய பெரிய கும்பல் ஒன்றுக்கு இங்கனம் நேர்ந்தது.

புலன் ஆய்வு அதிகாரி ரீனாவை கடத்திசென்றவர்களையே பாதுகாத்ததாகக் கூட்டத்தினர் குறை சாட்டியதோடு புலன் ஆய்வு அதிகாரி, காவல் நிலையத்தின் தலைமை அதிகாரி, காவல்துறை உதவிக் கண்காணிப்பாளர் ஆகியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறினர்.

தங்களுடைய வழக்கு சரிவர கையாளப்படாததாகக் கருதிய நாளந்தா கிராமத்தினர், மகமது ரானே DIG மற்றும் மூத்த காவல் அதிகாரிகள் முன்னிலையில் கல்லெறிவதில் ஈடுபட்டதோடு காவல் நிலையச் சொத்துக்களையும் சேதப்படுத்தினர். அரசுக்கு எதிரான வார்த்தைகளையும் பிரயோகித்தனர்.

இதற்கு பதில் கொடுக்கும் முகமாக உள்ளூர்க் காவலர்களை லத்திக்கம்புகளால் பெண்களோடு சேர்த்து அனைவர் மீதும் சராமரியாக அடித்து நொறுக்கினர். அங்கு வந்திருந்த ஊடக காமிராக்கள் இதனைப் படம் பிடித்தன. மிகுந்த அளவில் மக்கள் படுகாயமுற்றதாக சொல்லப்பட்டது.

இதை நேரில் கண்ட நபர்கள் அறிக்கையின்படி கொடுத்த அரை டஜன் காவலர்களுக்கும் மேலானவர்கள் பெண்கள் மீதும் குழந்தைகள் மீதும் வன்முறை செலுத்தினர் என்று தெரிய வருகிறது.

அரைக்கால் சட்டையும், பனியனும் அணிந்திருந்த காவலர்கள் ஈவு இரக்கமின்றி நடுத்தர வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவரை நெற்கதிரை பிரிப்பதற்காக தரையில் மோதி அடிப்பதுபோல் பலமாக அடித்த விதம் அரேரியா மாவட்டத்தில் போர்பெஸ்கனி காவல் நிலையத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டினை நினைவுபடுத்தியது. அங்கு கீழே விழுந்து மாண்டவரின் மேல் ஏறி உதைத்து குத்தியது நினைவு கூறத்தக்கது.

## நீதிமன்ற விசாரணைக்கு ஆணை :

பீகாரின் முதலமைச்சர் நித்தீஸ்குமார், நடந்த சம்பவத்தை தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு புலன் ஆய்வு அதிகாரி மற்றும் இரண்டு காவலர்களை தற்காலிகப் பணிநீக்கம் செய்ய வியாழக்கிழமை மாலை உத்தரவிட்டதோடு நடந்த சம்பவத்தின் மீது நீதிமன்ற விசாரணைக்கும் ஆணையிட்டார்.

இருந்த போதிலும் இந்தச் சம்பவம் உள்ளூர் இந்திமொழி நாளேடுகளில் மிகச்சிறிய இடத்தைத்தான் ஆக்கிரமிக்க முடிந்தது, மாறாக குமார் பற்றிய US காங்கிரசனல் ஆய்வு அறிக்கையைப் பெரிது படுத்தி எழுதியிருந்தன. (US congresonal research Service) இந்தச் சம்பவம் பீகாரில் சமீபத்தில் சிறிய வழக்குகளில் கூட அதிகபட்சமான வன்முறையை மேற்கொண்ட காவல்துறையின் அராஜகங்களில் மேலும் ஒன்றாக எண்ணிக்கையில் கூடியது.

சனிக்கிழமையன்று சங்கர் சௌதிரி என்னும் ரிக்ஷா இழுப்பவர், போலீஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த போது அடித்து நொறுக்கியதில் இறந்து போனார். தாமிரக்கம்பிகளை திருடியதற்காக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தவர், அவர்.

மதியத்தில் காவல்துறையின் சிறைப்படுத்துதல் நிகழ்ந்தது. அன்று மாலையிலேயே அவர் அடைக்கப்பட்டிருந்த அறையில் தூக்கில் தொங்கினார். சௌதிரி உள்ளூரிலுள்ள மருத்துவ மனையில் இனந்தெரியாத நோயினால் இயற்கை மரணம் அடைந்ததாக முதலில் போலீஸ் கூறியது. பின்னர் சௌதிரியின் மனைவி கண்ணீருக்கிடையே பின்வருமாறு கூறினார் “உன் கணவர் பத்திரமாக வீடு திரும்ப வேண்டுமென்றால் ரூபாய் பத்தாயிரம் எடுத்துக்கொண்டு

காவல் நிலையத்திற்கு வரவேண்டும் என்று தனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு காவல் நிலையத்திலிருந்து வந்ததாகக் கூறினார்.

ஊடகங்களில் வந்த செய்திகள் மற்றும் உள்ளூர் வாசிகளின் குமுறலுக்கும் முன்னாள் காவல்துறைக் கண்காணிப்பாளரான ரோக்தாஸ், டெக்ரி காவல்நிலைய 5 காவலர்களை தற்காலிகப் பணி நீக்கம் செய்ய உத்தரவு இட்டபோது இது சம்பந்தமாக ஆழமாக விசாரிக்கவும் உத்தரவிட்டார். போனமாதத்தில் முஷாபூர் மாவட்டத்தில் சில குற்றவாளிகளைத் தேடி நான்கு காவலர்களுடன் வந்த உதவி ஆய்வாளர் ஒரு அப்பாவி தையல்காரரை அடித்துத் துவைத்ததில் பரிதாபமாக உயிர் இழந்தார்.

இந்தக் காவலர்கள் சீருடை அணியாமல் சாதாரண உடை அணிந்து சில குற்றவாளிகளைத் தேடியபோது முகம்மது சம்சுதீன் என்னும் பெயருடைய தையல்காரர் குறுக்கே வந்ததில் இவ்விதம் நிகழ்ந்தது. சீருடை அணியாத காவலர்களைக் குற்றவாளிகளாகத் தவறாகக் கருதி அவர் குறுக்கிட்டதில் உயிர் இழந்தார். நேரில் கண்டவர்கள், சம்சுதீனை காவலர்கள் இரக்கமின்றி கீழே தள்ளி கொடுமையான முறையில் ஏறி மிதித்தார்கள் என்றும், பாய்ந்து பாய்ந்து தாக்கினர் என்றும் கூறினர். படுகாயமுற்ற அவர் காயங்களுக்குப் பலியாகி இறந்து போனார்.

## ஜம்மு காஷ்மீரில் 10 ஆண்டுகளில் 14,000 காவல் நிலைய சாவுகள்

### 2001–2011 காலகட்டத்தில் குறைவான காவல் நிலைய சாவுகள் நடந்தது தமிழகத்தில்: 744

**புது தில்லி:** ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கடந்த 10 ஆண்டுகளில் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காவல் நிலையங்களில் மரணமடைந்திருக்கிறார்கள். ஆசிய மனித உரிமைகள் மையம் (ஏசிஎச்ஆர்) திரட்டியுள்ள புள்ளிவிவரங்களின்படி, இந்த மாநிலத்தில் சராசரியாக ஒரு நாளில் நான்கு பேருக்குக் காவல்நிலைய சாவு நிகழ்ந்திருக்கிறது. 2001 முதல் 2011 வரையிலான கடந்த பத்தாண்டு காலத்தில் மாநில அரசின் காவலில் இருந்த சுமார் 14,000 பேர் மரணமடைந்தனர். காவல்துறை காவலிலும் நீதிமன்றக் காவலிலுமாக சராசரியாக நாள் ஒன்றுக்கு நான்கு பேர் இறந்திருப்பதை ஏசிஎச்ஆர் அறிக்கை வெளிப்படுத்துகிறது. தேசிய மனித உரிமைகள் ஆணையத்திடம் (என்எச்ஆர்சி) ஒப்படைக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, இந்த மாநிலத்தில் காவல்துறை காவலில் 1,504 சாவுகளும், நீதிமன்றக் காவலில் 12,727 சாவுகளும் நிகழ்ந்துள்ளன.


இந்தப் புள்ளி விவரம் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நிகழ்ந்த மோதல்களில் ஏற்பட்ட சாவுகளோடும், மாவோயிஸ்ட்டுகளின் வன்முறையில் இறந்தவர்கள் எண்ணிக்கையோடும் ஒப்பிடத்தக்கதாகும். மத்திய உள்துறை தகவல்களின்படி, ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் மோதல்களில் உயிரிழந்தவர்கள் 15,809 பேர். இந்தப் புள்ளிவிவரத்தில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தோர், பொதுமக்கள், பயங்கரவாதிகள் எனக் கூறப்படுவோர் அடங்குவர். இடது தீவிரவாதம் (நக்சலைட் வாதம்) காரணமாக கொல்லப்பட்டவர்கள் 9,060 பேர். 'இந்தியாவில் சித்திரவதை – 2011' என்ற அறிக்கையை ஏசிஎச்ஆர் வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின்படி 2011ம் ஆண்டில் மிக அதிகமாகக் காவல் நிலையச் சாவுகள் நடந்திருப்பது மஹாராஷ்டிரா மாநிலத்தில்தான். அங்கே 250 பேர் காவல் நிலையங்களில் இறந்திருக்கிறார்கள். அதற்கடுத்தபடியாக உத்தர பிரதேசம் (174), குஜராத் (134), ஆந்திரா (109), மேற்கு வங்கம் (98).

“காவல் நிலையங்களில் ஏற்படும் சாவுகளில் 99.99 சதவீதம் வரையில் சித்திரவதைகளாலும், காவலில் வைக்கப்பட்ட 48 மணி நேரத்திற்குள்ளாகவும் நிகழ்கின்றன என்று கூற முடியும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, உத்தர பிரதேச மாநிலத்தின் மக்கள் தொகை 199 மில்லியன். மஹாராஷ்டிராவின் மக்கள் தொகையோ 112 மில்லியன்தான். இருந்தபோதிலும், உத்தர பிரதேசத்தை விட 76 பேர் கூடுதலாக மஹாராஷ்டிரா காவல் நிலையங்களில் இறந்திருக்கிறார்கள். இது, உத்தர பிரதேசத்தை விடவும் மஹாராஷ்டிரா காவல் நிலையங்களில் சித்திரவதை சர்வசாதாரணமாக நிகழ்கிறது என்பதையே காட்டுகிறது,” என்கிறார் ஏசிஎச்ஆர் இயக்குநர் சுஹாஸ் சக்மா. இந்தப் பத்தாண்டு காலத்தில் நீதிமன்றக் காவலில் நடந்த மொத்த சாவுகள் எண்ணிக்கை 12,727. இதில் முதலிடம் வகிப்பது உத்தர பிரதேசம் – 2,171. அதற்கடுத்ததாக வருவது பீஹார் –1,512. மஹாராஷ்டிரா – 1,176. ஆந்திரா 1,037. தமிழ்நாடு – 744. மோதல்கள் மிகுதியாக நடைபெறும் ஜம்மு காஷ்மீர், மணிப்பூர் போன்ற மாநிலங்களில் இருந்து பெறப்பட்டுள்ள காவல்துறை காவல் சாவு எண்ணிக்கை விவரங்கள் நிலைமையின் ஆழத்தைப் பிரதிபலிப்பதாக இல்லை என்று சக்மா சுட்டிக்காட்டுகிறார். 2001–02 முதல் 2010–11 வரையிலான பத்தாண்டு காலத்தில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் காவல்துறை காவலில் 6 சாவுகள் மட்டுமே நிகழ்ந்ததாக தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் பதிவாகியுள்ளது. இதே காலகட்டத்தில் மணிப்பூர் மாநிலத்தில் காவல்துறை காவலில் 2 பேர் மட்டுமே இறந்ததாகப் பதிவாகியுள்ளது.

**ஆதாரம்:** டைம்ஸ் ஆப் இண்டியா – 22.11.2011

# நீதித்துறை நடுவரின் அதிகாரங்கள்

- அனைத்து காவல் நிலையங்களையும், சிறைகளையும், பிற காவல் நிறுவனங்களையும் எந்த நேரத்திலும் சோதனை செய்யும் உரிமை எல்லா நடுவர்களுக்கும் உண்டு. (சுனில் பாத்ரா எதிர் டில்லி சிறை நிர்வாகம் II AIR 1980 SC 1579 at PP 1598 /99 என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய நெறிமுறைகள்.)
- தனக்கு முன்பாகவோ, தனது அதிகார எல்லையிலோ குற்றம் நிகழ்ந்தால் குற்றம் செய்த நபரைக் குற்றவியல் நடுவர் தாமாகவோ, அல்லது பிறரைக் கொண்டோ கைது செய்ய உத்திரவிடலாம். (பிரிவு 44 குற்றவியல் நடைமுறைச்சட்டம்)
- குற்றவியல் நடுவர் காவலில் இருக்கும் ஒருவரின் வேண்டுகோளை ஏற்று அவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உத்திரவிடவேண்டும். (பிரிவு 54 குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- குற்றவியல் நடுவரின் ஆணையின்றி, குற்றம் சாட்டப்பட்டவரை 24 மணி நேரத்திற்கு மேல் காவல் துறை அதிகாரி ஒருவர் தனது காவலில் வைத்திருக்கக் கூடாது. (பிரிவு 57 குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- கைது செய்யப்பட்ட நபர்களின் விபரங்கள் அனைத்தையும் காவல் நிலைய பொறுப்பிலிருக்கும் அதிகாரி குற்றவியல் நடுவருக்கு கட்டாயமாகத் தெரிவிக்க வேண்டும். (பிரிவு 58, குற்றவியல் நடைமுறைச் சட்டம்).
- காவல் துறை அதிகாரியால் கைது செய்யப்பட்ட எந்த ஒரு நபரையும், அவரது உறுதிமுறியோ (bond), பிணையோ அல்லது குற்றவியல் நடுவரின் சிறப்பு ஆணையோ இன்றி விடுவித்தல் கூடாது. (பிரிவு 59, குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- எந்த ஒரு நபரும் தவறாக சிறை வைக்கப்பட்டிருந்தால் அவரைத் தேடுவதற்கு சோதனை ஆணை வழங்கும் அதிகாரமும் அவ்வாறு வழங்கப்பட்ட ஆணையால் அந்நபர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரை உடனடியாக குற்றவியல் நடுவர் முன்பு ஆஜர்படுத்த வேண்டும். (பிரிவு 97, குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- ஒரு பெண்ணோ, பெண் குழந்தையோ கடத்தப்பட்டு, சட்டத்திற்குப் புறம்பாகக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தனக்கு அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் குற்றவியல் நடுவர், அவர்களை உடனடியாக மீட்டு, அவர்தம் விருப்பம் போல் செயல்படுவதற்கான ஆணையை வழங்கலாம். (பிரிவு 98, குற்றவியல் நடைமுறைச்சட்டம்)
- மனைவி, குழந்தைகள், பெற்றோர் மற்றும் சார்ந்துள்ளோருக்கு வாழ்க்கைப் பொருளுதவி வழங்குவதற்கான ஆணையைக் குற்றவியல் நடுவர் வழங்கலாம். (பிரிவு 125, குற்றவியல் நடைமுறைச்சட்டம்)
- எந்த ஒரு ஆற்றிலோ, வாய்க்காலிலோ அல்லது ஒரு பொது இடத்திலோ சட்டத்திற்குப் புறம்பாக தடுப்பு கட்டப்பட்டிருப்பதாகக் காவல் துறையினரிடமிருந்து குற்றவியல் நடுவருக்கு அறிக்கை வழங்கப்பட்டால் குற்றவியல் நடுவர் அச்சாட்சியத்தைப் பதிவு செய்து அத்தடுப்பை நீக்க உத்திரவிட வேண்டும். (பிரிவு 133, குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய வழக்கில் விசாரணைக்கு உத்திரவிடவும், அது குறித்து விசாரணை மேற்கொள்வதற்கு ஏதுவாக காவல் துறையினரை தனக்கு அறிக்கை சமர்ப்பிக்க உத்திரவிடும் அதிகாரமும் குற்றவியல் நடுவருக்கு வழங்கப்பட்டுள்ளது. (பிரிவு 156, குற்றவியல் நடைமுறைச்சட்டம்)
- தனது விசாரணையின் போது, பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலத்தையோ, கூற்றையோ பதிவு செய்து, அவை தன்னிச்சையாக வழங்கப்படுகிறதா என்பதை குற்றவியல் நடுவர் உறுதி செய்யலாம். (பிரிவு 164, குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- 60 திலிருந்து 90 நாட்களுக்குள் காவல் துறையினர் இறுதி அறிக்கையைக் (குற்றப் பத்திரிகையை) காவல் துறையினர் நீதிமன்றத்திற்கு வழங்கவில்லை என்றால் குற்றவியல் நடுவர் குற்றம் சாட்டப்பட்டவரைப் பிணையில் விடுவிக்கலாம். (167 குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- ஒரு வழக்கின் விசாரணைக்கு உதவி புரிய, காவல் துறையினரின் அனைத்து ஆவணங்களையும் குற்றவியல் நடுவர் ஆய்வு செய்யலாம். (பிரிவு 172 குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- ஒரு நபரின் இறப்பிற்கான காரணத்தில் சந்தேகம் ஏற்பட்டாலோ, திருமணமாகி 7 வருடத்திற்குள் ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டாலோ குற்றவியல் நடுவர் விசாரணை மேற்கொள்ள முடியும். (பிரிவு 174 குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- ஒரு நபர் காவல் துறையினரின் காவலில் மரணம் அடைந்தால், குற்றவியல் நடுவர் விசாரணை மேற்கொண்டு சாட்சியம் பதிவு செய்ய வேண்டும். இறந்த நபரின் உறவினர்களை அவ்விசாரணையில் அனுமதிக்க வேண்டும். இதில் கைது / கைது குறிப்பு வழங்குதல் ஆகியவை குறித்து டி.கே.பாசு எதிர் மேற்கு வங்கம் என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளவையும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். (பிரிவு 176 குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- ஒரு குற்றம் குறித்து எந்த ஒரு நபரிடமிருந்தும் பெறப்பட்ட புகாரின் அடிப்படையிலோ, காவல் துறையினரின் அறிக்கையின் அடிப்படையிலோ அல்லது தானே அறியும் போதோ குற்றவியல் நடுவர் அக்குற்றத்தின் மீது விசாரணை மேற்கொள்ளலாம். (பிரிவு 190 குற்றவியல் நடைமுறைச்சட்டம்)
- விசாரணைக்குப் பிறகு தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் குற்றவியல் நடுவர் குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றத்தை வரையறை செய்து அதை அவருக்கு விளக்க வேண்டும். (பிரிவு 240 குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- பதிவு செய்யப்பட்ட சாட்சியத்தின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர் மீதான வழக்கு நிரூபணம் செய்யப்படவில்லை என்றால் அவரை குற்றவியல் நடுவர் குற்றத்திலிருந்து விடுவிக்க முடியும். (பிரிவு 245 குற்றவியல் நடைமுறைச் சட்டம்)



SWIATOSLAW SPASSKI / Russia


- தனது வழக்கை நீதிமன்றத்தில் வழி நடத்த இயலாத நிலையில் உள்ள குற்றம் சாட்டப்பட்டவருக்கு, அரசின் செலவில் இலவச சட்ட உதவி மூலம் வாதுரைக்க ஒரு வழக்குரைஞரைக் குற்றவியல் நடுவர் ஏற்பாடு செய்ய வேண்டும். (பிரிவு 304 குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- குற்றம் சாட்டப்பட்ட நபர் மனநிலை சரியில்லாமல் இருப்பதைக் குற்றவியல் நடுவர் கண்டறிந்தால் குற்றவியல் நடுவர் – வழக்கை பிரிதொரு நாளைக்கு தள்ளி வைத்து ஒரு மருத்துவரைக் கொண்டு அந்நபரை பரிசோதனை செய்யவும், அவரது பாதுகாப்பிற்கு உத்திரவாதம் வழங்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். (பிரிவு 328 குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- காவல் துறை அதிகாரியால் தகுந்த காரணங்கள் இன்றி கைது செய்யப்பட்ட நபரின் நேரத்தை வீணாக்கியதற்கும், அவரது பண இழப்பிற்கு இழப்பீடு வழங்கவும், அதைப் புகார்தாரரிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் குற்றவியல் நடுவர் உத்திரவிடலாம். (பிரிவு 358 குற்றவியல் நடைமுறைச் சட்டம்)
- இறக்கும் நிலையிலிருக்கும் நபரிடமிருந்து பெறப்பட்ட மரண வாக்குமூலத்தைக் குற்றவியல் நடுவர் பதிவு செய்யலாம். (பிரிவு 32, இந்திய சாட்சியச் சட்டம்)

**காவல்நீதி மற்றும் சித்ரவதை ஒழிப்புப் பிரச்சாரம்**
**Campaign for Custodial Justice & Abolition of Torture**

6

**தொடர்பு முகவரிகள்:**
**அமைப்பாளர்: ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிறுவனம்,** எண்.11, கமலா, 2வது தெரு, சின்னசொக்கிக் குளம், மதுரை – 625 002, தொ.பே. 0452–2530486
**செயலகம்: மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு,** எண்.10, எல்.டி.ஜி. ரோடு, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. இந்தியா
தொ.பே.044–22353503, தொ.நகல். 22355905, E-mail : humanrightsfoundation@yahoo.co.in Website : www.humanrightsadvocacyandresearchfoundation.org

For Private Circulation Only



*Education Material Published on behalf of*

*Campaign for Custodial Justice & Abolition of Torture by*

**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

# 10, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, INDIA.

☎ 22353503, 22351919 Fax : 22355905, E-mail : humanrightsfoundation@yahoo.co.in

website : www.humanrightsadvocacyandresearchfoundation.org